# உதயன்

31 °C|°F
தெளிவான வானம்

சுடர் 30 | கதிர் 281 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆவணி 17, வியாழக்கிழமை 03.09.2015


# சர்வதேச விசாரணை கோரும் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரா?

## கொதித்தெழுகிறது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

கொழும்பு, செப்.3
இலங்கைக்கு எதிராகச் சர்வதேச விசாரணை கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்குவதா என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் அந்தக் கட்சி வடக்கு-கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்தியக் கட்சி எனவும் அவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.
மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து எதிர்க்கட்சி வரிசையிலுள்ள 14 நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
கடந்த ஓகஸ்ட் 17 பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் 2 போனஸ் ஆசனங்களுடன் 16 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றில் மூன்றாவது பெரும்பான்மை பெற்ற கட்சியாக உள்ளது. எனினும் முதலிரண்டு இடங்களையும் பெற்ற ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகியன தேசிய அரசு அமைப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நாடாளுமன்றில் எதிர்க் கட்சி அந்தஸ்து கிடைத்தது.

பக்கம் 24.....

## விபத்துகளில் பொதுமகனும் சிப்பாயும் சாவு

யாழ்ப்பாணம், செப். 3
வெவ்வேறு வாகன விபத்துகளில் அகப்பட்டுப் பொதுமகனும் இராணுவச் சிப்பாயும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிறிது நேரத்தில் இருவரும் உயிரிழந்தனர்.

பக்கம் 24.....

## மின்னல் குழுவின் நால்வர் நேற்று மடக்கிப் பிடிப்பு

வடமராட்சி ,செப்.3
வடமராட்சி வதிரிச் சந்திப் பகுதியில் பெண்களுடன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்ளும் மின்னல் குழுவின் அங்கத்தவர்கள் என்ற சந்தேகத்

பக்கம் 24.....

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி வெல்கமவுக்கே வேண்டும்

*மகிந்த அணியினர் மைத்திரிக்கு தொல்லை மேல் தொல்லை*

கொழும்பு, செப்.3
களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இது தொடர்பில் கோரிக்கை விடுத்து அவர்கள் நேற்றுமுன்

பக்கம் 24.....

## ஐ.நா. அறிக்கை வரட்டும் நடவடிக்கை எடுப்போம்

*மகிந்த சூசகமாகப் பதில்*

கொழும்பு, செப்.3
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான ஜெனிவா அறிக்கை வெளிவரும்போது, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பக்கம் 24.....

## புதிய அமைச்சரவை நாளை பதவியேற்பு

கொழும்பு, செப்.3
புதிய அமைச்சர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்பார்கள் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.
இதில் 45 அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சர்களில் 33 அமைச்சுப் பதவிகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் 12 அமைச்சுக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் வழங்

பக்கம் 24.....

# ஜெயக்குமாரி மீண்டும் கைது

## கெப்பிற்றிக்கொலாவ நீதிமன்றில் நேற்று முன்னிலையானவேளை



யாழ்ப்பாணம், செப். 3
அநுராதபுரம் கெப்பிற்றிக்கொலாவ நீதிமன்றத்துக்குச் சென்ற ஜெயக்குமாரி .நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த மார்ச் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றைய தினம் அவர் மீளவும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பக்கம் 24.....

# இந்தியா விரையும் ரணில் மோடியுடன் முக்கிய பேச்சு

புதுடில்லி, செப்.3
பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்த மாதம் இந்தியாவுக்கு மேற்கொள்ளவுள்ளார். பிரதமரின் புதுடில்லிப் பயணத்துக்கான திகதியை ஒழுங்கு செய்யும் பணியில் இரு நாடுகளின் இராஜதந்திர அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
ரணில் விக்கிரமசிங்கவின் பயண நாள்கள் தொடர்பான விவரங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள இந்தியாவின் மூத்த இராஜதந்திரி ஒருவர், அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் இந்தப் பயணம் இடம்பெறக் கூடும்

பக்கம் 24.....

# மோடியை டில்லியில் சந்திக்கிறார் சந்திரிகா

புதுடில்லி, செப்.3
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
புதுடில்லியில் நடக்கவுள்ள சர்வதேச இந்து–பௌத்த மாநாட்டின் பிரத்தியேக நிகழ்வாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சர்வதேச இந்து–பௌத்த மாநாடு இன்று ஆரம்பமாகி நாளைமறுதினம் வரை நடைபெறவுள்ளது.

பக்கம் 21.....

# சர்வதேச விசாரணை கோரி 10 லட்சம் கையெழுத்து

## வவுனியாவில் நேற்று ஆரம்பம்



வவுனியா, செப் 3
இறுதிப் போரில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசார ணையே வேண்டும் என வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினால் 10 லட்சம் மக்களிடம் கையெழுத்து பெறும் நிகழ்வு நேற்று வவுனியாவில் ஆரம்பமானது.
நேற்று பிற்பகல் 3மணிக்கு வவுனியா வைரவப் புளியங் குளத்தில் முத்தையா மண்டபத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவமோகன், வடமாகாணசபை உறுப்

பக்கம் 21.....

# பரீட்சை எழுதச் சென்ற மாணவன் விபத்தில் சாவு

## மற்றொரு மாணவன் படுகாயம்



முல்லைத்தீவு, செப். 3
முல்லைத்தீவு, துணுக்காய் பகுதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் உயர்தரப் பரீட்சைக்கு சென்ற மாணவன் ஒருவன் சாவடைந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலை

பக்கம் 24.....

# போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் சர்வதேச தீர்ப்பாயம்

## தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய 3 கட்சிகள் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு மனு

யாழ்ப்பாணம், செப். 3
உள்ளக விசாரணை அல்லது சர்வதேசப் பொறிமுறையுடன் கூடிய உள்ளக விசாரணைக்கு மாறாக, இலங்கை தொடர்பான விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைத்து அல்லது பொறுப்புக்கூறலுக்கான ஒரு சர்வதேச பொறிமுறையை உருவாக்கி அல்லது போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கான சர்வதேச தீர்ப்பாயத்தை அமைப்பதற்கோ நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைனுக்கு, தமிழ்த் தேசியக் கூட்ட

பக்கம் 24.....

# தமிழரின் உரிமைப் பிரச்சினை சம்பந்தனால் சுருங்கிவிடுமோ?

## அச்சப்படுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், செப். 3
தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகச் சென்ற அமிர்தலிங்கம் இறுதியில் மாவட்ட சபைக்கு இணங்கிச் சுருங்கியது போல், தற்போது இரண்டாவது தடவையாகவும் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் சென்று, சர்வதேச விசாரணை – சர்வதேச மயப்பட்ட தமிழர் உரிமைப் பிரச்சினை என்பன சுருங்கி விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அது

பக்கம் 21.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் மௌனத்தை சாதகமாக்குகிறது இலங்கை

## இந்திய தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவிப்பு

சென்னை, செப்.3

இலங்கை கடற்படையினரால் நடத்தப்படும் இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் மற்றும் கைதுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசு கடுமையான வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று இந்திய தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கருப்பூர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் களை சந்தித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இந்தியாவின் ஜகதாப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டமையை தாம் வன்மையாக கண்டிப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியா மௌனம் காத்து வருவதனை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் இலங்கை கடற்படை அவர்களை நடுக்கடலில் வைத்து தொல்லை கொடுத்து வரு கின்றது என்று குறிப்பிட்ட அவர், மீன்பிடி உரிமை குறித்து இரு நாடுகளுக்கும் இடையில் கடுமையான, முறையான ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ற)

## ஒலுவிலில் கடலரிப்பு அபாயம்: நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

அம்பாறை, செப்.3

ஒலுவில் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் கடலரிப்பின் தீவிரம் அதிகரித்துள்ள நிலையில் அங்குள்ள மகாபொல தொழில் பயிற்சி நிலைய கட்டடங்கள் கடலரிப்பினால் பாதிப்படைந்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒலுவில் பிரதேசத்தில் துறைமுக நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, அந்தப் பகுதியினை அண்மித்த நிலப்பரப்புகள் கடலரிப்பால் மிகக் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

கடலரிப்பின் காரணமாக, ஒலுவில் கடற்கரையை அண்டியிருந்த நூற்றுக் கணக்கான தென்னந்தோட்டங்கள் அழிவடைந்துள்ளதோடு, கரையிலிருந்து நூறு மீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கியுள்ளது.

கடலரிப்பினைத் தடுக்கும் நோக்குடன் கடலுக்குள் பாறாங்கற்கல் கொட்டப்பட்டு, அலைகளின் வேகத்தினைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதிலும், கடலரிப்பின் தீவிரம் குறைவடையவில்லை.

ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டுவரும் கடலரிப்பினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, இப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அரசில்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் பல்வேறு தடவை கோரிக்கை விடுத்துள்ள போதிலும், அவை தொடர்பில் திருப்திகரமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், கடலரிப்பின் தீவிரம் அதிகரித்துள்ளதால், துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஒலுவில் மகாபொல தொழில் பயிற்சி நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டடங்களும் தற்போது பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

கடற்கரையில் அமைந்துள்ள அல்மினாரா வித்தியாலயக் கட்டடங்களை அண்டிய நிலப்பகுதிகளும் கடலரிப்புக்குள்ளாகி வருகின்றன.

எனவே, ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள இந்தக் கடலரிப்பினை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை, இனியாவது மேற்கொள்வதற்கு, உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

## குறுந்திரைப்படப் போட்டி

சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் குறுந்திரைப்படங்கள் தயாரித்தல் தொடர்பான போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது என்று வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சி.திருவாரகன் தெரிவித்தார்.

குறித்த குறுந்திரைப்படங்கள் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகள் , விதவைகள் தொடர்பான சமூகப் பார்வையும் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்களும் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அமையவேண்டும் எனவும் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து முதற்கட்டமாக சிறந்த கதையம்சங்களை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறந்த கதையம்சமுடைய எழுத்தாக்கங்கள் போட்டித் தெரிவின் அடிப்படையில் தேர்வு செய்யப்படவுள்ளன. குறித்த எழுத்தாக்கங்கள் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த எழுத்தாக்கத்திற் குரிய கலைஞர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் அதனை குறும்பட மாகத் தயாரித்து தரப்படும் கால அவகாசத்துக்குள் ஒப்படைக்க வேண்டும் எனவும் சிறந்த குறுந் திரைப்படங்களுக்கு பெறுமதி யான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர் குறித்த குறும்படங்கள் 10–15 நிமிடங்களுக்கு அதிகரிக்காமல் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ற–10)



முல்லைத்தீவு மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான சிறுபோக அறுவடைகள் நிறைவுற்றதை அடுத்து நெல்லைச் சந்தைப்படுத்துவதற்காக முல்லைத்தீவு–மாங்குளம் வீதியில் அமைந்துள்ள நெல் சந்தைப்படுத்தல் சபையின் காரியாலயம் முன்பாக விவசாயிகள் நெல் ஏற்றிய வாகனங்களுடன் காத்திருக்கின்றனர்.(ற–101)

# புலனாய்வுத் துறையினரை தாரைவார்க்க வேண்டாம்

## இப்படிக் கோருகின்றது பொது பல சேனா

கொழும்பு, செப்.3

காணாமற்போன ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொடவின் சம்பவத்தை முன்னிலைப்படுத்தி இந்த நாட்டின் புலனாய்வுத் துறையை தாரைவார்க்க வேண்டாம் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலத்தில் மிலேனியம் சிட்டி சம்பவம் தொடர்பில் 2002 ஆம் ஆண்டும் இதேபோன்று புலனாய்வுத் துறையினர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அதனால், நாட்டின் புலனாய்வுப் பிரிவு பெரும் வீழ்ச்சியைச் சந்தித்ததுடன், அத்துறையைச் சேர்ந்த பலர் கொலை செய்யப்படவும் இது காரணமாகியது.

புலனாய்வுத் துறையை வெளிப்படுத்துவதன் மூலம் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதுடன், தமிழ் பிரிவினைவாதமும், ஐ.எஸ். பயங்கரவாதமும் ஊடுருவுவதுடன் புலனாய்வுத் துறை செயலிழந்து செல்லவும் வழி வகுக்கும். – என்றார். (ற)

## பால் புரையேறி சிசு சாவு

பிறந்து ஏழு நாள்களான ஆண் சிசு ஒன்று இறந்த நிலையில் நேற்று வவுனியா பொது வைத்திசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதவாச்சி பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த தம்பதிக்கு கடந்த வாரம் ஆண் குழந்தை பிறந்துள்ளது. பிறந்து ஏழு நாள்களான நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பரிசோதனை மேற்கொண்ட வைத்தியர் பால் கொடுக்கும்போது புரையேறியுள்ளதால் குழந்தை உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ற)

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் பதவி விண்ணப்பம் மீளப் பெறப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் பதவிக்குக் கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரனால் விண்ணப்பம் கோரப்பட்டமைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் விண்ணப்பம் கோரலை மீளப் பெறுவ தாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அது தொடர்பான வழக்கு முடி வுக்குக் கொண்டு வரப்பட்டது. பாடசாலையின் தற்போதைய அதிபரால் குறித்த அதிபர் பதவி விண்ணப்பத்தை இடைநிறுத்தும் எழுத்தாணை விண்ணப்பம் ஒன்று யாழ். மேல்நீதிமன்றில் சட்டத்தரணி மூலமாகத் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான விசாரணையின் போதே குறித்த வழக்கு முடிவுறுத்தப்பட்டது.

குறித்த பாடசாலையில் அதிபர் பதவியில் இருக்கும் போது அவர் இடமாற்றம் செய்யப்படாதுள்ள நிலையில், இடமாற்றம் செய்யவேண்டிய தேவை ஏற்படாதுள்ள நிலையில் அந்தப் பாடசாலையின் அதிபர் பதவிக்கு செயலாளர் ரவீந்திரன் விண்ணப்பம் கோரியிருந்தார். அதனால் அந்த விண்ணப்பம் கோரலை தடை செய்யக் கோரியே பாடசாலையின் தற்போதைய அதிபரால் எழுத்தாணை விண்ணப் பம் தாக்கல் செய்யப்பட்டது. யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பான விசாரணை நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது எதிர்மனுதாரர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி வழக்குடன்சம்பந்தப்பட்ட விண்ணப்பம் கோரலை மீளப் பெறுவதாக நீதிமன்றில் தெரிவித்தார். அதனையடுத்து குறித்த வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் எனவே வழக்கை மீளப் பெறுவதாகவும் மனுதாரரின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார். இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி குறித்த வழக்கைத் தள்ளுபடி செய்வதாகத் தெரிவித்தார். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் கடும் வறட்சி சுமார் 21,000 பேர் பாதிப்பு

திருகோணமலை, செப்.3
திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியால் 6 ஆயிரத்து 229 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 21 ஆயிரத்து 306 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 11 பிரதேச செயலர் பிரிவுகளில் கந்தளாய் தவிர்ந்த 10 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

தொடரும் வறட்சியால் கிணறுகள், குளங்கள் வற்றும் நிலைக்குச் சென்றுள்ளதால் குடி தண்ணீருக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பட்டணமும் சூழலும் வெருகல், சேருவில, மூதூர், கிண்ணியா ஆகிய பிரதேசங்களே வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன என்று இனங்காணப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசங்களில் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இடர்முகாமைத்துவ அமைச்சு 3.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

10 செயலாளர் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் ஊடாக குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடுதண்ணீர் பிரச்சினையில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களாக கன்னியா, வில்கம் விகாரை, கப்பல்துறை, பாட்டாளிபுரம், நவரட்ணபுரம், கூனித்தீவு, குச்சவெளி, புல்மோட்டை ஆகி யன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## யாழ். சிறுமி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், செப்.3
முன்பள்ளி சிறார்களின் சித்திர அறிவையும், ஆற்றல்களையும் வளப்படுத்தும் முகமாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்பட்ட அருண தகின ரடா சித்திரப் போட்டியில் பங்குபற்றி பண்டத்தரிப்பு, புளூமிங் பட்ஸ் டே கேயர் சென்ரர் ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை மாணவி டேமியன் டமியா தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

இவருக்கான சான்றிதழ் மற்றும் பரிசு வழங்கல் நிகழ்வு இன்று காலை 8மணிக்கு (கிரீன் பாத்) புதிய நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ற-ரி2)

## கிழக்கு மாகாண சபையின் வெற்றிடங்களுக்கு விரைவில் புதியவர்கள்

திருகோணமலை, செப்.3
கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 5 பேர் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு விரைவில் புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள் என மாகாண சபைப் பேரவைச் செயலாளர் எம்.சீ.எம்.ஷெரீப் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேர், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேர், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 3 பேர் என மொத்தம் 14 கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர்.

இவர்களுள் அம்பாறையிலிருந்து 3 பேரும், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தலா ஒவ்வொருவருமாக மொத்தம் 5 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுள் அம்பாறையிலிருந்து விமலவீர திசாநாயக்கா எம்.ஐ.எம். மன்சூர் தயா கமகே ஆகிய மூவரும், மட்டக்களப்புமாவட்டத்திலிருநடது அலி சாகிர் மௌலானா மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து இம்ரான் மஹ்ரூப் ஐவரும் பாராளுமன்ற உறுப்பி னர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த 5 பேரும் தமது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பதவி விலகல் கடிதங்களை ஏற்கனவே மாகாண சபைப்பேரவைச் செயலாளரிடம் கையளித்துள்ளனர். இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு தேர்தல் ஆணையாளருக்கு தாம் அறிவித்துள்ளதாக பேரவைச் செயலாளர் எம்.சீ.எம்.ஷெரீப் தெரிவித்தார். (ற)

## 14 வயது சிறுமி துஷ்பிரயோகம்: இளைஞன் கைது

திருகோணமலை, செப்.3
திருகோணமலை மகாதிவுள்வெவ பகுதியில் 14 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மொறவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மகாதிவுள்வெவ பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் சிறுமியை அழைத்து சென்று துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி விட்டு தலைமறைவாகியிருந்த நிலையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் பாதிப்புக்குள்ளான சிறுமி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை திருகோணமலை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளை பொதி செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் 32 வயதுடைய ஒருவரை பாலையூற்றுப் பகுதியில் பொலிஸார் கைது செய்ததுடன், சந்தேக நபரிடமிருந்து ஆயிரத்து 50 மில்லிகிராம் ஹெரோயின் பக்கெற்றுக்களை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## சுகாதார உதவியாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

### நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி தெல்லிப்பழை வைத்தியசாலை முன்றலில்

யாழ்ப்பாணம், செப்.3
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒரு வருடத்துக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வரும் சுகாதார உதவியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி நேற்றுமுன்தினம் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

கடந்த ஜூன் மாதம் அவர்களது ஒப்பந்தம் நிறைவடைந் திருந்த நிலையில், அவர்களுக்கு நியமனம்வழங்கப்படவில்லைஅதையடுத்தே தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி குறித்த சுகாதார உதவியாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி முன்னர் போராட்டம் நடத்தியபோது திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி தொடர்ந்து ஆறுமாதம் பணிபுரிய அனுமதி கிடைத்துள்ளது என்றும், போராட்டத்தை நிறுத்தி கடமைக்குத் திரும்புமாறும் தமக்குக் கூறப்பட்டது. அதனால் தாம் கடமைகளைத் தொடர்ந்ததாகவும் எனினும் குறித்த ஒப்பந்தக்காரர் தமக்கு அது தொடர்பில் எதுவித கடிதங்களும் தரவில்லை எனவும் ஜூன் மாதம் வரை வழங்கிய கொடுப்பனவைத் தொடர்ந்தும் வழங்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது என்றும் குறித்த சுகாதார உதவியாளர்கள் தெரிவித்தனர்.

அதையடுத்தே தமது பணியை தொடரவும் நியமனங்கள் வழங்கக் கோரியும் நேற்றுமுன்தினம் முழு நாளும் வைத்தியசாலை முன்றலில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:–

வைத்தியசாலைச் சுகாதாரத் தேவையை நிறைவேற்ற தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அதன்படியே அவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. கடந்த மாதம் அந்த ஒப்பந்தம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. நியமனம் வழங்குவது தொடர்பில் தமக்கு எந்த அறிவுறுத்தலும் இல்லை –என்றார். (ற-4,36)

## மாகாண சபையில் கேள்வி கேட்க முன் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் பேசுங்கள்

### வடக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அவைத்தலைவர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 3
வடக்கு மாகாண சபையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புவதற்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கேள்விகளை சபையில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அனுப்பிய பின்னரே, சபையில் சமர்ப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது. இதன் போது, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபையின் கூட்டத் தொடரில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கேள்விகளைச் சமர்ப்பிக்க முன்னர் அது தொடர்பில் அமைச்சுக்களிடம் பேசிய பின்னர் சமர்ப்பிக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பின்னணியில் வடக்குமாகாண சபையின் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற அமர்வில், அவைத் தலைவர் அறிவிப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார். கேள்விகளைச் சமர்ப்பிக்கின்ற பொழுது அவற்றை முதலிலே சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடு பேசி அதன் பின்னாலே தேவைப்படின் கேள்விகளை அவைக்குச் சமர்ப்பிக்கலாம். சமர்ப்பித்த கேள்விகளைக் கூட அமைச்சரவையுடன் பேசி அதைச் சபையிலே எடுக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், முதலமைச்சர் உள்ளிட்ட 5 அமைச்சர்களிடம் சரமா ரியான கேட்டிருந்தனர். குறித்த கேள்விகள் அவையில் கேட்கப்படுவதால், பதிலளிக்கவேண்டியகட்டாயம் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களுக்கு இருந்து வந் தது. (ற-5)

## வட்டு. மத்திய கல்லூரிக்கு இரு நாள்கள் விடுமுறை

### அதிபர் இடமாற்றத்தால் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து

யாழ்ப்பாணம், செப்.3
வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு இன்றும் நாளையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராஜா தெரிவித்தார்.

குறித்த பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட அதிபரை மீண்டும் தமது பாடசாலைக்கு நியமிக்கக் கோரி மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலைமையை அடுத்தே விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் எதிர்வரும் திங்கட் கிழமை தொடக்கம் பாடசாலை வழக்கம்போல் செயற்படும் என்றும் தெரிவித்துள்ள கல்விப் பணிப்பாளர் அன்றையதினம் பெற்றோருடனான சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பில் பெற்றோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு அவர்களுக்கு நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிபரை மீண்டும் அதே கல்லூரிக்கு நியமிக்கக் கோரி அந்தக் கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினமும் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டிருந்தது.

அதனால் நேற்று மாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் அங்கு சென்று கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். அதன்பின்னரே பாடசாலையை 2 நாள்களுக்கு மூடுவது உள்ளிட்ட முடிவு எடுக்கப்பட்டதாகவும் பெற்றோருடன் கலந்துரை [illegible] [illegible] பாளர் மேலும் தெரிவித்தார். (ற-4)

## சினிமா படப் பாணியில் பெண்ணை கடத்தியோர் சிக்கினர் பொலிஸிடம்

யாழ்ப்பாணம் செப்.3
வீட்டுக்குள் புகுந்து தந்தையையும் தாயையும் தாக்கி ஓட்டோவில் மகளை கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் நேற்று கோப்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட ஐவரும் நீதிமன்ற உத்தரவின் பெயரில் இம்மாதம் பத்தாம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:–

இணுவில் மேற்கு, இணுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலாலி வீதி, திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த இருபது வயதுடைய பெண்ணொருவரை பல மாதங்களாக காதலித்து வந்துள்ளார். இவர்கள் இருவரும் உறவினர்களாவர். எனினும் பெண் வீட்டில் பெற்றோர் குறித்த காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் தமது மகளை வெளிநாட்டு மாப்பிள்ளையொருவருக்கு மணம்முடித்து வைக்க ஏற்பாடுகளை செய்து வந்துள்ளனர். குறித்த பெண்ணும் இளைஞரை மணமுடிக்க மறுத்துள்ளார்.

அதையடுத்து நேற்று முன்தினம் இளைஞரும் அவருடைய சகோதரரும் தாயாரும் வேறு இரண்டு நண்பர்களுமாக பெண்ணின் வீட்டுக்கு சென்று பெண்ணினுடைய பெற்றோரை தாக்கி விட்டு குறித்த பெண்ணை ஓட்டோவில் கடத்திச் சென்றுள்ளனர். இது தொடர்பில் பெண்ணின் பெற்றோர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

கடத்திச் சென்ற பெண்ணை அன்றைய தினம் திருமணப்பதிவாளரிடம் அழைத்துச் சென்று திருமணப்பதிவை மேற்கொள்ள முயற்சித்த போதும் குறித்த பெண் மறுத்துவிடவே திருமணப்பதிவை மேற்கொள்ள முடியவில்லை. இதனையடுத்து வேறுவழியில்லாது கடத்தியவர்கள் கோப்பாய் பொலிசில் சென்று சரணடைந்துள்ளனர்.

குறித்த ஐவரும் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை இம் மாதம் 10ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தால் குறித்த பெண் முழங்கால் பகுதியில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதி கொலை வழக்கில் தந்தை, மகன் விடுதலை

## குற்றம் நிரூபிக்கப்படாததையடுத்து

யாழ்ப்பாணம், செப்.3

யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கொன்றில் பொலி ஸார் போதிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்காததால், நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றம் நிரூபிக்கப்படாததால் சந்தேகநபர்களான தந்தையும், மகனும் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து யாழ்.மேல்நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

அச்சுவேலியில் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி தவீந்திரதாஸ் கலைச் செல்வி என்பவர் கொலை செய்யப்பட்டார். குறித்த வழக்கு நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது.

குறித்த வழக்கில் யுவதியின் தந்தையான தவீந்திரதாஸ் மற்றும் சகோதரனான கிரிசாந்தன் ஆகியோருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணையில் குறித்த இருவரும் யுவதியைக் கொலை செய்தார்கள் என்பது நியாயமான அளவு சந்தேகத்துக்கு அப்பால் வழக்குத் தொடுநர் நிரூபிக்கத் தவறியுள்ளதால் குறித்த இரண்டு பேரும் குற்றச் சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். (ற-4)

# சர்வதேசத்திடம் இருந்து தப்பவே தேசிய அரசு உருவாக்கப்பட்டது

## சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, செப்.3

ஐக்கிய தேசியக்கட்சியும்,சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்தால்தான் சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளிலிருந்து நாட்டையும், இராணுவத்தையும் பாதுகாக்கமுடியும். அதனால்தான் தேசிய அரசு உருவாக்கப்பட்டுள்ளது." -என்று சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு நெருக்கடிக்குத் தீர்வு வழங்கல், நாட்டின் பொருளாதாரத்தை துரித வளர்ச்சிய டைய செய்தல், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுதல் போன்ற பிரதான நோக்கங்களுக்காக இருகட்சிகளும் ஒன்றிணைந்து குறுகிய காலமேனும் ஆட்சியமைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய நாடாளுமன்றத்தின் சபை முதல்வராக நியமிக்கப் பட்டுள்ள லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

"இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நாட்டினுள் விசாரணை மேற்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, ஐக்கிய நாடு கள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கிய உறுதிமொழியை செயற்படுத்தாததன் காரணமாகவே தற்போது சர்வதேச மட் டத்தில் அழுத்தங்கள் எழுந்துள்ளன. இந்நிலையில், சர்வதேசத்தில் இலங்கைக் கெதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் உட்பட நாட்டின் முக்கியமான பல்வேறு பிரச்சினைகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்து பதிலளிக்க வேண்டியுள்ளது. அதனால்தான் தனி அரசு அமைக்கவில்லை"- எனத் தெரிவித்துள்ளார். (ற)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிப்பது வரவேற்கத்தக்கது

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கூறுகின்றது

யாழ்ப்பாணம், செப். 3

நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பதவியேற்றிருப்பதன் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்க முன்வந்திருப்பதை வரவேற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அர்த்தமற்ற பகைமையுணர்வை கொட்டித் தீர்ப்பதன் மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டு விடமுடியாது. யாருடன் பேசி எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியுமோ அவர்களுடன் எமது மக்கள் சார்பாக கைகுலுக்கி பேசியே தீரவேண்டும். அரசில் அங்கம்வகிப்பதன்ஊடாகஎமது மக்களுக்கான அரும் பெரும் பணிகளை ஆற்றமுடியும். அரசியல் தீர்வுக்கும் வித்திட முடியும்.

கடந்த காலங்களில் போதிய அரசியல் பலம் இன்றியே நாம் அரசில் அங்கம் வகித்து, ஆற்ற முடிந்த பணிகளை எமது அரசியல் பலத்துக்கு ஏற்றவாறு ஆற்றியிருக்கின்றோம்.

இன்று எமது வழி முறையை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயலாற்ற முன் வந்திருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

கடந்த காலங்களில் நாம் விடுத்த பகிரங்க அழைப்பை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அன்றே இதே வழிமுறைக்கு வந்திருந்தால் எமது மக்களுக்கு என்றோ விமோசனம் கிடைத்திருக்கும். காலம் கடந்தாவது எமது நடைமுறை யதார்த்த வழிமுறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஏற்றிருக்கின்றது.

ஏற்றுக் கொண்ட வழிமுறை மீது உண்மையுள்ளவர்களாகவும் விசுவாசம் மிக்கவர்களாகவும் செயலாற்றி நடைமுறையிலும் தம்மை அடையாளப்படுத்த வேண்டும் – என்றுள்ளது. (ற-5)

# நாடகம் என்பது ஆற்றுகையாக இருந்தாலும் பார்ப்பவர்களையும் பாத்திரமாக்கி விடுகின்றது

## செயற்றிறன் அரங்க இயக்கத்தின் நாடகத் திருவிழாவில் யாழ். பல்கலை முன்னாள் பேராசிரியர் வி.பி சிவநாதன் கருத்து

யாழ்ப்பாணம், செப். 3

நாடகம் என்பது ஆற்றுகைக் கலையாக இருந்தாலும் அதை பார்க்கும் பார்வையாளர்களையும் அதில் ஒரு பாத்திரமாக மாற்றி விடுகின்றது. அந்த வகையில் செயற்றிறன் அரங்க இயக்கத்தால் நடத்தபடுகின்ற இந்த நாடகங்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளன என்றே நான் கருதுவேன் என்று தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக முன்னாள் பேராசி ரியர் வி.பி சிவநாதன்.

நல்லூர் பாணன் குளத்தடியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்க நிலையத்தில் நடைபெற்று வரும் நாடகத்திருவிழாவில் நேற்று நடைபெற்ற 4ஆவது நாடகத் திருவிழா வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடக ஆற்றுகை செய்பவர்கள், அதைப் பார்க்கின்ற பார்வையா ளர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நாடகத்தில் பங்கு கொள்கின்ற நிகழ்வு தற்போது தான் காணப்படுகின்றது. அவ்வாறான கலை வடிவத்தை யாழ்ப்பாணத்திலே தந்த எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஈழத்து நாடகத்தின் தந்தை குழந்தை ம.சண்முகலிங்கத்துக்கு நன்றிகூறகடமைப்பட்டிருக்கின்றேன்.

அவரோடு அவரது நடவடிக்கைகளைஉற்று அவதானித்து அவற்றைப் பின்பற்றி நாடகங்களைத் தயாரித்து வருபவர்தான் தே.தேவானந்த். அவருடைய நாடகங்களின் தொடர்ச்சியை பார்த்தால் மேலும் மேலும் செம்மை பெற்று உண்மையில் பெருமையாகச் சொல்லக் கூடிய அளவுக்கு அவரது கலைப் படைப்புக்கள் அமைந்திருக்கின்றன.

ஒரு நாடகம் என்பதற்கும் சினிமா என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன இங்கு வரும் சிறுவர்கள் அரங்க நிகழ்வுக்கும், தொலைக்காட்சிக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கண்டறிவதற்கு அவர்களுக்குப் புரியக்கூடிய வகையிலே அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமாக இருந்தால் இங்கே நடைபெறப் போகின்ற பஞ்சவர்ண நரியார் போன்ற நாடகங்கள் தான் அவர்களை இங்கே அரங்குக்கு அழைத்திருக் கின்றது. தொலைக்காட்சி பெட்டி யில் நாங்கள் சமுத்திரத்தை பார்க்க முனைந்தால் அப்போது எங் களுக்கு மனதிலே எழுகின்ற உணர்வை விட நேரடியாகப் பார்க்கின்ற போதுள்ள உணர்வு பெருமளவு மாறுபடும். நேரில் பார்க்கும் போது உள்ள குதூகலம் தொலைக் காட்சியில் காட்டும் போது ஏற்படுவதே இல்லை.

இந்த உண்மைத் தன்மையை இந்தக் கலை வடிவத்தின் ஊடாக அவர்களைஉண்மைக்கலைஎது என்பதை அறிய வைப்பதற்கு தமிழர் பகுதியை பொறுத்த வரையில், அல்லது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இந்த செயற்றிறன் அரங்க இயக்கம் என்பது அரும்பாடுபட்டு வருகின்றது. அதனுடைய செயற்பாடுகள் மிகவும் உன்னதமானவை. இவ்வாறு எப்போதும் சிறுவர்களை மகிழ்விக்கும் அரங்கான இது இனியும் மிகப்பெரும் வளர்ச்சி பெற்று சிங்களப் பகுதிகளில் ஒரு அரங்கில் நாடகங்களைப் பார்ப்பதற்காக பார்வையாளர்கள் முட்டி மோதுவது போல் இங்கேயும் பார்வையாளர்கள் இன்னும் அதிகரிக்கும் நிலை ஏற்பட வேண்டும்– என்றார்.(ற-21)

# தென்னிலங்கை மீனவர் அத்துமீறலை கண்டித்து வடமராட்சியில் கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், செப்.3

வனஜீவராசி அலுவலர்களால் தமது காணிகள் அபகரிக்கப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை நிறுத்துமாறு கோரியும் வடமராட்சி கிழக்கு மக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று முற்பகல் அவர்கள் இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வீதிப்புனரமைப்புச் செய்து தருமாறும், வடமராட்சி பகுதி கடலில் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியினை நிறுத்துமாறும், சுண்டிக்குளத்தில் மீள்குடியமர்வை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்திய சுலோக அட்டைகளை கைகளில் ஏந்தியவாறு அவர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அந்த பகுதியில் உள்ள வன ஜீவராசி அலுவலர்கள் கேவில் பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவரை முகத்தில் செருப்பால் அடித்துத் துன்புறுத்தினர் என்று குற்றஞ்சாட்டியதுடன், குறித்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழ் தேசிய மக்கள் முண்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் பருத்தித்துறை, சுண்டிக்குளம் மற்றும் கேவில் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ற-4,106)











சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 64ஆவது ஆண்டு நிறைவு விழா ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நேற்று பொலன்னறுவை கதுருவெல ரஜரட்டை நவோதய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் கே.பியை காப்பாற்ற முனைகின்றார்

## சாடுகின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, செப்.3
பயங்கரவாதத்துக்குத் துணைபோன கே.பி. எனும் குமரன் பத்மநாதனைக் காப்பாற்றுவதற்குச் சட்டமா அதிபர் முனைகிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.
கே.பி. தொடர்பான வழக்கு விசாரணை கடந்த திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெற்ற போது அவரைக் கைது செய்யப் போதுமான சாட்சிகள் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டிருந்தது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வெளி நாடுகளில் இருந்து பணம் திரட்டிக் கொடுத்த – ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்ட – பல உயிர்கள் பறிக்கப்படக் காரணமாக இருந்த கே.பி தவறு செய்யவில்லை எனவும், அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாதுள்ளது என்றும் சட்டமா அதிபர் கூறுவாராகில் அவர் ஒரு துரோகியாவார்.
– என்று கூறியுள்ளார்.
அதேவேளை, கடந்த ஆட்சிக் காலத்தில் கே.பியை அரச தரப்பினர் ஆதரித்தமை அவரிடமிருந்து பணம், தங்கம், கப்பல் உள்ளிட்ட பொருள்களைக் கையகப்படுத்தவே என்று முன்னர் சரத் பொன்சேகா குற்றச்சாட்டியிருந்தார். (ற)

## இனத் துவேசத்தை சிங்கள மக்கள் விரும்பவில்லை

### அசாத் சாலி சுட்டிக்காட்டு



கொழும்பு, செப்.3
சிங்கள மக்கள் இனத்துவேசத்தை விரும்பவில்லை என்பதைக் கடந்த பொதுத் தேர்தலில் காட்டியுள்ளனர் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.
அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது:–
மகிந்த ராஜபக்ஷ தற்போது நாடாளுமன்ற உறுப்பினர். ஆகவே அவருக்கு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடிய சலுகைகளே வழங்கப்பட வேண்டும். மகிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி என்ற தகைமையை இழந்து தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியை மட்டுமே கொண்டுள்ளார்.
கடந்த தேர்தலில் இனவாதக் கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் எடுபடவில்லை. சிங்கள மக்கள் சந்தோசமாக ஒற்றுமையாக வாழவே விரும்புகின்றார்கள். அதனால்தான் ஞானசார தேரரைக் கூடத் தோற்கடித்தார்கள்.– என்றார். (ற)

## தமிழர்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதி பேசாதமை ஏமாற்றமே

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு




யாழ்ப்பாணம், செப்.3
ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரையில் தமிழ்மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் எதுவும் கூறாதமை எமக்கு ஏமாற்றமளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் 30ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
முன்பும் இருமுறை நான் நாடாளுமன்றம் சென்றிருந்தாலும் யாழ்ப்பாணம் சார்பில் செல்வது இதுவே முதல்தடவை. எனது தந்தை தர்மலிங்கம் 23 வருடங்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து இம் மாவட்டத்துக்கு ஆற்றிய சேவையை நான் தொடர்வேன்.
தமிழ் மக்கள் மிகப்பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர். அந்த மாற்றம் எவ்வளவு பயனைத் தரும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆளும் அரசுகள் திரும்பத் திரும்ப நல்லிணக்கம் ,நல்லாட்சி என்றெல்லாம் கூறினாலும் நாடாளுமன்றத்தின் ஆரம்ப உரையில் ஜனாதிபதி தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஏதும் கூறாதமை ஏமாற்றமாகவே உள்ளது. இருப்பினும் இனவாதிகளிடமிருந்து முடிந்ததை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றோம்.– என்றார். (ற–101)

## நான் தோற்கவில்லை; தோற்கடிக்கப்பட்டேன்

### அதாவுட செனவிரட்ன கூறுகின்றார்

கொழும்பு, செப்.3
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோற்கவில்லை, தோற்கடிக்கப்பட்டேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுட செனவிரட்ன.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்ட மகிந்த ஆதரவாளர்கள் என்னைத் தோற்கடித்தனர். எனக்கு விருப்பு வாக்கு அளிக்க வேண்டாம் என கூட்டங்களை நடத்தியும், கிராமத்திற்குக் கிராமம் சென்று துண்டுப் பிரசுரம் வழங்கியும் பரப்புரை செய்தனர்.
என்னைத் தோற்கடிப்பதற்கு முடிந்தளவு முயற்சிகளை மேற்கொண்டனர். எனது தலைமைத்துவத்தை கைப்பற்றிக்கொள்ள முயற்சிக்கப்பட்டது. கடந்த தடவை கேகாலையில் ஒன்பது ஆசனங்களில் [illegible] களைப் பெற்றுக் கொண்டோம். இந்தத் தடவை அந்த எண்ணிக்கை நான்காகக் குறைவடைந்துள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எனது பெயரையும் பிரதமர் பதவிக்கு தகுதியானவர் என குறிப்பிட்டிருந் தார். அதனால் என் மீது குரோதம் கொண்ட மகிந்த தரப்பு தீவிர முயற்சி மேற்கொண்டு என்னைத் தோற்கடித்தது. இறுதியில் மகிந்தவின் குழு, மகிந்தவையும் இல்லாமல் செய் துள்ளது. – என்றார்.
[illegible] நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)



# 16 ஆம் திருவிழா

## மதி தவழ் நல்லூர் வேலன்

தில்லையம்பதியான்தானே நல்லையில் ஆடுகின்றான்.
மந்திர வடிவினுள்ளே மறைந்துநின் றாளுகின்ற
சுந்தர நடனவேலன் சுழுமுனைசந்தி தன்னில்
சந்திரப் பிறையும்தாழ தனிநட மாடுகின்ற
அந்தமில் திறத்தை யாரறிந்திடு வாரோ.

ஆடிநின் றரற்றும் அருவினையாளர் அன்பால்
நாடிய பொருளை நல்லையம்பதியில் நயந்துகொண்டு
மூடிய வினைகள் யாவும் முற்றுற மாய்ந்தேயோட
நீடிய கமலபாதன் நிறைபுக ழானான்தானே.

தொல்லை நம்வினைகள் தொடர்ந்திடா வண்ணம்
எல்லையில் தனிக்கூத் தாடுமேறமர் கடவுள் தானே
தில்லையம் பதியென் றெண்ணித் திழைத்திடவெம்
நல்லையம் பதியிலாடி நம்மையு மாண்டான்தானே

என்னுளம் புகுந்து நின்று ஏதங்கள் அறுத்தேயாடும்
மன்னுசீர் புகழன்மதிதவழ் நல்லூர் வேலன்
பின்னுவார் சடைகளென்றும் பிறங்கிட விரிந்தே
மின்னுமாறிடவே நிற்பான் மிகுபுக ழாகித்தானே.

முடிவிலா ஆன்மகோடி முழுதுமே முத்திகாண
நெடியமால் காணமாட்டா நின்மல ரூபநல்
வடிவனாம் எங்களீசன் வச்சிரவேலன் அரியநல்
அடிதனை காட்டும் அதிசயமறி யலாமோ.

*சி.சக்திகிரீவன்*

## குருவாய் வருவாய் குகனே!

வினை நீக்கி எனை காக்க விரைந்தோடி வாராய் - நல்லூர்
வேலவனே நின்பாத மலரொன்று தாராய்
(வினை)
மனை தோறும் நின் கருணை மலர் கோடி சொரியும் - இம்
மாநிலத்தில் நின் கீர்த்தி வானாக விரியும்
(வினை)
நினைவெல்லாம் நின்னாமம் தேனாக நிறையும் - உன்
நிகரில்லா அருளாலே குறையாவும் மறையும்
உனையன்றி துணையேது எனை ஆள வருவாய் - என்
உளமெங்கும் இருள் நீக்கி அருளும் நற் குருவாய்
(வினை)
இணையில்லா நின்பாத கமலங்கள் போற்றும் - நல்
இதயங்கள் நல்லூரில் இறைதீபம் ஏற்றும் அணையாத
ஒளியாக உலகேழும் ஒளிரும் - உன்
அருள்தானே தமிழ்த்தாயின் புகழாக மிளிரும்
(வினை)

*ஆனையூர்க் கவிராயர்*

## அழகு மயில் வேலவா

அழகு மயில் வேலவா
அகிலமிதைப் பாரையா!
அருள் மழையைப் பெய்திடையா
ஆதரவை நல்கிடையா!

பஞ்சமதை போக்கிடையா
படர்குறைகள் நீர்த்திடையா - நின்
பக்தர்களின் வாழ்வுதனை
பசுமையாய் மாற்றிடையா!

*அரியாலையூர், மிஷாந்தி செல்வராஜா*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தாமதமான பணிகள் கூட, எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், தாராள வருமானம் கிடைக்கும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு நடக்கும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** உறவினர் வருகையால், வீட்டில் கலகலப்பு ஏற்படும். தொழில், வியாபாரத்தில், இலாபம் படிப்படியாக உயரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்பின் பயனை அனுபவிப்பீர்கள். தக்க சமயத்தில், நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** இனிய பேச்சால் அனைவரின் அன்பையும் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், முதலீடு தேவைப்படும். இலாபம் உயரும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் வகுப்பில் முன்னிலை வகிப்பர்

**சிங்கம்:** பெற்றோர் உடல் நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில், மிதவேகத்தைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** குடும்பத்தினரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார விடயமாக, திடீர் பயணம் செல்ல நேரிடும். ஆரோக்கியம் பலம் பெறும். மருத்துவச் செலவு குறையும். மாணவர்கள் பெற்றோர் மகிழும் விதத்தில் படிப்பர்.

**துலாம்:** குழப்பம் நீங்கி மனதில் தெளிவுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், விற்பனை சிறந்து இலாபம் உயரும். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா சென்று மகிழ்வர். அரசியல்வாதிகளுக்கு, எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** பொது நலனில் அக்கறை காட்டி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி குறைவதால் ஆதாயம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும்.

**தனுசு:** பேச்சில், நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், தடைகளை முறியடிக்க முயல்வீர்கள். இலாபம் சுமார். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உணவு விடயத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.


**மகரம்:** எதிரியும் வியக்கும் விதத்தில் முன்னேற்றம் அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபட்டு, இலாபம் காண்பீர்கள். சுப நிகழ்ச்சி குறித்த பேச்சு, நல்ல முடிவுக்கு வரும். பிள்ளைகளின் நலனுக்காக, பெண்கள் பாடுபடுவர்.

**கும்பம்:** உறவினருக்கு உதவுவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கடனில் பெரும் பகுதியை அடைத்து நிம்மதி பெறுவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.


**மீனம்:** மறைமுக எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். வாகன போக்குவரத்தில், நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு உண்டாகும்.

## விஜய் படத்துக்கு எழுதிய பாடல்





நடிகர் விஜயின் புலி திரைப்படம் அடுத்த மாதம் முதலாம் திகதி உலகமெங்கும் வெளியாகவுள்ளது. இந்நிலையில் புலி படத்தின் பாடல்கள் அனைத்துத் தரப்பு மக்களிடமும் நல்ல வரவேற்புப் பெற்று வருகின்றன. இது பற்றி கவிஞர் வைரமுத்து ஒரு நிகழ்ச்சியில் கூறுகையில், புலி படத்தின் அனைத்துப் பாடல்களையும் எழுதியுள்ளேன், ரஜினி படத்துக்கு எப்படி ஒரு எளிதான வரிகளால் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் அறிமுக பாடல் எழுதினேனோ அதேபோல் இந்தப் படத்திலும் விஜய்க்கு ஒரு புரட்சிகரமான வரிகளில் எல்லோருக் கும் புரியும் வகையில் ஒரு பாடல் எழுதி இருக்கிறேன்–என்றார்.



ஒரு ரீ குடிச்சிட்டு வாறதுக்குள்ள இப்படி ஆகிற்றுப்பா....

## நள்ளிரவு நேரம்



கடலில் ஒரு படகு போய்க் கொண்டிருந்தது. அதில் மூன்று பேர் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு பேய் படகில் வந்து குதித்தது. மூன்று பேரும் நடுங்கி போனார்கள். பேய் தனது கோரமான பல் வரிசையைக் காட்டிச் சிரித்தது.

உங்கள் மூன்று பேர்களையும் சாப்பிடப் போகிறேன் என்றது. மூன்று பேரும் தங்களுடைய உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள பேயிடம் கெஞ்சினார்கள். ஆனால் பேய் ஒரு நிபந்தனை விதித்தது.

உங்களில் ஒருவனாவது புத்திசாலியாக இருந்தால் உயிர்ப் பிச்சை கொடுப்பேன். அதை நிரூபிக்க இப்போது ஒரு சோதனை. நீங்கள் மூன்று பேரும் ஒவ்வொருவராய் கடலில் எதையாவது தூக்கிப் போடவேண்டும். அதை நான் எடுத்து வந்து விட்டால் நீங்கள் தோற்றுப் போனதாய் அர்த்தம். இதற்கு மூன்று பேரும் ஒப்புக்கொண்டனர். முதலாவது நபர் தனது கையில் போட்டிருந்த மோதிரத்தை எடுத்து கடலில் வீசினான். பேய் உடனே கடலில் குதித்து அதைத் தேடி எடுத்து வந்தது. இரண்டாவது நபர் தனது கழுத்தில் இருந்த செயினைக் கழற்றி கடலில் வீசினான். பேய் அதையும் தேடிப் பிடித்து கொண்டு வந்து கொடுத்தது.

பேய் சிரித்தது. இரண்டு பேர் தோற்று விட்டார்கள். இனி மீதி இருப்பது நீ மட்டும் தான். நீ எதை வீசப் போகிறாய்..?

உடனே மூன்றாவது நபர் தன்னிடம் இருந்த குடி தண்ணீர்ப் போத்தலை எடுத்து, நீரை கடலில் கொட்டி விட்டு ...


இந்தத் தண்ணீரை கொண்டு வா ! என்றான்....பேய் திகைத்தது. ஓட்டம் பிடித்தது. இந்த கதையின் நீதி என்னவென்றால் பேய்க்கே தண்ணி காட்டுபவர்களும் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பது தான்.!







"யார் என்ன சொன்னாலும்
அப்படியே
நம்பிவிடக்கூடாது
ஏன்? எதுக்கு...?
எப்படி..?ன்னு கேக்கணும்.."
"ஏன் கேக்கணும் மிஸ்..?
எதுக்கு கேக்கணும் மிஸ்..?
எப்படி கேக்கணும் மிஸ்..?"



நீங்க எல்லாம் எங்கிருந்துடா கிளம்புறீங்க உட்கார்ந்தே யோசிப்பீங்களாடா...

## பேஸ் புக்கில் பிடித்தவை...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி நிறுவனம் ஒன்றின் குளிர்பானத்துள் தையல் ஊசி!

*குடித்த மாணவனுக்கு சத்திர சிகிச்சை*

கொழும்பு, செப்.3

முன்னணி குளிர்பான நிறுவனம் ஒன்றால் உற்பத்தி செய்யப்பட்ட மெகா குளிர்பானப் போத்தல் ஒன்றுக்குள் இருந்த தையல் ஊசியொன்று குளிர்பானத்துடன் மாணவர் ஒருவரின் வயிற்றுக்குள் சென்றுள்ளது.

குறித்த மாணவர் உடனடியாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அங்கு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு தையல் ஊசி அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாணவனின் தந்தையால் செய்து கொள்ளப்பட்டிருந்த முறைப்பாடொன்றுக்கு அமைய வீரகுல பொலிஸார் இது சம்பந்தப்பட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:–

கொழும்பு றோயல் கல்லூரியில் பயிலும் கம்பஹா வாசியான இந்த 18 வயது மாணவன் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யக்கல நகரத்திலுள்ள கடையொன்றிலிருந்து மெகா குளிர்பானப் போத்தல் ஒன்றையும் கேக்குகளையும் வாங்கியுள்ளார்.

தனது நண்பர்களுக்கு அந்தக் குளிர்பானப் போத்தலில் இருந்து குளிர்பானத்தை வழங்கியதன் பின்னர் அதில் எஞ்சியிருந்த குளிர்பானத்தை அவர் தனது வாயில் ஊற்றியுள்ளார். அதன்போது, தாம் குளிர்பானத்துடன் ஏதோ ஒன்றை விழுங்கியதை அவர் உணர்ந்துள்ளார். உடனே அதுபற்றித் தனது தாயாரிடம் தெரிவித்திருந்ததோடு, அதன்பின்னர் அவருக்குத் தொடர்ச்சியாக வயிற்றுவலி ஏற்பட்டதன் காரணமாக கம்பஹா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவரது வயிற்றுக்குள் ஏதோவொன்று தொக்கிநிற்பது கண்டறியப்பட்டுள்ளது.

பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டதோடு, அங்கு அவர் சத்திரசிகிச்சை ஒன்றுக்கு உள்ளாக்கப்பட்டபோது அவரது குடலில் குத்துப் பட்டிருந்த நிலையில் 1.3 அங்குல நீளத்தைக் கொண்ட தையல் ஊசியொன்று வைத்தியர்களால் அகற்றப்பட்டது.

வயிற்றில் இருந்த தையல் ஊசி அகற்றப்பட்டதன் பின்னர் மேற்படி மாணவருக்கு வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தேசிய வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரான வைத்தியர் சிறில்டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேற்படி குளிர்பானப் போத்தலை விற்பனை செய்திருந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளரிடமிருந்து வாக்குமூலம் ஒன்று பெறப்பட்டு, இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என வீரகுல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற–22)

# சின்ன வெங்காய விவசாயிகள் விலை வீழ்ச்சியால் திண்டாட்டம்

*உத்தரவாத விலையை நிர்ணயிக்குமாறு கோரிக்கை*

கொழும்பு, செப்.3

வர்த்தக சந்தையில் சின்ன வெங்காயத்தின் விலை வெகுவாகக் கீழிறங்கியிருப்பதன் காரணமாக தமது வெங்காய அறுவடைக்ளை விற்பனை செய்துகொள்ள இயலாது போயுள்ளது என்று சின்ன வெங்காயச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா விவசாயிகள் இந்தமுறை 18 ஆயிரம் ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் சின்ன வெங்காயச் செய்கை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலத்தில் நிலவிய சிறப்பான கால நிலையின் காரணமாக தமது விளைச்சல்கள் அதிகரித்திருப்பதாகவும் அவற்றை அறுவடை செய்ததன் பின்னர் வர்த்தகச் சந்தையில் விலை வெகுவாகக் குறைந்திருப்பதன் காரணமாகத் தமது விளை பொருளை விற்பனை செய்ய இயலாத நிலை உருவாகியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வவுனியா வர்த்தகச் சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் மொத்த விற்பனை விலை 30 ரூபாவாகவும், சில்லறை விற்பனை விலை 40 ரூபாவாகவும் காணப்படுகின்றது என்றும் இதனால் சின்ன வெங்காயத்தைச் செய்கை பண்ணுவதிலிருந்து விளைச்சல்களை அறுவடை செய்வது வரையிலும் செலவாகியுள்ள பணத்தைக் கூடப் பெற இயலாத நிலை காணப்படுகின்றது என்றும் விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை மற்றும் யாழ்ப்பாணப் பிரதேசங்களில் இருந்து பெருமளவு சின்ன வெங்காயம் வர்த்தகச் சந்தையை வந்தடைவதன் காரண மாகவும் தமது விளைச்சல்களை விற்பனை செய்ய இயலாதுள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நெல்லுக்கு உத்தரவாத விலையொன்றை அறிமுகப்படுத்தியிருப்பதைப் போன்று – சின்ன வெங்காயம் தொடர்பாகவும் உத்தரவாத விலையொன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–22)




வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

எதிர்வரும் 05.09.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு காலசந்திப்பூஜையைத் தொடர்ந்து ஸ்ரீ வேணுகோபால சுவாமிக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறும்

பி.ப.4.00 மணிக்கு சாயரட்சை பூஜை

5.15 மணிக்கு இரண்டாங் காலப் பூஜை

06.09.2015 ஞாயிறு உறியடி உற்சவம் நடைபெறும். பி.ப.4.00 மணிக்கு வசந்தமண்டபபூசையைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதி உலாவருவார்.

021 222 2476 (62799)(12.15.17) தேவஸ்தான ஆதீன மகாசபை



பாராட்டு விழாவும் வாழ்த்துக்களும்

சாவகச்சேரி, கைதடி நுணாவில், நுணாவில் குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் 24.08.2015 தொடக்கம் இன்று (03.09.2015) வியாழக்கிழமை வரை நடைபெறும் அலங்காரத் திருவிழா நாள்களில் "ஸ்ரீமத் பகவத்கீதையும் மனோ விஞ்ஞானமும்" எனும் தலைப்பில் தொடர் ஆன்மீக சொற்பொழிவுகளை நிகழ்த்திய

பிரம்மஸ்ரீ தி. சிதம்பரநாத சர்மா

(S. நாதன் – மானிட சூழலியல் ஆய்வு நிறுவன நிர்வாக செயலாளரும், வருகை ஆங்கில விரிவுரையாளரும்)

அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பூங்காவனத் திருவிழாவான இன்று (03.09.2015) வியாழக்கிழமை இரவு 7.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நிகழவுள்ளது.

ஆலய குருமணிகள்,
ஆலய தர்மகர்த்தாக்களும்
பரிபாலன சபையும்.

(60587) (14,15)


# நேற்று வெளியிடப்பட்டது நல்லைக் குமரன் மலர்

யாழ்ப்பாணம், செப்.3



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்று புதன்கிழமை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், வீணாகான குருபீட முதல்வர் சிவஸ்ரீ சதாவாசுதேவக் குருக்கள், சின்மயானந்தா முதல்வர் சைதன்ய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரின் ஆசியுரைகளைத் தொடர்ந்து சைவ சமய விவகாரக்குழுவின் தலைவர் செ.பிரணவநாதன் தலைமையுரையாற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபை பிரதம செயலாளர் அ.பத்திநாதன், 'யாழ். விருது' பெற்ற பேராசிரியர் கே.தேவராஜா ஆகியோரின் உரைகளைத் தொடர்ந்து பேராசிரியர் தேவராஜாவுக்கு பிரதம விருந்தினர் அ.பத்திநாதன் 'யாழ். விருது' பொற்கிளி வழங்கிக் கௌரவித்தார்.

நல்லைக் குமரன் மலர் 23 ஆவது நூலை நூலாசிரியர் ந.விஜயசுந்தரத்திடமிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானப் பிரதிநிதி பெற்றுக்கொண்டார். மாணவர்களுக்கிடையில் மாநகரசபை சைவ சமய விவகாரக்குழுவால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ்களையும் பிரதமவிருந்தினர் வழங்கிக் கௌரவித்தார்.

நல்லைக் குமரன் 23 மலரின் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ந.வேல்நம்பி வழங்கினார். யாழ். மாநகரசபை முன்னாள் ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன், பிரதம விருந்தினர் பத்திநாதன் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக் கப்பட்டனர். நிகழ்வில் முன்னாள் ஆணையாளர் செ.மு.சரவணபவன் உட்பட பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். (ற–7)

# களுவாஞ்சிக்குடியில் இவ்வாண்டு மூவர் எலிக் காய்ச்சலால் பீடிப்பு

மட்டக்களப்பு, செப்.3

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் களுவாஞ்சிக்குடி பொதுச் சுகாதாரப் பிரிவில் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மூன்று பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை, களுவாஞ்சிக்குடி பிரதேச சுகாதார வைத்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் களுதாவளை கலாசார மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே அவர் இதனைக் கூறினார்.

குறிப்பாக விவசாயிகள், செங்கல் தொழில் செய்வோர், கால்நடை வளர்ப்போர் இந்த எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்படுகின்றனர். இந்த நோய் பரவாமலிருப்பதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எலிக்காய்ச்சல் பரவும் முறை, எலிக்காய்ச்சலுக்கான அறிகுறிகள், சிகிச்சை பெறும் முறை, எலிகளை கட்டுப்படுத்தல் தொடர்பில் இதன் போது விளக்கமளிக்கப்பட்டன. (ற)


சேவை நலன் பாராட்டு



Best Wishes

திருமதி வசந்தி சோதிலிங்கம்

(உப அதிபர்– இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு – I)

யா/சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

சேவை விவரம்:

யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை –1988.01.09 – 1992.08.31

(ஆரம்பக் கல்வி தொண்டர் ஆசிரியை)

யா/சங்குவேலி அ.த.க.பாடசாலை – 1992.09.01– 2015.09.02

(ஆரம்பக்கல்வி நிரந்தர ஆசிரியை)

எமது பாடசாலையில் இருபத்து ஏழு (27) வருடங்கள் ஆசிரியராகவும், அதிபர்களின் ஓய்வு, இடமாற்ற காலங்களில் பதில் அதிபராகவும் கடமையாற்றி இன்று (2015.09.03) சேவையில் இருந்து இளைப்பாறும் உபஅதிபர் திருமதி வசந்தி சோதிலிங்கம் அவர்களின் சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் அவரது வாழ்க்கையில் நீண்ட ஆயுளுடன் கூடிய பொற்காலமாக அமைய வாழ்த்தி எல்லாம் வல்ல சங்குவேலி சிவஞானப் பிள்ளையாரின் அருளை இறைஞ்சி நிற்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:

பாடசாலைச் சமூகம்,

யா/ சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

(14.16.17) (62656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வீக இசைப்பேருரை

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசை பேருரையில் பதினைந்தாம் நாளான இன்று 'காவிரி தந்த கணபதி' என்ற தலைப்பில் பேருரை இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்திய சகிதம் இசைப்பேருரை ஆற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-10)


### இதய அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர்
திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் அவர்களின்
அன்புக் கணவர்
**சண்முகவடிவேலு பொன்னம்பலம்**
**(ஓய்வு பெற்ற ஆசிரியர்)**
அகால மரணமடைந்ததையிட்டு எமது கல்லூரிச் சமூகம் மிகுந்த துயர் அடைகின்றது. மேலும் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.02.1930 | திதி: 03.09.2015 | மறைவு 14.09.2014

**அமரர் அன்னபூரணம் திருநாவுக்கரசு**

எங்கள் அன்பிற்கினிய தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயரம். இன்றும் உங்கள் நினைவுகள் எங்கள் மனங்களில் நிழலாடுகின்றன.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

113,பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
குடும்பத்தினர்.
(60587) (14,15,17)

### மரண அறிவித்தல்

**தம்பிராசா செந்தில்நாதன்**
(பிரதான புகையிரத நிலைய அதிபர்)



வட்டுக்கோட்டை வடக்கைப் பிறப்பிடமாகவும் 5ஆம் ஒழுங்கை, கோவிற்புதுக்குளம், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா செந்தில்நாதன் 01.09.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா(ஓய்வு பெற்ற அதிபர்) - தங்கரத்தினம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மீனாம்பிகை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும் அஜந்தன்(ஒறியன்ற் பினான்ஸ் கம்பனி), நிருஜன்(பொறியியலாளர்), அனோஜா(3ஆம் வருட மாணவி ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆர்த்திகா(ஆசிரியை சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாரும், கோகுலநாயகி சச்சிதானந்தம், சற்குணநாயகி பரமநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியை), சடாட்சரநாயகி மகேஸ்வரன்(ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகஸ்தர்), கதிர்காமநாதன்(ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற வரிசிலைநாயகி பரமானந்தசிவம் மற்றும் சடாட்சரநாயகி நடராஜா,கிரிசை நாயகி ஜெயானந்தம் (ஆசிரியை - வட்டு இந்துக்கல்லூரி), சசிதரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பராசக்தி வைரமுத்து(ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற இரத்தினராசா, இராஜேஸ்வரி தங்கராசா, யோகாம்பிகை பரமேஸ்வரன், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05 ஆம் ஒழுங்கை, கோவிற்புதுக்குளம், வவுனியாவில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (03.09.2015) வியாழக்கிழமை பிற்பகல்3.00மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோவிற்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் ஒழுங்கை,
கோவிற் புதுக்குளம்,
வவுனியா.

தகவல் :- குடும்பத்தினர்.
077 750 6326,
077 6617933


## அருள்நெறி விழாவின் பதினாறாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் பதினாறாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நடைபெறுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில்பி.ப3மணிமுதல்மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி தலைமை வகிக்கவுள்ளதோடு, பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் திருமதி ச.மஞ்சுளாதேவி கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் அமுதசுரபி அறநெறிப் பாடசாலை மாணவர்களான சு.நிருசியன், ச.சங்கவி, ஜெ.நவீன், ப.பிரியங்கா, அ.நர்மதா ஆகியோரின் பேச்சு, குழுநடனம், ப.பிரியங்காவின் தனிநடனம், மடத்துவவெளி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வி.கம்சா, இ.ஜனனி, அ.சேனுஜா ஆகியோரின் பேச்சு, திருவேளங்காட்டு சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவி ஜ.எழில்நிலாவின் பேச்சு, நீலியம்பனை அற நெறிப் பாடசாலையின் பஜனை, செல்லக் கதிர்காம அறநெறிப் பாடசாலையின் நாடகம் – கீழ்ப் பிரிவு, வில்லிசை –மத்தியபிரிவுசநிலக்ஷனா, த.அஜந்தா, கே.நுசானி ஆகியோ ரின் தனிநட னம் என்பன இடம்பெறவுள்ளன. (ந-10)

## 'செவ்வரத்தை' நூல் வெளியீடு

வவுனியா, செப்.3

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தும் 'செவ்வரத்தை' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் இலங்கையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்குபற்றிய 141 சிறுகதைகளில் 50 சிறுகதைகளின் தொகுப்பாக இந்த நூல் அமைந்துள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாவின் முன்னாள் அரச அதிபரும் கல்வியமைச்சின் ஓய்வு நிலை செயலாளருமாகிய உடுவை தில்ல நடராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் வெளியீட்டில் முதற் பிரதியை லண்டனைச் சேர்ந்த விவுரையாளர் க.சிறிஸ்கந்தராஜா பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வை வவுனிய தேசியக் கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் ந.பார்த்தீபனும், சிறப்புரையை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் கவிஞர், எழுத்தாளர் திருமதி கலைவாணி ஏகானந்தராஜாவும் வழங்குவர்.

அத்துடன் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பரிசில் பெற்றவர்களுக்கான கௌரவிப்பும் நடைபெறவுள்ளதுடன், இந்த நூல் விற்பனையின் மூலம் பெறப்படும் நிதி இலங்கையில் உள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்விக்காக வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-10)

## உரிமம் அற்ற, தவறவிடப்பட்ட காணிகளுக்கு அனுமதிப்பத்திரம்

முல்லைத்தீவு, செப்.3

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் காணிகளின் உரிமம் அற்ற மற்றும் தவறவிடப்பட்ட காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக வசித்தும் காணிகளுக்கான உரிமம் வழங்கப்படாமையாலும் காணி உரிமம் பெற்றும் இடப்பெயர்வின்போது தவறவிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் அனுசரணையுடன் கிராம ரீதியான விசாரணைகள் இடம்பெற்று உரிமம் அற்றவர்களுக்கு காணி உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேச பிரதிச் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த 25 ஆம் திகதி முறிகண்டிக் கிராமத்தில் உள்ள 113 காணி உரிமமற்றவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-500)

## பணமோசடி செய்தவருக்கு அபராதம்

திருகோணமலை, செப்.3

பணமோசடி செய்த ஒருவருக்கு திருகோணமலை நீதிமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நான்கு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை பிரதேசத்திலுள்ள கடைகளுக்கு மொத்த விலையில் பொருள்கள் வழங்கி வியாபாரம் செய்து வந்த நிலையில் ஒருவரிடம் பொருள்கள் தருவதாக ஐந்து லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெற்றுவிட்டு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கு பொருள்கள் வழங்கி குறித்த நபர் ஏமாற்றியுள்ளார்.

இது தொடர்பில் கடை உரிமையாளர் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் சந்தேகநபரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிபதி ரி.சரவணராசா நான்கு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் அந்தத் தொகையை செலுத்த தவறும் பட் சத்தில் இரண்டு வருடம் சிறை தண்டனை அனுப விக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ந)

## ஆற்றுகைப் போட்டிகளுக்கான முடிவுத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் ஆற்றுகைப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதிகள் நீடிக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட கலாசார பேரவையால் ஆற்றுகைப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக கோரப்பட்டிருந்த நிலையில், அதன் முடிவு திகதி எதிர்வரும் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலை மன்றங்கள் ,குழுக்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, நீடிப்பு திகதிக்குள் பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ந)

## வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்பு

தென்மராட்சி, செப்.3

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட காணி ஒன்றில் இருந்து தற்போது வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் பற்றையாகக் காணப்பட்ட காணியை துப்புரவு செய்தபோது வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டு அதுகுறித்து கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அங்கு சென்ற பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பை ஏற்படுத்தியதுடன், படையினரின் வெடிப் பொருள்கள் செயலிழக்க வைக்கும் பிரிவினர் மூலம் அதை அப்புறப்படுத்தி செயலிழக்க வைக்க அனுமதி கோரி சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை வெடிப் பொருள்கள் செயலிழக்க வைக்கும் படைப்பிரிவு மூலம் கைக்குண்டை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு உத்தரவிட்டார். (ந-9)

## விபத்தில் சிக்கிய வயோதிபர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், செப்.3

அம்மன் வீதி, கந்தர்மடப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சைக்கிள்–மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிக்கி காயமடைந்த முதியவர் சிகிச்சை பயனின்றி நேற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சாவடைந்தார். 66வயதுடைய சண்முகவடிவேல் பொன்னம்பலம் என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த வயோதிபர் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகி காயமடைந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

இதேவேளை விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த மண்டைதீவைச் சேர்ந்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ. சிவகுமார் உத்தரவிட்டார். (ந-103)

## கலை, கலாசார பேரவையில் சேரலாம்

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையில் அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் தங்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் கடமை கொடுப்பனவு குறித்த வவுச்சர்களை அனுப்புமாறு அறிவிப்பு

## தென்மராட்சி கல்வி வலயம் விடுத்துள்ளது

தென்மராட்சி, செப்.3

கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமையில் ஈடுபட்ட தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் சிறு பணியாளர்கள் தமது தேர்தல் கடமைக் கொடுப்பனவு தொடர்பான கொடுப்பனவுச் சிட்டைகளின் (வவுச்சர்) மூலப்பிரதிகளை வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் பணியாள் குழுவினர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளரால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் தென்மராட்சிக் கல்வி வலயத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட ஆசிரியர்களதும், அதிபர்களதும் படிக் கொடுப்பனவுகள் 2015 ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டமை போன்று வலயக் கல்வி அலுவலகங்களூடாக மேற்கொள்ளப்படும் என்றும் கட்டம் கட்டிய அறிவிப்பு மூலம் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2015.08.21 ஆம் திகதிய 2015 / 02 ஆம் இலக்க தேர்தல் பணியாள் குழுவினர்களுக்கான கொடுப்பனவுகள் என்ற தலைப்பிலான சுற்றறிக்கைக்கிணங்க அதிபர்கள், ஆசிரியர்களுக்கான தேர்தல் கடமைப் படிகள் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்கூடாகக் கொடுப்பனவு வழங்கப்பட நடவடிக்கையெடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், ஜனாதிபதித் தேர்தலோடு தொடர்புடைய கொடுப்பனவுகளைத் தேர்தல் அலுவலகங்களூடாக மேற்கொண்டபோது தேவையற்ற காலதாமதம் ஏற்பட்டதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் காரணமாக மேற்குறித்த சுற்றறிக்கையின் 03 (ஆ) 11 ஆம் பிரிவு மற்றும் 11 ஆம் பிரிவு என்பன பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை தயவன்புடன் அறியத்தருகின்றேன்:

பாடசாலை ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் தேர்தல் கடமைக்கான படிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இவர்களின் 'வவுச்சர்'களின் மூலப்பிரதிகளைத் தத்தம் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள மாவட்டத்தின் வலயக் கல்வி அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த 'வவுச்சர்'களுக்காக உரிய வலயக் கல்வி அலுவலகங்களால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட தன் பின்னர் தேர்தல் பணியாள் குழுவினர்களுக்கான கொடுப்பனவுகளின் விவரங்களை 'ஏ' படிவத்துக்கமைய நிரப்பப்பட்டு அட்டவணை யொன்றின் மூலம் தேர்தல் செயலகத்துக்கு சமர்ப்பித்து உரிய நிதியை மீள் நிரப்புச் செய்து கொள்ள முடியும். ஏதேனும் ஒரு பாடசாலையின் சாரதியொருவர் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்தால் அவருக் குரிய படிகளையும் வலயக் கல்வி அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு செய்து உரிய கொடுப்பனவு விவரங்களை 'பி ' படிவத்திற்கமைய நிரப்பப்பட்ட அட்டவணையொன்றின் மூலம் தேர்தல்கள் செயலகத்திற்கு சமர்ப்பித்து அந்த நிதியையும் மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும் – என்றுள்ளது. (ந-9)


நாரந்தனை கிழக்கு, நொச்சிபுரம்

ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில்

மஹா கும்பாபிஷேகம் - 2015



கிரியை விவரம்

3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.00 கிரியை ஆரம்பம்

4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எண்ணெய்க்காப்பு

5ஆம் திகதி சனிக்கிழமை கும்பாபிஷேக விழா

அடியார்கள் அனைவரும் வருகை தந்து அருள்பெறுக.

பரிபாலகர்கள்



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
துன்னாலை வடக்கு புலோலி
மஹோற்சவ தற்காலிக கடை அமைத்தல் - 2015

இவ் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கீழ் வரும் கடைகளுக்கான இட ஒதுக்கீடு எதிர்வரும் 05.09.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளன. கடைகளை ஏலத்தில் எடுப்பவர்கள் காலை 9.30 மணிக்கு சமுகமளித்து வாடகைப்பணத்தினை அன்றைய தினமே முழுமையாகச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* ஐஸ்கிறீம் கடை
* இனிப்புக் கடை
* கச்சான் கடை
* புடைவைக் கடை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.
021 226 3074, 021 205 6644

அறங்காவலர் சபை.


# சனியன்று 'பொற்தூறல்' நிகழ்ச்சித் தொடர்

யாழ்ப்பாணம், செப்.3

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற 'பொற்தூறல்' நிகழ்ச்சித் தொடரின் இந்த மாதத்துக்கான நிகழ்வாக 'புரட்டாதித் திங்கள் பொற்தூறல்' நாளைமறுதினம் 5ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பி.ப 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவரும், யாழ்ப்பாணம் 'சாந்திகம்' நிறுவனத்தின் இயக்குநருமான ஜெகநாதன் தற்பரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சங்கமம் வயலின் வாத்தியக் கலையக மாணவர்கள் வழங்கும் நாதசங்கமமும், ஜேர்மனி உலக இசைக்கல்லூரியின் தெற்காசிய இசைப் பிரிவுப் பொறுப்பாளர் பாடகர் மாணிக்கம் யோகேஸ்வரனின் புல்லாங் குழல் இசை நிகழ்வும், பொன்சக்தி கலாகேந்திரா கலைக்கழகம் வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-10)

# போதையில் ரகளை: 80 மணி நேர சமூக சேவையில் ஈடுபடுத்த உத்தரவு

தென்மராட்சி, செப்.3

கொடிகாமம் பகுதியில் மது போதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட இருவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை குறித்த இருவரையும் ஆறு மாத காலத்துக்குள் 80 மணித்தியாலங்கள்சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்றச் சமுதாயஞ்சார் சீர்திருத் தப்பிரிவில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

அதேவேளை போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ந-9)


வேலையாள்கள் தேவை

இல.171, கே.கே.எஸ் வீதியில் (சத்திரச்சந்திக்கு அருகில்) உள்ள புடைவைக்கடைக்கு வேலையாள்கள் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 021 222 8383

(62781.11.15.17)



AIR MARK

யாழ் நகரில் இயங்கும் பிரபல விமானப் பயணச்சீட்டு விற்பனை அலுவலகத்திற்கு கணினி மற்றும் ஆங்கில அறிவுடைய அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது. (வயது 19- 26)

தொடர்பு:
info@airmarktravels.com
#05 ,Stanleyroad,Jaffna



மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 இல் பிறந்த பூராடம் 1ஆம் பாதம் 7இல் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:
076 6379904, 077 242 7803



தவறிவிட்டது

NPLG 6507 இலக்க வாகனத்திலுடைய சகல ஆவணங்களும் அடங்கிய பை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 071 801 5328
077 730 5978



வேலையாள் தேவை

தொழில் ஸ்தாபனம் ஒன்றுக்கு அச்சுவேலியை அண்மித்த பகுதியில் வெல்டிங்வேலை(Welder) தெரிந்தவர்கள் தேவை. அதுவும் உழைப்பாளிகள் மட்டும்.

தொடர்பு : 077 581 5191



# வவுனியா வடக்குப் ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் ப.நோ.கூ.சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள் சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சகல விவரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை தலைவர், வவுனியா வடக்குப் ப.நோ.கூ. சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அன்றேல் நேரடியாகவோ 19.09.2015ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். சாரதி பதவி நீங்கலாக வயதெல்லை 18-35 வரை. சாரதி பதவிக்கு வயதெல்லை 18-45 வயது வரை. கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாதென்பதுடன், கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும்போது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**1. இலிகிதர் 302/14**

சம்பள அளவுத் திட்டம் -12610.00-80x10 -85x10 - 14260.00 வும் இதர படிகளும்.

**கல்வித் தகைமை:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**2. கிளை முகாமையாளர் 208/13**

சம்பளம் - 12935.00 - 85x10 - 90x10 - 14685.00 வும் இதர படிகளும்.

**கல்வித் தகைமை:**

அ) கூட்டுறவுப் பணியாளர்14ஆவது சம்பளத் திட்ட தொடர்புப்பட்ட துறைப்பகுதியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்ட தொடர்புப்பட்ட பகுதியொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட நான்கு (4) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**3. வாகன சாரதி 312/14**

சம்பள அளவுத் திட்டம் - 12610.00- 80x10 - 85x10 - 14260.00 வும் இதர படிகளும்.

**கல்வித் தகைமை:**

அ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும், பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் உழவு இயந்திர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

தலைவர்,
வவுனியா வடக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கம்,
நெடுங்கேணி.

31.08.2015

(C/18584)(10.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வு



அமரர் சு.பொ.நடராசா
(அதிபர் -அண்ணா தொழிலகம்)

கடந்த 5.7.2015 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது தந்தையாரின் ஒத்திவைக்கப்பட்ட வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதியபோசன வைபவமும் எதிர்வரும் 06.09.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராகக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பையே மீளவும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

அண்ணா தொழிலகம்,
துரைவீதி,இணுவில்.

குடும்பத்தினர்.



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
தில்லைமாதேவி
காத்தலிங்கம்

தோற்றம்
12.08.1943

மறைவு
23.07.2015

கடந்த 23.07.2015 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (04.09.2015) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் மறுநாள் 05.09.2015 சனிக்கிழமை பகல் அன்னாரது வித்தனையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தனை ஒழுங்கை,
வல்வெட்டித் துறை.

குடும்பத்தினர்.
077 782 0282,077 715 6462


## பிணைப்பத்திரம் ஒப்படைக்காத நால்வருக்கு மீண்டும் மறியல்

தென்மராட்சி, செப்.3

நீதிமன்றால் வழங்கப்பட்ட பிணைப் பத்திரத்தை கிராம அலுவலரின் பரிந்துரை பெற்று மீள ஒப்படைக்காத நான்கு பேரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் ஒருவரைக் கொட்டனால் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் அந்தப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது குறித்த நால்வரையும் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

நீதிமன்றால் பிணையில் விடப்படுபவர்கள் பிணையாளியின் ஒப்பத்துடன் வெளியில் செல்லலாமெனவும் நீதிமன்றால் குறிக்கப் படும் காலத்திற்குள் பிணைப் பத்திரத்தை பிரிவு கிராம அலுவலரின் பரிந்துரையுடன் நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டுமென்பதும் விதிமுறையில் உள்ளன.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டபோது இவர்களைப் பிணை எடுப்பதற்கென பிணையொப்பம் பெறப்பட்டு வழங்கப்பட்ட படிவங்கள் கிராம அலுவலரின் பரிந்துரை பெற்று நீதிமன்றில் மீள வழங்கப்படவில்லை என்று நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட வழக்கை விசாரித்தபதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை நீதிமன்றை அவமதிக்கும் வகையில் செயல்பட்டமைக்காக நால்வரையும் எதிர்வரும் ஒன்பதாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நாகராசா
அகிலன்
(B.com. HNDA, M.,A)

மண்ணில்
18.05.1977

விண்ணில்
14.09.2014

திதி :ஷஷ்டி

நினைவுகளுடன் நீள்கின்ற நாள்களுக்குள்
நீங்கள் எமைவிட்டு ஆண்டொன்று சென்றதுவே!
வைகை நதி வற்றி அந் நீரெல்லாம் எம் கண்ணீராக
சொரிய!
எம் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவரே......
ஈராறு மாதங்கள் என்ன. ஈரேழு ஜென்மம்
எடுத்தாலும் மாறாது உம் அழகிய புன்னகை வதனம்......

எமது குடும்ப குல விளக்கின் ஓராண்டு நினைவுகளுடன்
அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.....

மஞ்சத்தடி
இணுவில்.

[62798][12.15 17]

மனைவி, மகன்
குடும்பத்தினர்.



## முதலாம் வருட நினைவலைகள்

செல்லத்துரை
நடராஜா
(கனிப்பொருள் மணல்
கூட்டுத்தாபனம் - புல்மோட்டை)

உதிப்பு
13.04.1948

உதிர்வு
13.09.2014

திதி: 03.09.2015



குலத்திற்கு பெருமை சேர்த்த இல்லத் தலைவரே
உலைமப்பிரித்து காலனவன் செய்த வஞ்சகம் இது
எமது வலி என்றுமே தீராத ஒன்றே
தவிக்கின்றோம் அனைவரும் உமது பிரிவினால்
இவ் ஓராண்டு மட்டுமல்ல கோடி
ஆண்டுகள் சென்றாலும்
உமது நினைவு மட்டும் எமை விட்டுப் பிரியாது
பிரார்த்திக்கின்றோம் இறைவனை நாங்கள்
இறைவனடி சேரட்டும் உமது ஆத்மா

வைரவர் கோயில் சந்தி,
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.

துயருறும்
குடும்பத்தினர்.

(18581) (14,15)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25.02.1945



மறைவு
14.09.2014

அமரர் மாரிமுத்து பாலசுந்தரம்
(பாலா கராஜ் – சாவகச்சேரி)
திதி: ஷஷ்டி (03.09.2015)

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய் வாழ்ந்த எம்
அருமை குடும்பத் தலைவனே!
தங்கள் அறிவுரைகள் என்றும் எம் உயர்வுக்கு வழிகாட்டும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உங்கள் பிரிவு எம்மை
- வாட்டுகின்றது.
ஆண்டொன்று கடந்தாலும் மறையவில்லை உங்கள் நினைவு.

86/2, வளாக வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்.



## 16 ஆம் நாள் சிராத்த தின அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ
சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியார்

கடந்த 19.08.2015 புதன்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத்தின் குல விளக்கு அமரர் ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியார் அவர் களின் சிராத்ததினக் கிரியை இன்று (03.09.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திடீர் சுகயீனமுற்ற எமது தந்தையை வைத்தியசாலையில் அனுமதித்தபோது அல்லும்பகலும் அயராது சேவை புரிந்த வைத்தியப் பெருந்தகைகள், தாதிய உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும், நேரடியாகவும் தொலைபேசியிலும் ஆறுதல் கூறியோருக்கும், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு: அழைப்புக் கிடைக்கப் பெறாதோர் தயவுசெய்து இவ்வழைப்பிதழைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(62651) (13.15)

குடும்பத்தினர்.



## செயலமர்வு

யாழ்ப்பாணம், செப்.3

செவிப்புலன் வலுவற்றோருக்கான சைகை மொழி பெயர்ப்பாளர்களாகப் பணியாற்றக் கூடிய அரச உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு வவுனியா தெற்கு கல்வி வலய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை செவிப்புலன் வலுவற்றோர் மத்திய சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள செயலமர்வில் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் உட்பட நான்கு பொது சுகாதார பரிசோதகர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இரகசிய உறவுக்கு ஆப்கனில் 100 சவுக்கடிகள்

காபூல்,செப்.3
ஆப்கானிஸ்தானில் இரகசியத் தொடர்பு வைத்திருந்த ஆணொருவருக்கும் பெண்ணொருவருக்கும் தண்டனையாக 100 சவுக்கடிகள் கொடுக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தானின் கோர் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண் மற்றும் ஆண் ஆகியோர் தம்மிடையே இரகசியத்தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து இருவருக்கும் 100 சவுக்கடிகள் தண்டனையாக விதிக்கப்பட்டன.

அதன்படி பலரும் கூடியிருந்த இடத்தில் பர்தா அணிந்த அந்தப் பெண் முழங்கால் இட கட்டாயப்படுத்தப்பட்டார். பின்னர் மிருகத்தின் தோலினால் செய்யப்பட்ட சவுக்கால் அவருக்கு 100 அடிகள் வழங்கப்பட்டன. இந்தத் தண்டனை முழுவதும் அரசின் ஆதரவுடன் தான் வழங்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக அந்த மாகாணத்தின் ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது, அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஷரியா சட்டத்தின்படி வழங்கப்பட்டது. இது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஐரோப்பா செல்ல உயிரை பணயம் வைக்கும் அகதிகள்

பெர்லின்,செப்.3
ஜேர்மனி செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனக்கோரி ஆயிரக்கணக்கான அகதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் ஹங்கேரி நாட்டின் ரயில் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டுப் போர் காரணமாக ஆபிரிக்கா மற்றும் சிரியாவில் இருந்து ஏராளமான மக்கள் ஐரோப்பாவுக்கு அகதிகளாகச் செல்கின்றனர். அவர்களில் பலர் உரிய ஆவணங்கள் இல்லாமல் சட்டவிரோதமாகச் செல்வதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 100 இற்கு மேற்பட்ட அகதிகள் கையில் பயணச் சீட்டுடன்ஹங்கேரியின் தலைநகர் புடாபெஸ்டில் உள்ள ரயில் நிலையத்தைமுற்றுகையிட்டனர். தங்களை ஜேர்மனி மற்றும் ஆஸ்திரியா செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினர். பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக அனைத்து ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டன. இதேபோல் ஸ்பெயின் நாட்டுக்குள் செல்ல வேண்டும் என்பதற்காக காரின் இயந்திரப்பகுதிக்குள் மறைந்துவந்த அகதியை உயிருக்கு ஆபத்தான நிலையில் ஸ்பெயின் பொலிஸார் கைது செய்தனர். மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்ட அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், மேலும் சில மணி நேரங்கள் அவர் கூடுதலாக மறைந்திருந்தால் வெப்பம் காரணமாக அவர் சாவடைந்திருக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளனர். இதேபோல் ஏராளமான அகதிகள் ஐரோப்பாவுக்குள் சென்றே ஆக வேண்டும் என்று தங்கள் உயிரை யும் பணயம் வைக்கும் செயல் ஐரோப்பிய நாடுகளில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



# நேபாளத்தில் கலவரம்

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் சாவு






காத்மண்டு, செப்.3
நேபாளத்தில் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி அங்கு 7 புதிய மாநிலங்கள் உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாதேசி என்ற இன மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தெராய் பகுதியில் தங்களுக்குத் தன்னாட்சி உரிமையுடன் கூடிய தனிப் பகுதி அமைத்துத் தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது, இந்தப்போராட்டம் கலவரமாக மாறியுள்ளது. பீகாரை ஒட்டியுள்ள பர்சா மாவட்டத்தில் ராலாயுல் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வன்முறை வெடித் துள்ளது. எனவே அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதைப் பொருட்படுத்தாமல் நேற்று முன்தினம் பர்சா மாவட்டத்தில் மீண்டும் கலவரம் மூண்டுள்ளது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மாதேசி இனத்தவர் பொலிஸ் நிலையம், வருவாய்த்துறை அலுவலகம் ஆகியவற்றைத் தீ வைத்து எரித்துள்ளனர்.

வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறை கட்டுக்கடங்காமல் போகவே கூட்டத்தினர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அதைத் தொடர்ந்து ராலாயுல் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந் துள்ளனர். பலர் காயம் அடைந்தனர்.

பாரா மாவட்டத்தில் கலால்யா நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 22 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனால் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

இந்தத் தகவலை நேபாள உள்துறை அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் லஸ்மி பிரசாத் தக்கல் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேவாலயம் மீது தாக்குதல்; 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத்,செப்.3
பாகிஸ்தானின் லாகூர் நகரில் உள்ள இரு கிறிஸ்தவ தேவாலயங்களின் மீது தாக்குதல் நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று தீவிரவாதிகளைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். பாகிஸ்தானின் லாகூர் நகரின் யோஹானாபாத் பகுதியில் உள்ள இரு கிறிஸ்தவ தேவாலயங்களின் மீது கடந்த மார்ச் மாதம் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் 17 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு தெஹ்ரிக் இ தலிபான் பாகிஸ்தான் என்ற தீவிரவாத இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற ஜமாத்துல் அஹ்ரார் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இதையடுத்து, அந்த இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய குற்றவாளிகளான ஹஸன் பஞ்சாபி, ஷா கானூன், முஹம்மது இம்ரான் ஆகியோரைக் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தி வந்தனர். இந்தக் கும்பலுக்குச் சொந்தமான ஆயுதக் கிடங்குக்கு அவர்களை அழைத்துச் சென்று அங்கு பதுக்கி வைத்திருக்கும் வெடிப்



பொருள்களைக் கைப்பற்றும் முயற்சியில், மூன்று குற்றவாளிகளையும் வாகா எல்லையோரம் உள்ள பாட்பூர் ஹவுஸ் பகுதிக்குப் பாகிஸ்தான் உளவுப்பிரிவு பொலிஸார் அழைத்துச் சென்றனர். ஜமாத்துல் அஹ்ரார் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த சிலர் ஆயுதங்களுடன் அவர்களைச் சுற்றிவளைத்து, தங்களது சகாக்களைக் காப்பாற்றி, விடுவித்து அழைத்துச் செல்லும் நோக்கத்தில் துப்பாக்கிகளால் சுட ஆரம்பித்தனர். அதையடுத்து பொலிஸாருடன் வந்திருந்த குற்றவாளிகள் மூவரும் தப்பியோட ஆரம்பித்தனர். அவர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் அம் மூவரும் கொல்லப்பட்டனர் (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் 25% கழிவு

## 2015 செப்டம்பர் 12ம் - 13ம் திகதிகளில்

சம்பத் கடன் அட்டை உரிமையாளர்களாகிய நீங்கள் சிறப்பு தள்ளுபடியை அனுபவியுங்கள்

சம்பத் வங்கியின் மாபெரும் "Town On Sale" ஊக்குவிப்பு 2015 செப்டம்பர் 12ம்-13ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. கீழுள்ள சகல பங்காளி நிலையங்களிலும் சம்பத் கடன் அட்டைகளுக்கு 25% சிறப்பு தள்ளுபடியை பெற்று அனுபவியுங்கள்.

Sampath Bank PLC-PQ144

## தள்ளுபடியை அனுபவியுங்கள்

softlogic BEST IN THE BUSINESS +
softlogic MAX maximum experience +
DAMRO Internationally Trusted Furniture +
DSI Sri Lanka's No.1 Footwear
VISION CARE OPTICAL SERVICES
Venukka Tex
Lux Francisco Varano
FITS MARGOSA
தங்குமிட வசதிகளின் 25% தள்ளுபடியை
உனவகங்களின் 25% தள்ளுபடியை
HAS HOTEL
CITY ELECTRONICS +
Lingan Cream House

ளுக்கு மட்டுமே பொருந்தும்
அதிகபட்ச கொள்வனவிற்கு மாத்திரம் இச்சலுகை பொருந்தும்.
கடன் அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு பொருந்தும்.

com/Sampathbankplc

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

நிபந்தனைகள் உண்டு | மேலதிக விபரங்களுக்கு பிரவேசியுங்கள்: www.sampathcards.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹங்கேரியில் குடியேறிகள் ஆர்ப்பாட்டம்

வியன்னா, செப். 3
குடியேறிகள், ஹங்கேரி ஊடாக ஐரோப்பாவுக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், அந்த நாட்டின் தலைநகர் புடா பெஸ்ட்டில் மிகப் பெரிய ரயில் நிலையத்தை அதிகாரிகள் மூடியதையடுத்து, நூற்றுக் கணக்கான குடியேறிகள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கெலெடி ரயில் நிலையம் முன்பாகத் தடுத்து நிறுத்தப்பட்ட குடியேறிகள், தங்களை உள்ளே அனுப்ப வேண்டுமென கோரி வருகின்றனர். 'ஜேர்மனி மற்றும் சுதந்திரம்' என்று கோஷமெழுப்பிய குடியேறிகளை, அங்கிருந்து செல்லும்படி அதிகாரிகள் கூறிவருகின்றனர். ஆனால், தங்களுக்கு ரயில் பயணத்துக்கான பற்றுச்சீட்டுக்களைத் தரும்படி கோரி தொடர்ந்தும் குடியேறிகள் கோஷமெழுப்பினர். மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதலின் காரணமாக, சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் எரித்திரியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த மக்கள், தமது நாடுகளிலிருந்து வெளியேறி ஐரோப்பாவுக்குள் நுழைய முயற்சித்துவருகின்றனர். இவ்வாறு வரும் குடியேறிகள், ஹங்கேரியின் வழியாக ஆஸ்திரியா, ஜேர்மனி போன்ற நாடுகளுக்குள் நுழைய முற்படுகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் நேற்று ஹங்கேரி புடாபெஸ்ட் கெலாட்டி ரயில் நிலையத்தில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஹங்கேரி நாட்டு அதிகாரிகள், ஐரோப்பிய ஒன்றிய விதிகளை முறையாக செயல்படுத்தவே இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். அத்தோடு, கடந்த திங்கட்கிழமையன்று 3ஆயிரத்து 650 குடியேறிகள் ஆஸ்திரிய தலைநகர் வியன்னா வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள அந்த நாட்டின் பொலிஸார் அவர்களில் பலர் ஜேர்மனிக்குச் செல்வதற்காகக் காத்திருக்கின்றனர் எனவும் கூறியுள்ளனர்.

இதற்கிடையில், குடியேறிகளை



ஐரோப்பிய நாடுகள் நியாயமான முறையில் பகிர்ந்துகொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய உடன்பாட்டின்படி குடியேறிகள் எங்கு வந்து இறங்குகிறார்களோ அங்கு அவர்களைப் பதிவு செய்வதற்கான நிலையம் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மூடப்பட்டிருந்த கெலெடி ரயில் நிலையத்தை குடியேறிகள் தவிர்ந்த பிறருக்கு அதிகாரிகள் திறந்து விட்டுள்ளனர். ஐரோப்பாவுக்குள் நுழையும் குடியேறிகளின் எண்ணிக்கை முன்னரை விட அதிகரித்துள்ள நிலையில், கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 7ஆயிரத்து 500 குடியேறிகள் ஐரோப்பாவுக்குள் நுழைந்துள்ளனர். இந்த வருடத்தில் சுமார் எட்டு இலட்சம் குடியேறிகள் தமது நாட்டுக்குள் வருவார்கள் என்று ஜேர்மனி எதிர்பார்க்கிறது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிகமாகும். மறுபுறத்தில், ஐரோப்பாவுக்குள் நுழைவதற்கான ஆபத்தான பயணங்களின்போது குடியேறிகள் உயிரிழக்கும் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அந்த வகையில் , கடந்த வாரம் ஹங்கேரி – ஆஸ்திரிய எல்லையில் கைவிடப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றில் இருந்து குடியேறிகள் 71 பேரின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதேபோன்று, குடியேறிகளை ஏற்றிய படகுகள் இரண்டு லிபியாவிலிருந்து ஐரோப்பா செல்வதற்கான பயணத்தை ஆரம்பித்த சில மணி நேரங்களில் மத்திய தரைக் கடலில் மூழ்கியதில் அதில் பயணித்த நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ஐ)







நடப்பு வருடத்தின் சர்வதேச ஒளிப்படக் கண்காட்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த கண்காட்சிக்காக தெரிந்தெடுக்கப்பட்ட ஒளிப்படங்களில் சில.. (ஐ–ரி4)

# சாவு எண்ணிக்கை உயர்வு

## சீன துறைமுகக் கிடங்கு விபத்தில்

பீஜிங்,செப்.3
சீனாவில் தியான்ஜின் துறைமுகக் கிடங்கில் நிகழ்ந்த வெடி விபத்தில் காயமடைந்த 8 பேர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து,



அந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 158 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 94 தீயணைப்புப் படையினர், 11 பொலிஸார், 53 பொதுமக்கள் அடங்குவர் என சீன அரச செய்தி நிறுவனமான சின்ஹவா தெரிவித்துள்ளது. சீனாவின் துறைமுக நகரான தியான்ஜினில், ஏராளமான இரசாயனப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த கிடங்கில் கடந்த மாதம் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. ஆபத்தான இரசாயனத் தீயை அணைக்க இராணுவத்தினர் விரைந்தனர். அணு சக்தி நிபுணர்களும் உயிரியல் நிபுணர்களும் அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். கிடங்கையொட்டிய பகுதியில் ஏற்றுமதிக்காக நிறுத்தியிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட கார்கள் எரிந்து நாசமாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கருக்கலைப்புச் செய்த பெண்களுக்கு மன்னிப்பு

## குருக்களுக்கு பாப்பரசர் அதிகாரம்

வத்திக்கான்,செப்.3
கருக்கலைப்புச் செய்து கொண்ட பெண்கள் எதிர்நோக்குகின்ற "வாழ்வியல் மற்றும் தார்மீகப் போராட்டங்கள்" பற்றி பாப்பரசர் விவரித்துள்ளார். கருக்கலைப்புச் செய்து கொண்ட பெண்களுக்கு மன்னிப்பு அளிப்பதற்கான அதிகார சுதந்திரத்தை அனைத்துக் கத்தோலிக்க அருட்தந்தையர்களுக்கும் பாப்பரசர் பிரான்சிஸ் வழங்கவுள்ளார். கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய திருப்பமாக இது பார்க்கப்படுகின்றது.

கருக்கலைப்புச் செய்துகொண்ட பெண்கள் எதிர்நோக்குகின்ற "வாழ்வியல் மற்றும் தார்மீகப் போராட்டங்கள்" பற்றி பாப்பரசர் விபரித்துள்ள கடிதம் ஒன்றை வத்திகான் வெளியிட்டுள்ளது.

மிகவும் வருத்தமும் வலியும் தரக்கூடிய முடிவின் காயங்களைத் தனது மனதில் சுமந்துகொண்டு மன்னிப்புக்



கோருகின்ற பல பெண்களை, தான் சந்தித்துள்ளதாகவும் பாப்பரசர் கூறியுள்ளார்.

கத்தோலிக்க கோட்பாடுகளின் படி, கருக்கலைப்பு என்பது இன்று வரை மிகப்பெரிய பாவமாகக் கருதப்படுகின்றது.

அதாவது, கருக்கலைப்பைச் செய்பவரும் செய்துகொள்பவரும் திருச்சபை குடும்பத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள் என்பதே அந்த நிலைப்பாடு எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதி

சிங்கப்பூர்,செப்.3
உலகம் முழுவதும் எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டு அதன் கடைசி நிலையான எய்ட்ஸ் நோயாளிகளுக்கான தடுப்பு மருந்து 1980ஆம் ஆண்டின் இறுதிவரை கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. இதனால், ஓர் உயிர்க்கொல்லி நோயாக எய்ட்ஸ் அடையாளம் காணப்பட்டது. இது தொற்றுநோயாக இருக்கலாம் என அஞ்சப்பட்டதால், இந்த நோய் தாக்கியவர்கள் பல நாடுகளுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும் இந்த நோய், தகாத – பாதுகாப்பற்ற உடலுறவு, பிறரின் குருதியை உரிய பரிசோதனை இல்லாமல் செலுத்துவது, எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்திய ஊசியை சரியான முறையில் சுத்திகரிக்காமல் மீண்டும் பயன்படுத்துவது போன்றவற்றால் மட்டுமே பரவும் எனவும், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பு காட்டி அவர்களுடன் தங்கி இருப்பதால் மற்றவர்களுக்குப் பரவும், அபாயம் இல்லை எனவும் மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதனால், பல்வேறு நாடுகளில் இந்த நோய் மீது இருந்த தவறான கண்ணோட்டம் நீங்கியது. இந்த நோயை முழுமையாகக் குணப்படுத்த முடியாவிடினும், நோயுடனே நீண்ட ஆயுளுடன், குடும்பம் மற்றும் நண்பர்களின் அரவணைப்போடும் அவர்கள் வாழ இதனால் வழிபிறந்தது.

இந்த நிலையில், சிங்கப்பூர் நாட்டுக்குள் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் நுழைய, கடந்த இருபது ஆண்டுகள் காலமாக நீடித்து வந்த தடை, கடந்த ஏப்ரல் மாதம் முதல் நீக்கப்பட்டு விட்டதாக அந்த நாட்டு அரசு செய்தி வெளியிட்டுள்ளது. எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களையும் 4 வாரம் முதல் 3 மாதம் வரை சுற்றுலாப் பயணிகளாக தங்கியிருக்க அனுமதித்துள்ளதாக சிங்கப்பூர் அரசு அண்மையில் தெரிவித்துள்ளது. எனினும், அவர்கள் வேலைக்காகவோ அல்லது குழந்தைகளின் கல்வியைக் கவனித்துக் கொள்ளவோ, மூன்று மாதத்துக்கும் மேலாகவோ, நீண்ட காலத்துக்கு அங்கேயே தங்குவதற்கு இருக்கும் தடை நீக்கப்படவில்லை.

சிங்கப்பூரின் குடிமக்களில் சுமார் ஐந்தாயிரம் பேர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள், அதற்கான சிகிச்சையை அங்கேயே பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 68 பேர் படுகொலை

மைடுகுரி, செப்.3
நைஜீரியாவில் 68 கிராமவாசிகளை போகோ ஹராம் பயங்கரவாதிகள் படுகொலை செய்ததாக அந்த நாட்டின் போர்னோ மாகாண ஆளுநர் காஷிம் ஷெட்டிமா தெரிவித்துள்ளார். அந்த மாகாணத்தின் தொலைதூரக் கிராமமான பானுவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார். நைஜீரியாவில் கடந்த 6 வருடங்களாக நடைபெற்று வரும் பயங்கரவாதச் செயல்களில் இது வரை சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமில்நகர் முதலாம் குறுக்குத்தெரு இனியாவது புனரமைக்கப்படுமா?

மன்னார் நகர பொதுவைத்தியசாலைக்கு மிக அருகில் அமைந்திருக்கும் எமில்நகர் முதலாம் குறுக்குத் தெரு மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளது. இந்த வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என பலதரப்பினரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியானது களிமண் இடப்பட்டு அதன்மேல் செம்மண் போடப்பட்ட வீதியாகும். இதனால் மழை காலங்களில் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. மன்னாரில் உள்ள பெரும்பாலான சிறுசிறு வீதிகள் கூட புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கொங்கிறீட் போடப்பட்டுள்ள நிலையில் எமில்நகரின் முதலாம் குறுக்குத்தெரு சுமார் 30 வருடங்களாகக் கவனிக்கப்படாது மோசமான நிலையில் காணப்படுகின்றது. காலம் காலமாக வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்காக அரசு ஒதுக்கும் பணம் எங்கே சென்றது என்ற காரணங்களுக்கு விடையறியாத நிலையில் உள்ளோம். எமது வீதியை திருத்தித் தருமாறு பலமுறை நாங்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு இதுவரை உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதுள்ளனர். மழை காலங்களில் ஒரு துவிச்சக்கரவண்டியில் கூட எமது வீதியால் பயணிக்கமுடியாத நிலை உள்ளது. பாடசாலை மாணவர்கள் சீருடையில் செம்மண் படிந்த நிலையிலும் காலணிகளை கையில் ஏந்தியவாறும் பாடசாலைக்கு சென்று கல்வி கற்க வேண்டிய நிலையில் குறித்த வீதி மோசமடைந்து காணப்படுகிறது.

மழைகாலம் ஆரம்பிக்கப்போவதால் இந்த வீதியைப் பயன்படுத்தும் மக்களாகிய நாம் வீதியில் நடந்து செல்வதற்கு சிறிய சிறிய கற்களை எங்களது வீடுகளின் முன்னால் வைத்து அவற்றின் மேலாக எமது நடைப் பயணத்தை மேற்கொள்வதற்குத் தயாராகி வருகிறோம்.

எனவே தயவு செய்து எமில்நகர் வாழ் முதலாம் குறுக்குத்தெரு வாழ் மக்களாகிய எமது கஷ்ட நிலையறிந்து வீதியைச் சரியாகப் புனர்நிர்மாணம் செய்து தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மக்கள், முதலாம் குறுக்குத்தெரு, எமில் நகர்**


# பொன் நகைகள் அணிவதை எவராலும் தடுக்க முடியாது

சென்ற வாரம் 24.08.2015 இல் ஓர் அன்பர் ஆலயம் செல்கையில் நகை அணிய வேண்டுமா? எனக் கேட்டிருந்தார். அதற்கான விளக்கமாக இதனை அனுப்பியுள்ளேன். ஆலயம் என்பது மனிதரின் கவலையைப் போக்க ஓர் நம்பிக்கையான இடம். ஆனால் நல்லூர் கந்தனின் பெயரே அலங்காரக் கந்தன் என்பது தானே. முன்னோர்கள் வைத்த செல்லப்பெயர் அது. உண்மையில் இந்து மதத்தவர் கள் இந்து கலாசாரப்படி வேட்டி, சேலை உடுத்தியா போகின்றனர்? இல்லையே. ஜீன்ஸ், சேட், சுடிதார், அரைப்பாவாடை என செருப்புடன் போகும் இடம் நல்லூர் ஆலயம். இதனை முதலில் இல்லாமல் செய்யுங்கள். அவனவன் தன் வசதிப்படியே வாழ்ந்து கொள்வான். பென்ஸ் கார் வைத்துக் கொள் பவன் சாதாரண சைக்கிளில் வருவானா? சாதாரண சேலை கட்டி வந்தால் கடவுள் ஏற்க மாட்டாரா? கூறைச் சேலை, பட்டு வேட்டி அணிந்து வருபவர்களும் தங்க ஆபரணங் களை அணிந்து தமது செல்வாக்கைக் காட்டுவதற்கு ஆலயம் வருபவர்களும்தான் அதிகம். அது அவர்களது சுதந்திரம். நகைகளைக் களவு எடுப்பவன் அதனை செய்யாமல் இருக்க வேண்டும். அதற்கு அவனுக்குத் தேவையான பொருளாதாரம் இருப்பின் அவன் அதை ஏன் செய்கின்றான்? உண்மையில் ஒரு வேளை உண வுக்கு வழி இல்லாதவன் வசதி உள்ளவனிடம் பணம் கேட்டால் கொடுப்பானா? இல்லையே. ஆனால் கோயில் உண்டியலில் ஐந்நூறு ரூபா தாளாகப் போடுவான். கடவுள் கேட்டாரா? இல்லை கடவுள் என்ன பிச்சைக் காரனா? நாட்டிலே உணவுப் பஞ்சம், வேலை இன்மை என்பன இல்லை என்றால் களவுகள், கொள்ளைகள் நடைபெற சந்தர்ப்பமே இல்லை. வேலை வாய்ப்புக்கு தொழிற்சாலைகளை அமைத்து எல்லோருக்கும் வேலை, பொருளாதார வசதியை உருவாக்கி அனுபவிக்க எமது அரசு ஏதாவது செய்ய வேண்டும். அரசோ, அதில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகளோ, ஏழைகளை, வேலையற்றவர்களைக் கண்டு கொள்வதே இல்லை. வெளிநாடுகளில் வேலை இல்லை என்றால் வேலை கிடைக்கும் வரை அரசு அவர்களுக்கு மானியம் வழங்குகின்றது. அதனால் அடுத்தவன் பொருளை எவனும் திருட நினைப்பதில்லை. பஞ்சம் வறுமை உள்ள நாட்டிலே களவு, கொள்ளைதானே இருக்கும்! அதற்காக வசதி உள்ளவன் சுதந்திரத்தை யாரும் தவறுதலாக குறையாக சொல்வதில் அர்த்தம் இல்லை. உண்மையில் தனது அந்தஸ்து, பெருமை காட்டுபவன் உடலில் நகை அணிந்து போலிக்கௌரவம் காட்டுவது போல ஏழை, எளியவர்க்கு தன்னால் இயன்ற நிதி உதவியோ, வேலைகளோ கொடுத்து உதவி செய்தாலே அவன் உண்மையாக கௌரவிக்கப்படுவான். போகும்போது எதையும் கொண்டு போவதில்லை. இருப்பவன் இல்லாதவனுக்கு கொடுத்து வாழ்ந்தாலே மனிதர்கள் கடவுள் கிருபை பெற்றவர்களாக வாழ்வார்கள். எனது இந்தக் கருத்து மமதை கொண்ட சில பணக்காரர்களின் உள்ளத்தைச் சுடும். அதற்காக என்னை மன்னிக்கவும். சிந்தனைக்காகவே இதனைச் சொல்கின்றேன். குற்றஞ்சாட்டும் நோக்கில் சொல்லவில்லை. திருடனாய் பார்த்துத் திருந்த வேண்டும். அவனுக்கும் வருமானம் கிடைக்க வழி காட்ட வேண்டும். பெண்களுக்கு இயற்கை வழங்கிய பேராசை பொன் நகைகள் அணிவது. அதை மாற்ற முடியுமா?

**– அருண்மொழி.**




## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# தமிழருக்கான நீதி தாமதப்படக்கூடாது

**போ**ரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் வலுத்து வரும் இன்றைய சூழ்நிலையில், அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டுவரும் உள்ளக விசாரணைப் பொறிமுறையைச் செயற்படுத்துவது தாமதமடையலாம் என்று வெளியாகியுள்ள கருத்து ஏமாற்றமளிக்கிறது.

2014ஆம் ஆண்டு அமெரிக்காவால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தின் பிரகாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணைக் குழுவின் அறிக்கை கடந்த மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருந்தபோதிலும் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக ஆறு மாதங்களுக்குப் பிற்போடப்பட்டு இந்த மாதக் கூட்டத் தொடரில் அதனைச் சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

ஐ.நா. விசாரணை அறிக்கை ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது போன்று இந்த மாதக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவது உறுதி. இதில் எதுவித மாற்றமும் இல்லை. ஆனால் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமெரிக்கா மற்றொரு பிரேரணையை, அதுவும் இலங்கை அரசின் இணக்கப்பாட்டுடன் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருகிறது. இது இலங்கை அரசுக்கு ஆதரவானதாகவே அமையும் எனப் பரவலாகக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சர்வதேச விசாரணைக்குப் பதிலாக உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு கோருவதாக அமெரிக்காவின் புதிய பிரேரணை இருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவே பிரச்சினைக்குக் காரணம். அமெரிக்காவின் கொள்கை மாற்றத்துக்கு இலங்கையின் ஆட்சி மாற்றம் தான் காரணம் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனால் கடந்த காலத்தில் அதாவது மகிந்த ஆட்சியில் உள்ளகப் பொறிமுறை என்ற பெயரில் நடத்தப்பட்ட விசாரணைகள் சர்வதேசத்தை ஏமாற்றும் யுக்தியாக இருந்ததால் உள்ளகப் பொறிமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அதனையேற்க அவர்கள் தயங்குகின்றனர். மகிந்த தோற்கடிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் உள்ளகப் பொறிமுறை தொடர்பில் தமிழ் மக்கள் கொண்டிருந்த அவநம்பிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை. அதேசமயம் உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவான அமெரிக்காவின் தற்போதைய நிலைப்பாடும் இனி மாற்றமடையும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. 2014 பிரேரணையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணைக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, அந்த விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வெளிவரவிருக்கும் நிலையில் உள்ளகப் பொறிமுறைக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றொரு பிரேரணையைக் கொண்டுவருவது அமெரிக்காவின் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையைச் சந்தேகிக்க வைப்பதாக அமைகிறது.

இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கான தீர்வு சர்வதேசத்தின் கைக்குச் சென்றுவிட்ட நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைப் பதை சர்வதேசம் உறுதிசெய்யவேண்டும். போர்க்குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும். போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கழிந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை; குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை; உள்ளக விசாரணைப் பொறிமுறை அமைப்பது கூட உடனடியாக இடம்பெறுவதற்கான வாய்ப்பு இல்லை. ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் டொம் மாலி நொவ்ஸ்கி இதனை ஒத்துக் கொள்ளும் வகையில் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். இது நீதி கிடைப்பதை மேலும் தாமதப்படுத்தக்கூடியது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண சர்வதேசத்தை நம்பியிருப்பதால் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சர்வதேசம் செயற்படுவது அவசியமானதாகும். உள்ளகப் பொறிமுறை என்ற பெயரில் நீதி கிடைப் பதை மேலும் தாமதப்படுத்துவது தமிழ் மக்களின் அவநம்பிக் கையை மேலும் அதி கரிக்கவே வழிவகுக் கும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விதைத்ததே விளையும் என்பதே நியதியும் தர்மமும் ஆகுமன்றோ....!

இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை விசாரணை செய்வதற்கு, அனைத்துலக ஆணைக் குழுவை அமைப்பதற்கு, சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும்.

வடக்கு மாகாண சபையில் நேற்றுமுன் தினம்(2015.09.01 ஆம் திகதியன்று) நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் கருப் பொருள் மேற்போந்ததாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராக அனைத்துலகக் குற்றங்களைப் புரிந்தார்கள் என்று இனங் காணப்பட்ட தரப்பினருக்கு, அதற்குரிய தண் டனை வழங்கப்பட வேண்டும் என்ற தார்மீக வழி நின்று மேற்போந்த தீர்மானம் இயற் றப்பட்டிருப்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

இலங்கையின் புதிய அரசு, இந்தப் பெரு விவகாரத்தில் எவ்வாறு செயற்படப் போகிறது என்ற வினாவும், மனுநீதி மழுங்கடிக்கப்படும் பேராபத்தும் ஈழத்தமிழ் மக்களை சூழ்ந்தி ருக்கும் வேளையில் --

வடமாகாண சபையின் தீர்மானத்தை எந்த வகையிலும், வழியிலும் அனைத்துலக நாடுகள் புறந்தள்ளி விடுவதற்கு, விழுத்தி விடுவதற்கு முன்வரக் கூடாது.

மேலும், இந்த நாட்டின் ஆட்சித் தரப்புக் களால் தமிழ் மக்கள் மீது மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து விசா ரணை செய்வதற்கு, அனைத்துலகக் குற்றங் கள், மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதைகள், வன்புணர்வுகள், பலாத்காரமாக காணாமற் போகச் செய்தல், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித் தல் போன்றவற்றில் ஈடுபட்டவர்களையே, அதற் குப் பொறுப்பான தரப்புக்களையே, ஈடுபடுத்து வது மனித நீதியைப் பரிகசிப்பதாகும்.

மொத்தத்தில், தாம் சம்பந்தப்பட்ட வழக் கில் தாமே, நீதிபதியாக தீர்ப்பு வழங்கும் போக்கும் மேலெழுகிறது என்பது வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகிறது.

**அத்தோடு, அனைத்துலகக் குற்றங்களை விசாரிக்கும் சட்டப் பரிமாணம் இலங்கையின் சட்டத்தில் இல்லை என்பதையும் வடக்கு மாகாண சபையின் தீர்மானம் மிகவும் வெளிச்சப்படுத்தி உள்ளது.**

**இலங்கை அரசு சட்டம் ஒன்றை உருவாக் கினாலும் கூட, அனைத்துலகக் குற்றங்கள் குறித்து உள்ளக விசாரணையை நடத்துவது நம்பகத்தன்மை கொண்டதாக அமைய இய லாது என்றும், வடமாகாண சபையின் தீர் மானம் சுட்டிக்காட்டுகிறது.**

**வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களின் மனங் களைப் பிழிந்து கொண்டிருக்கும் போர்க் குற்றங்களை வெளிப்படுத்தினால், இலங்கை அரசுகளின், குறிப்பாக இப்போதைய அரசின் 'மானம்' கெட்டுப்போகும்; அதனால் உலகளா விய மட்டத்தில் தலைகுனியவும், பலவகை சார்ந்த பாதிப்புக்களை எதிர்கொள்ளும் (கட்டாய)நிலை உயரவும் வழி திறக்கப் போகிறதே என்ற உள்ளூர்ந்த அச்சம் புதிதா கப் பதவி ஏற்றுள்ள, "சாம்பார்" அரசைக் குலைநடுங்க வைக்கப்போகிறது.**

"அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்" என்ற அர்த்தம் மிக நிறைந்த தமிழ் முதுமொழி--

இலங்கையின் இப்போதைய அரசை, நேற்று முன்தினம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த கூட்டு அரசை, திக்குமுக்காடித் திணற வைக் கும் என்று எதிர்பார்க்கலாம்.

தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லையே! தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற ஆன் றோரின் வாக்கு, இப்போதே ரீங்காரம் இட ஆரம்பித்து விட்டது....! வேறென் சொல்ல?

# குழப்பங்களின் களமாக மாறியுள்ள இலங்கைத் தீவு

● சேரலாதன்





அடுத்தடுத்து வெளிவருகின்ற புதிய தகவல்கள் இலங்கை அரசை மட்டுமல்லாது படைத்தரப்பினர் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் குழப்பத்திலும், சந்தேகத்திலும் ஆழ்த்தி வருகின்றன.

ஏற்கனவே பிரபல றகர் விளையாட்டு வீரர் வஸிம் தாஜுதீனின் கொலை தொடர்பாக வெளிவந்து கொண் டிருக்கின்ற தகவல்கள் கடந்த மகிந்த ஆட்சியின்போது இந்த நாட்டின் சட்டதிட்டங்கள் எந்த இலட்சணத்தில் செயற்பட்டன என்பதை துலாம்பரமாக எடுத்துக் காட்டு கின்றன. குற்றவாளிகள் அரசின் ஆசீர்வாதத்தையும், ஆட்சியாளர்களின் கடைக்கண் பார்வையையும் பெற்ற வர்களாக இருந்தால் எத்தகைய தீய காரியத்தையும் செய்து முடிக்கலாம் என்பதற்கு தாஜுதீனின் கொலைச் சம்பவம் ஓர் உதாரணமாகும். இதைவிட இன்னும் ஏராளமான மர்மங்கள் துலக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

இந்த நிலையில் புலிகள் இயக்கத்தில் அதன் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் வைத்துக் கணிக்கப் பட்டவரும், பின்னர் அந்த இயக்கத்திலிருந்து பிரிந்து சென்று அரசுடன் இணைந்து கொண்டவருமான கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் புலி கள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் சாவு தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கையில் மட்டு மல்லாது வெளிநாடுகளிலும் அதிர்வலைகளை ஏற் படுத்தியுள்ளன. இறுதிப்போரில் புலிகள் தோற்கடிக்கப் படுவதற்கு கருணா அந்த இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றதும், அரச படைகளுக்குப் புலிகள் தொடர்பான போர் இரகசியங்களை வெளியிட்டதும் பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன. கருணாவை ஒரு இனத் துரோகி என்ற வகையிலேயே தமிழ் மக்கள் பார்த்தனர். ஆனால் அவர் இன்று தமக்குத் தேசியப்பட் டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கவில்லை என்பதால் விரக்தியடைந்துள்ள நிலை யில் வாய்க்கு வந்தபடி ஏதேதோ உளறிக் கொண் டிருக்கின்றார். இதில் பிரதான இடத்தை வகிப்பது பிர பாகரன் தொடர்பாக அவர் தெரிவித்துள்ள சில கருத் துக்கள் எனக்கொள்ளலாம். இறுதிப் போரின்போது பிர பாகரன் தமது கைத்துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனவும், அவ ரது மனைவியும், மகளும் படையினரின் ஷெல் வீச்சில் சாவடைந்ததாகவும் தமிழ்நாட்டிலிருந்து வெளி வரு கின்ற ஊடகம் ஒன்றுக்கு கருணா வழங்கிய செவ்வி யில் தெரிவித்துள்ளார். அத்துடன் பிரபாகரனை அவர் வெகுவாகப் புகழ்ந்து தமது கருத்துக்களைத் தெரிவித் துள்ளார். கருணாவின் இந்தத் திடீர்மாற்றம் இலங்கை யின் பாதுகாப்புத் தரப்பினரை வெகுவாகக் குழப்ப மடையச் செய்துள்ளது. அத்துடன் இறுதிப்போரின் போது இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பாதுகாப்புத் தரப்பின ரைப் பெரும் பதற்றத்துக்குள் தள்ளிவிட்டது. படையி னரால் புரிந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றச் சாட் டுக்கள் தொடர்பாகவும் கருணா தமக்குத் தெரிந்த வற்றையெல்லாம் வெளியே கூறிவிட்டால் நிலைமை விபரீதமாக மாறிவிடுமென்பதை இலங்கை அரசும், படைத்தரப்பும் அறியாததொன்றல்ல. போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும்போது கருணா போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் தொடர்பாகச் சாட்சியம் அளிக்க முற்படுவாரெனில் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை யும் நாம் ஒருகணம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இந்த நாட்டின் மிகமோசமான காலகட்டமாக மகிந்த ஆட்சிபுரிந்த ஒன்பது ஆண்டுகளையும் குறிப்பிட முடியும். படுகொலைகள், ஆள்கடத்தல், காணாமற் போகச் செய்தல், வெள்ளைவான் கடத்தல் சம்பவங் கள் என்பன அப்போதெல்லாம் சர்வ சாதாரண மாகவே நிகழ்ந்தன. ஆனால் இவை தொடர்பான விசாரணை களோ, அல்லது சட்ட நடவடிக்கைகளோ அரசால் முன் னெடுக்கப்படுவதுமில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப் படுவதுமில்லை. தற்போது ஆட்சி மாறிய பின்னர் தான் கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர் பான தகவல்கள் மெல்ல மெல்ல வெளிக்கிளம்பி வருகின்றன. இவை தொடர்பான நீதியான விசார ணைகள் இடம்பெறுமாயின் முன்னைய அரசில் முக்கிய புள்ளிகளாகத் திகழ்ந்த பலர் சிறைக்கம்பிகளை எண்ணவேண்டிய நிலை ஏற்படலாம். அல்லது தூக்குக் கயிற்றை அரவணைக்கவும் நேரிடலாம்.

ஆனால் நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தேசிய அரசு ஒன்றை அமைத்திருக்கும் ஜனாதிபதியும், பிரதமரும் நேர்மையாகவும், துணிவுடனும் செயற்படுவதைப் பொறுத்தே எதிர்கால நடவடிக்கைகள் அமையப் போகின் றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த கையோடு அரசியலில் இருந்து துறவறம் பூண்டு செல்ல வேண்டிய மகிந்த ராஜபக்ச பிரதமர் கனவும் கலைந்து போனபிறகும் அரசியலில் வலுகட்டாயமாக ஒட்டிக் கொண்டிருப்பது இந்த நாட்டின் சாபக்கேடே ஒழிய வேறொன்றுமில்லை. சில அரசியல்வாதிகள் மகிந்த ராஜபக்சவை விட்டால் வேறு ஆள்கள் எவருமே இந்த நாட்டில் இல்லையென்று கூறுவது வேடிக்கையானது மட்டுமல்ல அபத்தமானதும்கூட.

நாட்டில் தேசிய அரசு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அரசியலில் எப்போதுமே எதிரும் புதிருமாக விளங்கிய ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத் துள்ளமை வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு சம்பவமா கும். தேசிய அரசு நாட்டின் பிரதான பிரச்சினைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெவ்வேறு கொள் கைகளைக் கொண்டுள்ள இந்த இரண்டு பிரதான கட் சிகளும் ஒருமித்த வகையில் தீர்வைக் காணுமா என்ற சந்தேகமும் எழாமலில்லை.

இதைவிட கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக தேசிய அரசு பாரபட்சமற்ற வகையில் விசாரணைகளை மேற்கொள்ளுமா? என்ற சந்தேகமும் மக்கள் மனதில் எழாமலில்லை. ஏனென் றால் குற்றவாளிகளில் முக்கியமானவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே காணப்படு கின்றனர்.

இந்த நிலையில்தான் தாஜுதீன், புலிகளின் தலைவர் பிரபாகரன், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் தொடர்பாகப் புதுப்புதுத் தகவல்கள் வெளி வந்து குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன. இவற்றைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு அரசின் வசமே உள்ளது. குழப்பங்கள் குழப்பங்களாகவே இருந்து விட்டால் மக்களும் குழம்பிப்போய் விடுவார்கள் என்பதுதான் வேதனையான விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்புக்கு வழங்குவதே நியாயம்

எம். ஏ. சுமந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர்
(யாழ். மாவட்டம்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இது மாற்றங்கள் மிகுந்த ஒரு ஆண்டாகவே இருந்தது. முதலில் ஜனாதிபதி மாறினார். அதன் பின் அரசு மாறியது.

நல்லாட்சி மற்றும் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரும் எதிர்பார்ப்புடன், மோசடிகளிலும் குடும்ப அரசியலினும் ஈடுபட்டிருந்தவர்களை பகிரங்கமாகவும் திட்டவட்டமாகவும் பதவி இறக்கியுள்ளோம். கருத்துச் சுதந்திரம் மற்றும் சுதந்திர ஊடக செயற்பாடுகளை நிலை நிறுத்தும் எதிர்பார்ப்புடன், அரசியல் போட்டியாளர்களையும் சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பவர்களையும் ஊடக செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களையும் இரும்புக் கரத்தால் அடக்கி, ஒடுக்கி வந்த ஒரு கும்பலை நாம் ஆட்சியில்



இருந்து விரட்டியுள்ளோம்.

இராஜதந்திரம், விட்டுக்கொடுத்தல், ஆக்கபூர்வ மற்றும் அர்த்தமுள்ள சர்வதேச தொடர்பாடல்கள் மீது அமையப் பெற்றதொரு சிறந்த அரசியல் கலாசாரத்தை கொண்டு வரும் எதிர்பார்ப்புடன், சர்வதேச தொடர்புகளை பகைமை மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாக வேகமாக இழந்து வந்ததொரு தான்தோன்றித்தனமான அரசை நாம் தோல்வியுறச் செய்துள்ளோம்.

தேசியப் பிரச்சினைக்கு இறுதியாக ஒரு தீர்வைக் காணும் அவா மற்றும் பொறுப்புக்கூறல், மீளிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்தும் எதிர்பார்ப்புடன், இவை தொடர்பாகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு ஆக்கபூர்வமான விதத்தில் கலந்துரையாட மறுத்து வந்ததோடு மட்டுமன்றி, இலங்கையில் வாழும் இனங்களிடையே நல்லுறவைப் பாழாக்கி, திட்டமிட்டே பகைமையைத் தூண்டிவிடும் தீய நோக்கில் இனவாத பீதிக்கு தூபம் போட்டதொரு கும்பலை நாம் அதிகாரத்தில் இருந்து இறக்கியுள்ளோம்.

இருப்பினும், எம்முடைய எதிர்பார்ப்புக்கள் மற்றும் அபிலாசைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று கூறிவிட முடியாது. நல்லாட்சி என்பது ஒரு தேசத்தவர் என்ற அடிப்படையில் இன்னமும் செயற்படுத்தி பார்க்க வேண்டிய கோட்பாடாகவே இங்குள்ளது. தமிழ் தேசிய பிரச்சினையும் இன்னமும் தீர்க்கப்படாமல் பூதாகாரமாகவே இருக்கின்றது. மேலும், பொறுப்புக்கூறல் விடயத்தில் புதிய அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுமா என்பதையும் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

இருப்பினும், இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நல்ல தொரு வாய்ப்புக் கிட்டியுள்ளமையை எவரும் மறுக்க முடியாது. ஊழல், மோசடி நடைபெற்றால், அதற்கு எதிராக எமது குரலை எழுப்பும் அச்சமற்றதொரு சூழல் தற்போது உருவாகியுள்ளது. பழி வாங்கப்படுவோம் என்ற பயமின்றி எமது ஜனாதிபதியையும் அரசையும் விமர்சிக்கும் துணிவு எமக்கு இப்போது ஏற்பட்டுள்ளது.

சுருங்கக்கூறின், அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், எம்முடனும் சர்வதேச சமூகத்துடனும் தமிழர் பிரச்சினை, பொறுப்புக் கூறல் மற்றும் உண்மையான மீளிணக்கம் ஆகியவை தொடர்பாக ஆக்கபூர்வமாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் கலந்தாலோசிப்பதற்குத் தயாராகவுள்ளதொரு அரசு தற்போது ஆட்சிக்கு வந்துள்ளது.

இலங்கையில் மீளிணக்கத்தை முன்னெடுப்பதற்கு தற்போது ஒரு வித்தியாசமான வாய்ப்பும் வித்தியாசமானதொரு களநிலைமையும் உருவாகியிருப்பதை நாம் இனங்கண்டுள்ளோம் என அண்மையில் இலங்கைக்கு வருகைதந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஸ்வால் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பிஸ்வால் குறிப்பிட்டதுபோல இந்த நல்ல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது. எனவே, இந்த வாய்ப்பை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வது மிக முக்கியமாகும். நாம் தற்போது மிகுந்த நம்பிக்கையோடு இருப்பதாகக் கூறிக்கொள்ளும் அதேவேளை, நாம் காண வேண்டிய நல்ல மாற்றங்கள் அனைத்தையும் நாம் இன்னமும் காணவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவரை நியமிக்கும் விடயத்தில் காணப்படுகின்ற இழுபறி நிலை இதற்கான ஒரு சிறு உதாரணமாகும்.

2015 ஜனவரி 8 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன அவர்களின் வெற்றியைத் தொடர்ந்து, சபாநாயகருக்குக் கடிதமொன்றை எழுதிய இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒரு ஆலோசனையை முன் வைத்தது. அதில், ஜனாதிபதித் தேர்தலின் பின், ஏனைய பிரதான கட்சிகள் தேசிய அரசு ஒன்றை அமைக்க முடிவு செய்திருப்பதால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரை எதிர்க்கட்சித் தலைவராகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எழுதிய கடிதத்தில் நாடாளுமன்றத்தில் (அத்தருணத்தில்) இருந்த 4 பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி (UNP), ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி (UPFA), இலங்கைத் தமிழரசுக் கட்சி (TNA) மற்றும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு (DNA) ஆகியவற்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமே அரசுக்கு வெளியே இருந்தது. அரசுக்குத் தலைமை வகித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு மற்றைய இரு கட்சிகளும் ஆதரவு வழங்க முடிவு செய்திருந்தன.

ஆனால், மேற்படி கோரிக்கைக்கு அப்போதைய சபாநாயகர் சமல் ராஜபக்ச எவ்வித பதிலையும் தெரிவிக்கவில்லை. அவருடைய போக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியை உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியாக ஏற்றிருந்தமையே தென்பட்டது.

ஓகஸ்ட் 17 பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன் தற்போதும் இதே போன்றதொரு நிலை உருவாகியுள்ளது. கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அறிக்கையை விடுத்தது. அதில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

கடந்த ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியானது நாடாளுமன்றில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற கட்சியாகக் காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது இரண்டாவது அதிகப்படியான ஆசனங்களைப் பெற்ற கட்சியாக உள்ளது. தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆகிய இரண்டு கட்சிகளிலும் போட்டியிட்டுத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமையவுள்ள தேசிய அரசின் அமைச்சரவையில் அமைச்சர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆகிய இரு கட்சிகளும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பாளிகளாக உள்ளன. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் என்ற அடிப்படையில் அமைச்சரவையின் தீர்மானங்களுக்கு வெளிப்படையாக தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்த ஆதரவானது நாடாளுமன்ற அமர்வுகளில் அரசோடு வாக்களிப்பதையும் உள்ளடக்கும்.

எனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது எதிர்க்கட்சியில் அமரும் என்ற கூற்றுக்கே இடமில்லை. மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே காணப்படுகின்றார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சிகள் என்ற அங்கீகாரம் இல்லை.

இந்தச் சூழ்நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியானது 16 ஆசனங்களோடு எதிர்க்கட்சியில் பெரும்பான்மை வகிக்கும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனடிப்படையில் நாடாளுமன்ற சம்பிரதாயத்தின் பிரகாரம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அவர்களுக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி சிறிசேன அவர்களும் அரசும் தமிழ் மக்களை இந்த நாட்டில் சம உரிமை உள்ள பிரசைகளாக நடத்த பகிரங்கமாக உறுதியளித்துள்ளனர். எனினும் ஜனநாயக ரீதியில் வடக்கு–கிழக்கு தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகளை பிரதான எதிர்க்கட்சியாக ஏற்றுக்கொள்வதில் தயக்கம் இருந்தால் அது இந்த உறுதியில் ஒரு நிலையற்ற தன்மையையே பிரதிபலிக்கும்.



நியாயமான அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வை எட்ட அரசுக்கும் ஜனாதிபதிக்கும் உண்மையான உறுதி இருந்தால் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரை கட்டாயமாக எதிர்க்கட்சித் தலைவராகஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

இந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் இந்த நாட்டு மக்கள் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிச் செல்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை வீணாக்க வேண்டாம் என ஜனாதிபதியையும் அரசையும் நாம் வலியுறுத்த விரும்புகிறோம். தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் உறுதியாக அவர்கள் இருந்தால், அவர்களின் செய்கைகள் இதைப் பிரதிபலிக்க வேண்டும். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுதி இன்றும் நிலையாகவே இருக்கின்றது.

ஒரு தேசம் என்ற அடிப்படையில் ஒருவாறு உண்மையான அமைதி மற்றும் மீளிணக்கத்தை அடையும் நிலையை நாம் தற்போது அண்மித்துள்ளோம். தேசியப் பிரச்சினை மற்றும் பொறுப்புக் கூறல் உட்பட்ட பல சவால்களை வெல்வதற்கான கடப்பாட்டையும் வாய்ப்பையும் இந்த நாட்டு மக்கள் ஒன்றிணைந்து உருவாக்கித் தந்துள்ளனர். இலங்கை மக்கள் அனைவரும் ஏற்கும் விதத்தில், தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமான விதத்தில் இணைந்து செயற்பட்டு மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அடைவதற்கான கலப்பற்ற ஆர்வத்தை ஜனாதிபதி அவர்களும் புதிய அரசும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நிலையில் இதுவரை அடைந் துள்ள முன்னேற்றங்களை இழந்துவிடுவது எவ்வகையிலும் விவேகமான செயலாகாது.

நாடாளுமன்றத்தில் எதிர்வரிசையில் அதி கூடிய எண்ணிக்கையான ஆசனங்களைப் பெற்றுள்ள கட்சி எது என்ற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைமை முடிவு செய்யப்படுதல் வேண்டும். அவ்வளவே. சர்வ நிச்சயமாக இதில் அவ்வாறானதொரு நாடாளுமன்றக் குழுத்தலைவரின் அல்லது அவர் பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரிவின் இனம் என்ன என்பதை நோக்க வேண்டிய அவசியம் கிடையாது. நிலைமை அவ்வாறிருக்க, நாடாளுமன்ற சம்பிரதாயமும் நடைமுறை வழக்கமும் தெளிவாகக் கூறும் விதத்தில் செயற்பட இந்தளவு தயக்கம் காட்ட வேண்டிய அவசியம்தான் என்ன? குறிப்பாக அவ்வாறு தகுதி பெறும் ஒரு தலைவர் தமிழினத்தை சேர்ந்தவராகவும், அவர் சார்ந்த கட்சி தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு கட்சியாகவும் இருக்கும் போது மட்டும் இவ்வாறு தயங்குவானேன்? இதற்கான உண்மையான காரணம், இலங்கை வாழ் மக்கள் பிரிவுகளிடையே இலைமறைகாயாக மறைவாக உள்ள அவநம்பிக்கை மற்றும் பதற்றத்தைத் தவிர வேறு ஏதாவதாக இருக்க முடியுமா?

இனவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், தேசிய பிரச்சினை மற்றும் பொறுப்புக் கூறல் உட்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான விதத்தில் தமிழ் மக்களுடன் கலந்தாலோசிப்பதற்கு குறைந்த பட்சம் விருப்பமாவது தெரிவிக்கும் ஒரு அரச நிர்வாகத்தை ஏற்படுத்தும் நோக்குடன், கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களை கேட்டுக் கொண்டது.

இந்தக் காரணங்களுக்காகவே தமிழ் மக்கள் சிறிசேன அவர்களுக்கு அபரிமிதமாக வாக்களித்தனர். இதற்கான முதல் எட்டைத் தமிழ் மக்கள் அவ்வாறு முன்னெடுத்தனர். இந்த நம்பிக்கையைக் காப்பதற்கு தயார் என ஜனாதிபதி சர்வதேச சமூகத்துக்கும் நாட்டுக்கும் உறுதியளித்தார். இந்த உறுதி அவருடைய செயலிலும் வெளிப்பட வேண்டியது கட்டாயமாகும். ஒரு நபரை ஜனாதிபதி ஆக்கும் அளவுக்குத் தமிழ் மக்கள் அவரை நம்பினார்கள். ஆனால் அவர்களுடைய பிரதிநிதிகள் எதிர்க்கட்சியாக கடமை புரிய இடமளிப்பதற்குக் கூட அவர் தமிழ் மக்களை நம்பவில்லை என்று கூறுவதற்கு ஜனாதிபதியவர்கள் இடமளித்து விடக் கூடாது.

இதற்கு முன்பிருந்த அரசின் இனவாத, அச்சுறுத்தலை அடிப்படையாகக் கொண்ட பகைமை அரசியல் தமக்குத் தேவையில்லை என்பதை ஒரு தேர்தலில் அல்ல இரு தேர்தல்களில் இந்த நாட்டு மக்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்துள்ளனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் மக்களின் அந்த அபிலாசையை ஜனாதிபதியவர்களும் அரசும் பிரதிபலிக்க வேண்டும். அரசின் முகங்கள் மாறுவது மட்டுமே போதுமானதாக ஆகாது. எண்ணப்பாடு மற்றும் மனோபாவத்திலும் உண்மையான மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால், நாம் எமது வாக்குகளை எதற்காக அளித்தோமோ, அந்தக் கொள்கை மாற்றங்கள் மற்றும் நல்லாட்சி ஒரு போதும் ஏற்படாது. நாம் எவ்வளவோ மாற்றி விட்டோம். இனி இதுவும் மாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 8 | | | 1 | | |
| | | | 7 | | | | | |
| | 6 | 2 | | 4 | 3 | | 7 | |
| | | | | | | | 6 | 7 |
| 3 | | 6 | | | | 5 | | 2 |
| 8 | 4 | | | | | | | |
| | 9 | | 3 | 5 | | 7 | 1 | |
| | | | | | 2 | | | |
| | | 7 | | | 9 | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 1 | 2 | 9 | 7 | 4 | 6 |
| 1 | 2 | 7 | 3 | 4 | 6 | 9 | 8 | 5 |
| 9 | 4 | 6 | 7 | 5 | 8 | 3 | 2 | 1 |
| 3 | 1 | 2 | 5 | 7 | 4 | 8 | 6 | 9 |
| 4 | 6 | 8 | 9 | 1 | 3 | 5 | 7 | 2 |
| 5 | 7 | 9 | 6 | 8 | 2 | 1 | 3 | 4 |
| 2 | 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 5 | 7 |
| 7 | 9 | 4 | 8 | 6 | 5 | 2 | 1 | 3 |
| 6 | 5 | 1 | 2 | 3 | 7 | 4 | 9 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண் டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## உருவங்களது தளம் இதயம்

இந்த மாய உலகிலே நாம் பல வித்தியாசங்களைக் காணுகின்றோம். நல்லது கெட்டது, பாவம், நேர்மை, உண்மை, பொய், இன்பம் துன்பம்.

இந்த வேறுபாடுகள் எல்லாம் சிந்தையால் உருவாக்கப் பட்டவை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

இருதய மட்டத்தில் நாம் இத்தகைய எதிர்ச் சொல் வேறுபாடுகளைக் காணமுடியாது. இதயத்துக்கு உரு இல்லை. ஆனால் அது எல்லா உருவங்களது தளமாக இருக்கின்றது.



சாயி சிந்தனை

## சோர்வடையும் பெண்களா நீங்கள்?

வெளித் தோற்றத்தின் மேல் அதீத அக்கறை காட்டுவதில் பெண்கள் மிகவும் கவனமாக இருப்பார்கள். அதனால் கொஞ்சம் உடல் நிறை கூடினாலும் களைப்பாக இருக்கிறேன் என எதையாவது பின் பற்றத் தொடங்கிவிடுவார்கள். பெண்கள் உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில் தங்களுக்கே தெரியாமல் பல தவறுகளை செய்கின்றனர். அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளப்படும் எந்த ஒரு உணவும் தங்கள் உடலுக்கு கெடுதல் தரும் என்பதை பெண்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். அதேபோல உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில் உங்கள் உடலுக்குத் தேவையான உணவுகளை அறவே ஒதுக்குவதும் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். ஓலிவ் எண்ணெய் உடல் நலத்துக்கு நல்லது தான். ஆனால் நிறையப் பெண்கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் அளவுக்கு அதிகமாக ஒலிவ் எண்ணெயை சேர்த்துக் கொள்கின்றனர். இதனால் உடல் நிறை குறையாது, அதிகரிக்கும், ஒலிவ் எண்ணெயை ஒரு கரண்டி அளவில் மட்டுமே பயன்படுத்த வேண் டும். அதிகமாகப் பயன்படுத்த வேண்டாம். சில பெண்கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் பெரும்பாலான சத்துமிக்க பழங்களையும், அதில் கொழுப்புச்சத்து இருக்கிறது எனத் தவிர்த்து விடுகின்றனர். பழங்களில் உள்ள அனைத்துச் சத்துக்களும் உடலுக்கு தேவைப்படுபவை என்பதைப் பெண்கள் உணர வேண்டும். அப்பிள், திராட்சை போன்ற பழங்கள் உணவுக் கட்டுப்பாட்டுக்கும் நல்லது. உங்கள் உடல் நலத்துக்கும் நல்லது. பெண் கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் செய்யும் மிகப்பெரிய தவறு, உடல் நிறையைக் குறைக்கிறேன் என்று குறைவாக உணவைச் சாப்பிடுவது மற்றும் அதிகமாக உடற்பயிற்சிமேற்கொள்வது. உடற்பயிற்சி மேற் கொண்டால் அதற்கு ஏற்ப உணவைச் சாப்பிடுவதும் அவசியம்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பிரதிபலன் எதிர்பாராமல் செய்யும் உதவியே சிறப்பானது

பிரதிபலன் எதையும் கருதாமல் நாம் உலகுக்குச் செலுத்தும் ஒவ்வொரு நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகிறது. இந்த நல்லெண்ணமே பாவ புண்ணிய பலன்களில் இருந்து எம்மை விடுவிக்கிறது.

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிகரமான வாழ்க்கைக்குரிய முழு இரகசியம். இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் வாழ்வில் மலர்ச்சி உண்டாகும்.

சமநிலையில் இருந்து பிறழாதவர்கள், நெஞ்சில் சாந்தகுணம் கொண்டவர்கள், இதயத்தில் இரக்கமும் அமைதியும் உடையவர்கள், பிறர் சொல்வதை ஆராய்ந்து ஏற்பவர்கள் ஆகியோர் தங்களுக்கு தாங்களே நன்மையைத் தேடிக்கொள்கிறார்கள்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 60 | 40 | 50 | 30 |
| கத்தரி | 80 | 80 | 100 | 80 | 80 | 60 | 60–80 | 35–40 |
| கரட் | 100 | 140 | 120–160 | 100 | 100–160 | 160 | 120–140 | 130 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50–60 | 50 | 80 | 40 |
| பயிற்றை | 30 | 40 | 60 | 20 | 70–80 | 30 | 100–120 | 30 |
| பாகல் | 100 | 100 | 80 | 80 | 100–120 | 120 | 100 | 60–70 |
| கருணைக்கிழங்கு | 90 | 100 | 80 | 120 | 80–90 | – | 120 | 60–80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 100 | 100–110 | 130 | 100–120 | 95 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 80 | 90 | 70–80 | 120 | 100–120 | 50–60 |
| பூசணி | 40 | 40 | 40 | 30 | 30–40 | 40 | 50–60 | 25 |
| தக்காளி | 80 | 80 | 80 | 70 | 70–80 | 60 | 80–100 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 70 | 50–60 | 40 | 50–60 | 30 |
| கீரை | 20 | 30 | 30 | 10 | 25–30 | 20 | 35–40 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 25–30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 130 | 180 | 160 | 100 | 120 | 120–140 | 100 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 40–60 | 40 | 60–80 | 30 |
| கோவா | 70 | 80 | 60 | 80 | 70–80 | 80 | 80–100 | 40 |
| வெண்டி | 30 | 40 | 30 | 30 | 60–80 | 60 | 50 | 25 |
| போஞ்சி | 160 | 140 | 160 | 160 | 140–160 | 200 | 120–140 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 80 | 80–100 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 40–50 | 40–60 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 80–120 | 90 | 80–100 | 90–100 |
| தேசிக்காய் | 80 | 120 | 140 | 70 | 80–100 | 140 | 160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 15–20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 100 | 160 | 120 | 120–140 | 100 |
| இராசவள்ளி | 270 | – | – | 160 | 120 | – | 180 | 80 |

### நாளை

ஆவணி–18
வெள்ளிக்கிழமை
04.09.2015

*திதி: ஷஷ்டி மு.ப.11.38 வரை*
*நட்சத்திரம்: பரணி மு.ப.07.47 வரை*
*சுபநேரம்: 06.05–07.35 வரை*
*இராகுகாலம்: 10.35–12.05 வரை*

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 700 | 600 | 500 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 600 | 600 | – |
| பாரை | 650 | 500 | 500 | 700 | 600 | 450 |
| சுறா | 600 | 600 | – | 700 | – | – |
| சீலா | 500 | 400 | 400 | 450 | 450 | 350 |
| விளை | 700 | 450 | 400 | 500 | 400 | 350 |
| குரல் | 300 | 400 | 350 | 450 | 400 | – |
| கும்பிளா | 450 | 450 | 400 | 400 | 400 | 300 |
| விளாக்கன் | 550 | 800 | 300 | 500 | – | – |
| ஒரா | 400 | 350 | – | 350 | 500 | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 250 | 250 | 250 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 250 | 300 |
| சூடை | 150 | 200 | 150 | 200 | 100 | 70 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 200 | 350 | 250 |
| திருக்கை | 150 | 300 | 300 | 300 | 300 | 140 |
| பாலை | 400 | 350 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | – | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 200 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | – | 250 | 400 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

**‘S’ எழுத்தை பெயரின் முதல் எழுத்தாகக் கொண்டோர் தனித்தன்மை கொண்டவர்கள்**

முன்ஜாக்கிரதை, சிக்கனம், பிறர் பிரச்சினைகளில் தலையிடாத தன்மை, நிதானம், நிலைத்த செயல்பாடு எனத் தமக்கென்று தனிப் பாணி வகுத்துக் கொள்பவர்கள் தான் S என்ற எழுத்தில் பெயர் தொடங்குபவர்கள். இந்த எழுத்தில் சூரியக்கதிர்கள் பட்டு முன், பின் செல்வதால் இவர்களை எவராலும் அடக்க முடியாது. நேர்மை, நீதி, நியாயத்தை மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் இவர்கள் தமக்கென்று வரும்போது விதிவிலக்கு கேட்பார்கள். அடிக்கடி கோபம் வரும். ஆனாலும், தமக்குக் கீழ் பணிபுரியும் பணியாளர்களை நேயத்துடன் நடத்துவது போல பாசாங்கு செய்வர். இறை நேயம், வாக்குச்சுத்தம் இவர்களை மேலோங்கி நிற்கச் செய்யும். வயது முதிர்ச்சியடைந்தவர்களிடம் மிக மரியாதையுடன் நடந்து பெயர் பெறுவர். எங்கு சென்றாலும் தமக்கென்று ஓர் இடத்தை தக்க வைத்துக்கொண்டு செயல்படுவர். யானை போன்ற வேகமும், மலை போன்ற குணாதிசயமும் இவர்களைத் தனித்துக் காட்டும்.

பூசை, ஆசாரம், அனுட்டானம் இவற்றில் அதிக நம்பிக்கையுடைவர்கள். அதே சமயம் பணியில் கடும் சிரத்தையுடன் இருப்பர். செய்யும் தொழிலே தெய்வம், கோயிலுக்கு சென்றால் தான் சாமியா என்று மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வர். ஆனால், இவர்கள் மட்டும் கோயில், குளம் என்று சுற்றித்திரிவர். எதையும் விடாப்பிடியாக முடித்து வெற்றி காண்பர். புகழ்ச்சிக்கு அடிபணிவதால் இவர்களைச் சிலர் நன்கு பயன்படுத்திக் கொள்வர். மக்கள் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவர். நாட்டுப்பற்றுக் கொண்டவர்கள். வாழ்வில் உயர்வுகள் படிப்படியாக வரும். தமக்குத் தீங்கிழைப்பவர்களை அடையாளம் கண்டு கொள்வார்கள் என்பதால், எதிரிகளால் இலேசில் இவர்களை வெல்ல இயலாது. தர்மசீலர்களான இவர்களுக்கு உணவுப்பஞ்சம் இல்லை. தோல் ஒவ்வாமையாலும், நீரிழிவு நோயினாலும், நீர் சம்பந்தமான நோயினாலும் அவதியுறுவர். இதற்கு உணவுக் கட்டுப்பாடே சிறந்த வழியாகும். பல பொது நிறுவனங்களில் கௌரவத் தலைவர்களாக இருந்து நற்காரியங்களால் மக்களைக் கவரும் இந்த நீதிமான்கள் உடை அணிவதில் தனிக்கவனம் செலுத்துவர்.



வெள்ளை நிறத்தை அதிகம் விரும்புவர். சைவ உணவே உயர்ந்தது என்பர். எதிலும் நுட்பத்துடன் செயல்படுவதால் இவர்களிடம் ஆலோசனை கேட்க பிரபலங்கள் கூடத் தயங்குவதில்லை. பொருளாதாரக் குறைபாடு அதிகமாக ஏற்படுவதில்லை. யாரோ ஒருவரின் பணமாவது புரண்டு கொண்டே இருக்கும். பேச்சினால் எவரையும் கவரும் இவர்கள் ஆன்மிகத்திலும் சாதனை படைப்பர். பொருளாதாரத் துறையிலும், அரச பதவிகளிலும், உணவகத் துறையிலும், விஞ்ஞானிகளாகவும் மிளிர்வர். காட்டுக்குள் வீடு கட்டி இயற்கையை இரசிப்பதில் ஆர்வமாக இருப்பர். தனித்தன்மையுடைய இவர்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படுவர்.

# குடும்ப மகிழ்ச்சியின் இரகசியம்

சண்டை போடாத தம்பதியர் எவருமே இருக்க மாட்டார்கள். சண்டை இல்லாவிட்டால் வாழ்க்கை உப்புச் சப்பில்லாத உணவாகப் போய் விடும். தம்பதியரிடையே சண்டை வரப் பல காரணங்கள் இருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சினை, உறவினர்களைக் கவனிப்பது, தாழ்வு மனப்பான்மை, சந்தேகம் போன்ற காரணங்களினால் சண்டை ஏற்படும். தவிர்க்க முடியாத காரணங்களினால் சண்டை ஏற்பட்டால் பேசாமல் மட்டும் இருந்து விடாதீர்கள். அப்புறம் அதுவே விரிசலுக்குக் காரணமாகி விடும் என்கின்றனர் நிபுணர்கள்.

**தகவல் தொடர்பு குறை**

தம்பதியரிடையே பேச்சுக் குறைந்தாலே ஏதோ சிக்கல் என்று அர்த்தம். இதுவே சண்டைக்கு முதல் விதையாக அமைகிறது. எனவே எதுவானாலும் ஒருவருக்கொருவர் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். இதனால் பிரச்சினை ஏற்பட வாய்ப்பே இல்லை.

நான் சொல்வது தான் சரி என்று எப்போதும் நிற்காதீர்கள். வாழ்க்கைத் துணை என்ன சொல்ல வருகிறார் என்பதைக் காது கொடுத்துக் கேளுங் கள். இதனால் இணக்கம் அதிகமாகி சண்டை ஏற்படுவது தவிர்க்கப்படும்.

**பொருளாதாரப் பிரச்சினைகள்**

தம்பதியரிடையே சண்டை வர முக்கிய காரணியாகப் பணப் பிரச்சினை முன்நிற்கும். அதிகம் செலவு செய்வது யார் என்பதில் தொடங்கி, எதனால் செலவு ஏற்படுகிறது என்பது வரை அலசி ஆராய்ந்து சண்டை போடுவார்கள். எனவே பணத்தை வெளிப்படையாகக் கையாளுங்கள். சண்டை ஏற்பட வாய்ப்பே இல்லை.

**உறவுகளைக் கவனிப்பது**

மனைவி வீட்டு உறவுகளோ, கணவர் வீட்டு உறவுகளோ இருவரையும் சமமாக மதிக்கும் பட்சத்தில் எந்தவிதப் பிரச்சினைகளும் எழ வாய்ப்பே இல்லை. தனது வீட்டு உறவுகளை மட்டும் மதித்து விட்டு துணையின் வீட்டு உறவுகளைத் தவிர்த்தால் நிச்சயம் சண்டை ஏற்படும் என்கின்றனர் நிபுணர்கள்.


**சமாதானமாகி விடுங்கள்**

சண்டை வந்தால் அதை வெளிப்படுத்தி விடுங்கள். மௌனமாக இருந்து விட்டால் பின்னர் சிக்கல் அதிகமாகி அதுவே தீர்க்க முடியாத பிரச்சினையாகிவிடும். ஏனெனில், மௌனம் என்பது ஒரு கூர்மையான ஆயுதம். அதனை முறையான, சரியான விடயத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். கணவன்–மனைவிக்குள் சண்டை வரும் சமயத்தில் இருவரும் மௌனமாகிவிடுவது பெரும் ஆபத்தாகும். தேவையற்ற எண்ணங்கள் மனதில் தோன்றிப் பின்னர் இருவருக்கும் இடையே எதிர்மறை எண்ணங்கள் குடியேறக் காரணமாகிவிடும்.




**தற்பெருமை வேண்டாம்**

தம்பதியர் இருவரும் மௌனமாக இருப்பதால் யார் முதலில் பேச்சைத் தொடங்குவது என்பதில் தற்பெருமை வளர்ந்து வெட்ட முடியாத பெரிய மரமாக மாறிவிடும். இருவரும் பேசாமல் இருக்கும் பொழுது, இனிமேல் அவராக வந்து பேசினாலும், பேசக்கூடாது என்ற நிலைமைக்குப் போய்விடுவார்கள். அதற்குப்பின் சமாதானம் என்பது மிகவும் கஷ்டப்பட்டு அடைய வேண்டிய விடயமாகி விடும். எனவே ஏதாவது பிரச்சினை என்றால் திட்டுங்கள், நன்றாக சத்தம் போட்டு சண்டை போடுங்கள், எந்தச் சமயத்திலும் பேசாமல் மட்டும் இருக்கவே இருக்காதீர்கள். சில மணிநேரம் கழித்து ஏதாவது சாக்கு வைத்து பேசி சமாதானத்துக்கு வழி தேடுங்கள். இது தான் உண்மையான தாம்பத்தியத்துக்கு வெற்றி என்கின்றனர் நிபுணர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆங்கிலம்

இங்கிலாந்தில் தோன்றிய மொழி ஆங்கிலம். இங்கிலாந்தில் மட்டுமன்றி, ஐக்கிய இராச்சியத்தின் ஏனைய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, அயர்லாந்து, தென்னாபிரிக்கா ஆகிய நாட்டு மக்களின் தாய்மொழியாகவும் அது விளங்குகிறது. பொதுநலவாய (கொமன்வெல்த்) நாடுகளில் இந்த மொழி பரவலாகப் பேசப்படுகிறது. சீனம், எசுப்பானியம்(ஸ்பானிஷ்), ஹிந்தி ஆகிய மொழிகளுக்குப் பின் அதிகம் பேசப்படும் மொழி ஆங்கிலம். 380 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் ஆங்கிலம் பேசப்படுகின்றது. அது மட்டுமல்லாது, உலகின் அதிகளவானோரால் கற்கப்படும் 2 ஆவது மொழியாகவும் உள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் உலகளாவியரீதியான செல்வாக்காலும், மருத்துவம், அறிவியல், திரைத்துறை, இராணுவ, விமான, கணினி போன்ற முக்கிய துறைகளில் ஆங்கில மொழி பேசுவோரின் ஆதிக்கம் காரணமாகவும் ஏனைய மொழிகளைவிட ஆங்கிலம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உலகின் அதிகபட்ச நாடுகளில் ஆங்கிலேயர்கள் ஆட்சி புரிந்ததால் ஆங்கிலம் ஒரு உலக மொழி ஆகிவிட்டது.






# பொறுமைக்குக் கிடைத்த பரிசு



தொடர்ந்து சில வருடங்களாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவரிடம் அந்த ஊர் மக்கள் சென்றனர். ஐயா! பெரியவர்களாகிய நாங்கள் எப்படியோ பசியைப் பொறுத்துக் கொள்கிறோம். சிறுவர், சிறுமியர்கள் என்ன செய்வார்கள்? இந்த நிலையில் நீங்கள் கட்டாயம் உதவி செய்ய வேண்டும்... என்று வேண்டினார்கள். இளகிய உள்ளம் படைத்திருந்த அவர், இந்த ஊரில் குழந்தைகள் எவரும் பசியால் வாட வேண்டாம். ஆளுக்கொரு மோதகம் கிடைக்குமாறு செய்கிறேன். எனது வீட்டுக்கு வந்து மோதகத்தை எடுத் துச் செல்லச் சொல்லுங்கள்!
என்றார் அந்தப் பெரியவர். மாளிகை திரும்பிய அவர், தனது வேலைக்காரனை அழைத்து, இந்த ஊரில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொள். ஆளுக்கொரு மோதகம் கிடைக்க வேண்டும். கூடவும் கூடாது, குறையவும் கூடாது. நாளையிலிருந்து மோதகங்களைக் கூடையில் சரியான எண்ணிக்கையில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே இரு... என்றார்.
மறுநாள், வேலைக்காரன் மோதகக் கூடையுடன் வெளியே வந்தான். அங்கே காத்திருந்த சிறுவர், சிறுமியர் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கூடையை அவர்கள் முன் வைத்தான் அவன். பெரிய மோதகத்தை எடுப்பதில் ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுமி மட்டும் அமைதியாக இருந்தாள். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றாள் அவள்.

இப்படியே தொடர்ந்து நான்கு நாள்கள் நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஐந்தாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த சிறிய மோதகத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் அந்தச் சிறுமி. தனது வீட் டுக்கு வந்தவள், தனது தாயிடம் அதைக் கொடுத்தாள். அந்த மோதகத்தைப் பிரித்தாள் தாய். அதற்குள் இருந்து ஒரு தங்கக் காசு கீழே விழுந்தது.
அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு செல்வந்தரின் வீட்டுக்கு வந்தாள் சிறுமி. ஐயா இது உங்கள் தங்கக் காசு. மோதகத்துக்குள் இருந்தது. பெற்றுக்கொள்ளுங்கள் - என்றாள் அவள். மகளே! உனது பெயர் என்ன என்று கேட்டார் செல்வந்தர். சிறுமி தனது பெயர் கிருசாம்பாள் எனக் கூறினாள். மகளே உனது பொறுமைக்கும், நற்பண்புக்கும் நான் அளித்த பரிசே, இந்தத் தங்கக் காசு. மகிழ்ச்சியுடன் இதை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல் என்றார் செல்வந்தர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவள், நடந்ததைத் தனது தாயிடம் கூறினாள்.

# விடுகதைகள்

1.ஓடியாடி வேலை செய்த பின் மூலையில் ஒதுங்கிக்கிடப்பாள் அவள் யார்?
துடைப்பம்(தும்புத்தடி)

2.ஏற்றி வைத்து அணைத்தாலும் எரியும் வரை மணக்கும் அது என்ன?
ஊதுபத்தி

3.மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன?
பஞ்சு

4.தொட்டால் மணக்கும், சுவைத்தால் புளிக்கும். அது என்ன?
எலுமிச்சைப்பழம்(தேசிக்காய்)

5.எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல், அது என்ன?
விக்கல்

# சேவல்



பாஞ்சாலங் குறிச்சியிலே
வாங்கி வந்த சேவல்
பழமதுரைப் பட்டணத்தைப்
பார்த்து வந்த சேவல்
கொச்சிமலை யாளமெல்லாம்
கொடியெடுத்த சேவல்
கும்ப கோணம் தஞ்சாவூர்
குமுறி வந்த சேவல்
கொல்லிமலை குடகு மலை
கூத்தடித்த சேவல்
கொக்கரித்துப் பறந்து வரும்
குமரேசன் சேவல்
பூமியெல்லாம் சுற்றிவந்து
பொங்கி நிற்கும் சேவல்
பொன்னுருக்கு மேனி கொண்ட
புத்தம் புது சேவல்.

# பிறருக்கு உதவுவதால் கவலைகள் மறையும்



கடந்த காலங்களில் செய்த தவறுகளைப் பற்றி வருத்தப்படாதீர்கள். மற்றும் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்களது கையில் இருக்கும் நிகழ்காலத்தை வெற்றியாக்குவதில் உங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துங்கள்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் மறைமுகமான உருவத்தில் ஏற்படக் கூடிய நன்மையைப் பற்றியே எப்பொழுதும் சிந்தியுங்கள்.

நீங்கள் உங்களது வாழ்க்கையைப் பிறருடன் ஒப்பிட்டுக் கவலைப்படாதீர்கள்.

உங்களைப் புரிந்து கொண்டவர்களே உங்களுடைய நண்பர்கள் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அவர்கள் உங்களிடமிருந்து விலை எதுவும் பெறாமல் மனோதத்துவ மருத்துவரைப் போன்று உங்களது குறைகளின் பக்கம் உங்களின் கவனத்தைக் கொண்டு செல்கின்றார்கள்.

உங்களுக்கு துக்கம் கொடுக்கக் கூடியவரை மன்னித்து விடுங்கள், அதனை மறந்தும் விடுங்கள்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே நேரத்தில் தீர்வு காண முயற்சித்து குழப்பமடைய வேண்டாம். ஒரு நேரத்தில் ஒரே ஒரு பிரச்சினையை மட்டுமே தீர்க்க முற்படுங்கள்.

முடிந்த அளவுக்குப் பிறருக்கு உதவி செய்வதன் மூலம் நீங்கள் உங்களது கவலைகளை மறக்கக்கூடும்.

வரக்கூடிய பிரச்சினைகளைப்பார்க்கக் கூடிய கண்ணோட்டத்தை மாற்றுவதன் மூலம் நீங்கள் துக்கத்தை சுகமாக மாற்றம் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு



கொழும்பு, செப்.3
இந்தியாவின் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கலாநிதி அர்விந்த் குப்தா, இலங்கை பாது காப்புச் செயலர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள கலதாரி விடுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில், நேற்றுமுன்தினம் ஆரம்பமான இலங்கை இராணுவத்தின் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக, இந்தியாவின் பிரதித் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கலாநிதி அர்விந்த் குப்தா கொழும்பு வந்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு மாநாட்டின் பிரேத்தியேக நிகழ்வாகவே, இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதில் இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹாவும் கலந்து கொண்டார். இதன் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (த-வ)

# ஐ.நா. அறிக்கையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டும்

***சொல்கிறார் சுரேஷ்***

யாழ்ப்பாணம், செப். 3
சர்வதேச விசாரணை நடந்து முடிந்து விட்டது எனச் சொல்வது தவறு என்று குறிப்பிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமசந்திரன் வெளியிடப்படும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நீர்வேலியிலுள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று மதியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச விசாரணைக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களில் வெளிவரவுள்ளது. அதன் பின்னர் அந்த அறிக்கையின் அடுத்த கட்டம் என்ன ?

ஐ.நா. மனித உரிமைகள் சபை விரும்பினால் அதனை ஐ.நா.வின் பாதுகாப்புச் சபைக்கு அனுப்ப முடியும். அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியும். ஆனால் இலங்கை அரசு ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடாமையினால், நேரடியாகச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாது. எனவே வெளிவரும் அறிக்கையை பாதுகாப்புச் சபைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சீனா – ரஷ்யா போன்ற நாடுகள் இதனைத் தடுக்கலாம். ஆனாலும், பாதுகாப்புச் சபைக்கு அனுப்பினால், அது நீண்ட காலத்தின் பின்னராவது எடுத்துக் கொள்ளப்படும். இவற்றைவிட சர்வதேச தரத்திலான தீர்ப்பாயத்தை உருவாக்கலாம்.

இவற்றைவிட்டு, சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அறிக்கையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்றால், பின்னர் ஏன் உள்ளக விசா ரணைப் பொறிமுறை. அதுவும் தேவையில்லையே.

இலங்கை அரசு தனது இராணுவ அதிகாரிகளைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. மேலும், நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு இலங்கை அரசமைப்பில் இடமில்லை. மேலும், தடவியல் ரீதியான – விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்வதற்கான வசதிகள் இங்கு இல்லை. எனவே உள்ளக விசாரணை என்பது பொருத்தமற்றது. இதனை இலங்கையில் நடத்த எத்தனிப்பதன் நோக்கமே, காலத்தை இழுத்தடித்து இராணுவத்தைக் காப்பாற்றுவதுதான் – என்றார். (த-5)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தமிழரின்

தொடர்பில் சம்பந்தன் விளக்கமளிக்கவேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

நீர்வேலியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராகச் செல்வம் அடைக்கலநாதன் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார். இதனூடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புஅரசுடன்இணைந்து செயற்படும் போக்குக்கு வந்திருக்கின்றதா ? இந்தப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னதாக, அரசுடன் இணைந்து செயற்படும் கொள்கையைக் கூட்டமைப்பு எப்போது எடுத்தது. இதன் நன்மை, தீமைகள் தொடர்பில், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை, கட்சியின் இணைப்புக் குழுவைக் கூட்டிப் பேசியிருக்கவேண்டும். அவை எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவராக இரா. சம்பந்தன் நியமிக்கப்பட இருக்கின்றார். செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட பின்னர், ஆளுங்கட்சிப் பக்கம் அழைத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஆசனத்தில் அமர்த்தப்பட்டுள்ளார். இதன் அர்த்தம் என்ன ? ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கின்றதே. கூட்டமைப்புத் தலைமை இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றது.

1977 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாட்டுக்கு ஆணை கேட்டு 18 ஆசனங்களைப் பெற்று வெற்றி கொண்டது. இதனடிப்படையில் அப்போதைய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டார்.

தனிநாடு கேட்டுச் சென்றவர் இறுதியில் மாவட்ட சபையை ஏற்றுச் சுருக்கிக் கொண்டார். தற்போது சர்வதேச விசாரணை – சர்வதேச மயப்படுத்தப்பட்ட தமிழர் உரிமைப் பிரச்சினை என்பனவும், இரண்டாவது தடவையாக எதிர்க்கட்சித் தலைவராகத் தமிழர் ஒருவர் பதவியேற்பதன் மூலம் சுருங்கி விடுமா என்ற அச்சம் மக்கள் மத்தியில் உள் ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே, நாம் எதனை நோக்கிப் போகின்றோம் என்பது தொடர்பில் தெளிவில்லாத நிலைமையே இருக்கின்றது. எனவே, கட்சியின் இணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டி என்ன செய்யப் போகின்றோம் என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார். (த-5-ரி5)

## மோடியை

பா.ஜ.க ஆதரவு விவேகானந்தா சர்வதேச நிறுவகம், டோக்கியோ அறக்கட்டளை, சர்வதேச பௌத்த சம்மேளனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ள இந்த மாநாட்டை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கை, தாய்லாந்து, மொங்கோலியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இதில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு இந்த ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொண்ட பயணத்தின்போது சந்திரிகா குமாரதுங்கவையும் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதேவேளை, பௌத்த நாடுகளில் இந்தியாவின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு,பௌத்தம் மற்றும் பௌத்தம் போதிக்கும் அமைதி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் இந்தியப் பிரதமர் மோடி ஆர்வம் கொண்டுள்ளார். இந்த மாநாட்டில் பிரதானமாக மதத் தீவிரவாதம் குறித்துக் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது என அந்தச் செய்தி யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## சர்வதேச விசாரணை

பினர்களான இந்திரராஜா, எம்.பி. நடராஜா ஆகியோர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். தொடர்ந்து நிகழ்வுக்கு வருகை தந்திருந்த பொதுமக்களும் கையெ ழுத்திட்டனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,
எமக்கு சர்வதேச விசாரணையே தேவை என ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிவிக்கும் நோக்குடன் பத்து லட்சம் பேரிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார். (த)


## மரண அறிவித்தல்



### அன்ரன்ராஜ் கோமஸ்

இந்தியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் ராஜ் கோமஸ் நேற்று (02.09.2015) புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தம் கோமஸ்-றீற்றா குருஸ் தம்பதியரின் அன்பு புதல்வனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சொர்ணம் குருஸ்-ஜேர்மனிஅம்மாள் பர்ணாந்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், சர்மிளா கோமஸ், ஷோபனா கோமஸ், சொர்ணலதா கோமஸ், ஆனந் ரவி கோமஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜோசு மாணிக்கம் குருஸ் (கொழும்பு) தங்க ஜோதி கோமஸ் (ஜேர்மனி) சுலோசனா லோபு, செல்வம் கோமஸ் (Asican Optical) அதிஷ்டம் கோமஸ், ஜெயக்குமாரன் கோமஸ் (P.J.பெர்ணாண்டோ உரிமையாளர்) சொர்ணேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சேனாதி ராஜா குருஸ், ஞானம் கோமஸ் (ஜேர்மனி) காலஞ்சென்றலோபு, கலா கோமஸ், அபூர்வ சிலி கோமஸ் (P.J.பெர்ணாண்டோ) ஜேசுதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், திலீபன், பெனடிக் ஆகியோரின் பாசமிகு மாமனும், கின்ஸ்டன், அஸ்வினி, யனுஷிகா, காலஞ்சென்ற ஆன் திலகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.09.2015) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்செஞ்சி மாதா ஷேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தியாகு லேன்
(கியூடெக் முன்பக்கம்)
மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: ஜெயக்குமாரன் கோமஸ் (சகோதரன்)
P.J. பெர்ணாண்டோ
பல்முக்கு கண்ணாடியகம்,
உரிமையாளர்

(62667) (10)



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 ★ 03 ★ 1942



ஆண்டவன் அடியில்
30 ★ 08 ★ 2010

### அமரர் பொன்னையா செல்லையா

திதி: அபரபக்க பஞ்சமி (03.09.2015)

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் அப்பா
உங்கள் நினைவுகள் எம் மனதில் நிழலாக நிற்கின்றன
ஆயிரம் சொந்தங்கள் அருகினிலே இருந்தாலும் - அப்பா
உங்களைப் போல் யார் வருவார் அவனியிலே
பாசத்தின் பெருங்கடலே பார்புகழ வாழ்ந்தவரே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியாது உங்களை.
ஒளி தந்த உங்கள் நினைவுகளுடன்
இறைவனிடம்கூடி இறைஞ்சுகின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக...
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(60588)(10.15.17)



## நினைவஞ்சலி



எமது அன்புக்கும்
பெருமதிப்புக்குமுரிய
ஸ்தபதி விஸ்வப் பிரம்மஸ்ரீ

### சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியார்

அமரத்துவமடைந்த 16ஆவது நாளில் அவரை நினைந்து எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் திருமதி தேவிமனோகரி நாகேஸ்பரன்

(முன்னாள் ஆசிரியை - தமிழ் மத்திய மகாவித்தியாலயம் - வவுனியா)



வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கலாபூஷணம் தேவிமனோகரி நாகேஸ்பரன் நேற்று (02.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜகுலசேகரம் கௌரிஅம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் நாகேஸ்பரனின் (ஈஸ்வரன் மாஸ்டர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா சின்னத்தம்பி (தம்பிப்பிள்ளை ஸ்ரோர்ஸ் - வவுனியா) -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஜதீஸ்வரன், அபிராமி(U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லகுமிகரன் (U.K) அவர்களின் அன்பு மாமியாரும் ஜனுக்ஷ்ஷா, டிலுக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் ராஜகுலசூரியர், காலஞ்சென்ற விஜயகுலசிங்கம் மற்றும் கௌரிமனோகரி, அமரகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஜெயகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகராஜா(முன்னாள் யாழ் மேயர்), நாகேஸ்வரி மற்றும் நாகபூஷனி, காலஞ்சென்ற நாகேந்திரம் மற்றும் நாகலிங்கம், நாகதேவி, நாகபாலன், நாகலக்ஷ்மி, நாகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் பூந்தோட்ட இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.49, மடத்தடி றோட், குடியிருப்பு, வவுனியா.
075 412 1650

தகவல் :-
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் ★ 10 ★ 06 ★ 1932

மறைவு ★ 01 ★ 09 ★ 2015



### திருமதி பராசக்தி குலசேகரம்

யாழ்ப்பாணம், கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, கோயில்குளம், சிவன் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி குலசேகரம் நேற்றுமுன்தினம் (01.09.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் குலசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-பகவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை- சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும், கமலினி (டென்மார்க்), சுபாசினி (ஜேர்மனி), நாகரூபன் (லண்டன்), தாட்சாயினி (லண்டன்) ரமேஷன்(கனடா), நிரஞ்சினி(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், இரட்ணகுமார் (டென்மார்க்), யாதவன்(ஜேர்மனி), லிங்கேஸ்வரன் (லண்டன்), தெகேந்திரன் (கனடா), கலையரசி (லண்டன்), சுகந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சரவணபவன் (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரன், பூபாலசிங்கம், சந்திரேஸ்வரி, சிவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி, பரமேஸ்வரி, வனிதாமணி, அரசரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின்.அன்பு மைத்துனியும், கமல்ராஜ் (டென்மார்க்),சிந்துராஜ்(டென்மார்க்),ஜீவராஜ்(டென்மார்க்), ஜனனி (டென்மார்க்), மதுசிகா(ஜேர்மனி), துளசிகா(ஜேர்மனி), நர்த்தனன்(லண்டன்), அனுசிகா (லண்டன்), அபிநயா(லண்டன்), ஆர்மிகன்(லண்டன்), ஆன்யா (லண்டன்), இரேணி (லண்டன்), சிபிலா(லண்டன்), மேர்வின்(கனடா), அர்வின்(கனடா), அனிகா(கனடா), அஸ்வின் (கனடா), அபிஷா(கனடா), அக்சயா(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா கோயில்குளம் சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இன்று (03.09.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோவில்புதுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோவில் வீதி,
கோவில்குளம், வவுனியா.
T.P: 024 5673024

(C/18586) (10.15.17)

தகவல்:
குலசேகரம் (கணவர்)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. விஜயலக்சுமி யோகேஸ்வரன்



குளப்பிட்டி ,கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலக்சுமி யோகேஸ்வரன் நேற்று (02.09.2015 ) புதன் கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரனின் அன்பு மனைவியும் நிறஞ்சனா,நிரோசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவகுமார்,தர்ஜலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அருணாசலம், இராஜலக்சுமி மற்றும் தனவதி (மலேசியா), கார்த்திகேசு(கொழும்பு),கணேசு(கனடா) ஆகியோரின் சகோதரியும் துவாரகா, பிரித்திகா,நிவாசன், தக்ஷிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.09.2015) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டிச்சந்தி
கொக்குவில்

கணவர்,பிள்ளைகள்
ச.யோகேஸ்வரன்
மகன்: யோ.நிரோசன்
T.P:- 072 509 7280

### திருமதி சிந்தாமணி தம்பையா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிந்தாமணி தம்பையா நேற்று (02.09.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் (தபால் கனிஷ்ட பரிசோதகர்) அன்பு மனைவியும், நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-அழகுசுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், மனோன்மணி, பொன்மணி, பராசக்தி, கிருஷ்ணபாலா, சகுந்தலாதேவி காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, திருச்செல்வம், தங்கலெட்சுமி, மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், சண்முகம், சொக்கலிங்கம், சபாரெட்ணம், சண்முகராஜா மற்றும் சிவகாமன், குமாரசாமி, ரூபாவதி ஆகியோரின் மைத்துனியும், சுந்தராம்பிகையின் சின்னம்மாவும், ஸ்ரீஸ்கந்தராஜாவின் மாமியும், யசீந்திரன், நேர்த்திகா, கௌதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிவேதனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிறபகல் 3.00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

122/15A,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல்:
நாகலிங்கம் குடும்பத்தினர்.

### சண்முகவடிவேலு பொன்னம்பலம்

(ஓய்வுநிலை ஆசிரியர்-யாழ். இந்துக் கல்லூரி)



யாழ்ப்பாணம் அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகவடிவேலு பொன்னம்பலம் 01.09.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகவடிவேலு-யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் (முன்னைநாள் அதிபர், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், பிரனீதா (வைத்திய அதிகாரி, இரத்த வங்கி, யாழ்.போதனா வைத்திய சாலை), சுதாஜினி (Postgraduate student, University of Oxford), முருகேந்திரா (Quality Assurance Analyst, Millennium IT) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், தயாகரன் (Research Associate, Newcastle University, England) இன் மாமனும், ஸ்ரீகாந்தா (ஓய்வுநிலை ஆசிரியர், புனித தோமஸ் கல்லூரி, கொழும்பு), ஸ்ரீதரன் (ஓய்வுநிலை ஊழியர், இலங்கை போக்குவரத்துச் சபை) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, கணேசநாயகம், செந்திநாயகம், சிவா ணந்தநாயகம் மற்றும் மகேஸ்வரி, மனோன்மணி, ராஜினி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி (ஓய்வுநிலை அதிபர்-பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை), மங்களகுமாரி, ரத்தினேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சிவானந்தம் ஆகியோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2015) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் அம்மன் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: 0094212229735

(C/18589) (10)

## சரணவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 3 ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் தாக்கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்த்தனவை தொடர்ந்தும் நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் பரப்புரைக் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரொருவர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைதான பிரதி அமைச்சர் சர[illegible] குணவர்த்த[illegible] விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் ,இவர் மீதான வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே தொடர்ந்தும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவருக்கான பிணை அனுமதிக்கு மறுப்பு தெரிவித்த கம்பஹா மாவட்ட பிரதா[illegible] நீதிவான் டிகிரி மக ஜயதிலக தொடர்ந்தும் நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கு விசாரணையின் போது, சரண குணவர்த்தன ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட நீதிவான் சிறைச் சாலைக்கென வைத்திய சாலை காணப்படும் நிலையில் சரண குணவர்த்தன அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கான காரணத்தை எதிர்வரும் நாளை இடம்பெறும் விசாரணையின் போது நீதிமன்றில் தெரிவிக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதிநிலை அரசியல் நிலையை தொடர்ந்து வைத்திருக்கவேண்டும்

### சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் தெரிவுக்குழுக் கூட்டத்தில் கருத்து

சர்வதேச விசாரணையைத் தொடர்ந்து வலியுறுத்த அதுபற்றிய தற்போதைய விடயத்தை – கொதி நிலை அரசியலைத் தொடர்ந்தும் தக்க வைத்திருக்க வேண்டும். தவறினால் எமது தமிழரின் இருப்பு இல்லாமல் போய்விடும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கான சர்வதேச விசாரணை மற்றும் நீதியைப் பெறுவது பற்றிய கருத்துக்களை முன்வைப்பது, அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க குழு ஒன்றை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று திருநெல்வேலியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதனை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் கலந்து கொண்டவர்களே குறித்த கருத்துக்களை முன்வைத் தனர்.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:–

சர்வதேச விசாரணை என்றால் என்ன என்பது பற்றி முதலில் அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண் டும். அதனைக் கிராமங்கள் தோறும் முன்னெடுக்க வேண்டும். அது ஏன் என்றும் தெளிவுபடுத்த வேண்டும். சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நாம் போராட்டம் முன்னெடுக்க வேண்டும். அதனைச் சுழற்சி முறையில் ஒவ்வோரு பிரதேசங்க ளிலும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடலாம் என்று கூறப்பட்டது. 2009 இற்கு முன்னரும் பல தட வைகள் இன அழிப்பு நடந்துள்ளது. அவை பற்றியும் வலியுறுத்த வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் சம்பவம் போன்ற இனப்படுகொலைக்குச் சரியான தண்டனை தான் தீர்வைத் தரும். அது தான் எமது சமூகத்தைப் பாதுகாக்கும். அவ் வாறு இல்லாது விட்டால் நாம்கூட இருக்கமாட்டோம்.

இந்த விடயத்தை தொடர்ந்து முன்னெடுத்து வந்து எமது அடுத்த சந்ததியிடம் ஒப்படைக்க வேண் டும். இதனைக் கைவிட்டால் எமது இனம் இருக்க முடியாது. சர்வதேசம் என்பது வேறு சர்வதேச நாடுகள் என்பது வேறு. நாடுகள் தமது நலன் கருதியே தமது கருத்துக்களை முன்வைக்கும். செயற்படும். அந்த விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். இதற்குச் சர்வதேசத்தின் ஆதரவு தேவை.

இன அழிப்பைச் சர்வதேச நாடுகளும் சேர்ந்தே மேற்கொண்டன. எனவே சர்வதேச விசாரணையையோ அல்லது எமக்குத் தீர்வையோ அவை பெற்றுத் தரமாட்டாது. ஏனெனில் அதுபற்றிக் கதைத்தால் தாமும் அதில் உள்ளடக்கப்பட்டு விடுவோம். தமது குட்டு வெளிப்பட்டுவிடும் என்று சர்வதேச நாடுகள் கருதுகிறன. எமக்குத்தீர்வுகிடைக்காது என்று தெரியும். எனினும் அது பற்றி நாம் தொடர்ந்து போராடுவதன் மூலமாக அந்த விடயத்தில் நாம் இன்னும் விழிப்புடன்தான் இருக்கிறோம் என்ப தனை வலியுறுத்த வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

கலந்துரையாடல் முடிவில் தலைவர், செயலா ளர் மற்றும் அங்கத்தவர்கள் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. கலந்துரையாடலில் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (த–4)


நல்ல சுவையான வீட்டுச் சாப்பாடு
யாழ் நகர அலுவலகங்கள் வீடுகளுக்கு வழங்கப்படும்
சைவ அசைவ மதிய உணவு
ஓடர்களுக்கு 075 070 2963




செல்லம் செங்கலடி Dts 10.30, 2.30, 6.30 வெள்ளி, சனி, ஞாயிறு 9.30 065 2240064

ராஜா யாழ்ப்பாணம் Dts 10.30, 2.30, 6.30, 9.30, p.m 021 2227382

குளிரூட்டப்பட்ட சினிசிட்டி - மருதானை Dts 10.30, 2.30, 6.30, 9.30 தொ.பே: 077 3101080

குளிரூட்டப்பட்ட சினிவேர்ல்ட் கொட்டாஞ்சேனை Dts 10.30 2.30, 6.30, 9.30 தொ.பே: 011 2330017

சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30
திருகோணமலை Tel 026 2222221



உதயன் advt@uthayan.com 0215671111

**Shabesh Cargo Service**
46/2, Kachchery east lane,
Chundukuli, Jaffna. (62663) (10)
Conduct No: 0778746463, 0775533321

**வேலைவாய்ப்பு**

எமது Golden Group Advertising Company இக்கு ஐந்து வகையான பதவி வெற்றிடங்கள்

1. Distributor, 2. Supervisor, 3. Asst.Manager
4. Manager, 5.Administration

ஆகிய பதவிகள் உள்ளன. ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
* தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தகைமை: * குறைந்த பட்சம் O/L * வயது எல்லை 18-38

No: 8-6th Cross Street, Jaffna. (62662) (10)
தொடர்புக்கு: 077 621 9536, 077 99 87 699





உ

ஓமந்தை
வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்
வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்
- 2015 -

ஆரம்பம்: 03.09.2015 வியாழக்கிழமை
கொடியேற்றம் காலை 9.00 மணி
தேர்த்திருவிழா: 11.09.2015 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி
பூர்த்தி: 12.09.2015 சனிக்கிழமை தீர்த்தம் முற்பகல் 10.00 மணி
11 ஆம் நாள்: 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை
சடைமுனி வைரவருக்கு காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேகம்
மாலை 6.00 மணிக்கு பொங்கல் மடை, தீ மிதிப்பு என்பன நடைபெறும்.

மஹோற்சவ பிரதம குரு

வித்வான் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், கலைமாமணி
சாமஸ்ரீ தேசமானிய சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார் BA Hons, M.A.,J.P.
(ஸ்தாபகர் ஹரிஹரபுத்திர தர்மசாஸ்தா ஆலயம்-கோயிற்கடவை)
தொடர் சொற்பொழிவு, விநாயகர் புராணம், சிவஸ்ரீ நாகரட்ண கலாதர சிவாச்சாரியார்

உற்சவ காலங்களில் அடியார்கள் பால், இளநீர், பூக்கள், மாலைகள் போன்றவைகளை வழங்கி உரிய நேரத்தில் உற்சவத்தில் பங்கேற்று விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவீராக.

ஆலய திருப்பணிச் சபையினர், திருவிழா உபயகாரர்கள்
மற்றும் ஆலய பரம்பரைக்குரு ஆறுமுக கணேசக் குருக்கள்.

(C/18587)(10.17)





நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
கூறுவிலை கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் தேவை கருதி - பின்வருவனவற்றுக்கான கூறுவிலைகள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கோயிலின் உள்வீதியில் அம்பாள் எழுந்தருளுவதற்கு ஏற்ற 12 அடி - 14 அடி வரைக்குள்ளான உயரமுடைய, 5 வெளி வேலைப்பாடுகள் அமைந்த தங்கத்தேர் ஒன்று செய்து வழங்குதல்.
2. சமயகுரவர் (2 அடி உயரமான எழுந்தருளி) உள்வீதியில் எழுந்தருளுவதற்கு ஏற்ற பல்லக்கு ஒன்று செய்து வழங்குதல்.
3. நல்லூர், கோப்பாய், உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குள்-பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு ஏற்றதான 20 தொடக்கம் 25 வரையான பரப்பளவை உடைய காணி கொள்வனவு செய்தல். இதற்கான கூறுவிலையில் காணியின் அமைவிடம், மண்ணின் வகை என்பன தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.
4. கோயிலின் பாவனைக்கு உதவாமல் உள்ள இரும்புப் பொருள்களை விற்பனை செய்தல். கிலோ ஒன்றுக்கான கொள்விலை கோரப்படுகிறது.
5. கோயிலில் பாவித்த பித்தளைக் குத்துவிளக்குகளை விற்பனை செய்தல். கிலோ ஒன்றுக்கான கொள்விலை கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் 16.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது கோயில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியுள் 16.09.2015 ஆம் திகதி பி.ப 4.30 மணிவரை இடப்படலாம்.

தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் ''கூறுவிலை என்று குறிப்பிடப்படுதல் அவசியமாகும்''

நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.
02.09.2015

(C/18588) (10.15.17)

[illegible]
செயலாளர்.



LITTLE ASIA
GRAND SALE 2015

19th August to
14th September

இம்முறை நல்லூர் திருவிழாவை Little Asia வுடன் கொண்டாடுங்கள். திருமணம் மற்றும் அனைத்து ரக ஆடை வகைகளுக்கும் மாபெரும் விலைத்தள்ளுபடியில்!!!!

இடம் : வீரமஹாகாளி அம்மன் கோயில் -
நல்லூர், யாழ்ப்பாணம்
நேரம் : காலை 9.00 இரவு 10.00 மணி வரை

ஒவ்வொரு தருணத்தையும் விழாக்காலமாக மாற்றுங்கள்!!!!

கைத்தேர்ந்த டிசைனர் மற்றும் கைவினை கலைஞர்களால் படைக்கப்பட்ட பட்டுப்புடவைகள் உங்களை பார்க்கும் அனைவரையும் ஆச்சரியமடைய செய்து இந்த விழாக்காலத்தை மறக்க முடியாதபடி மாற்றுகிறது. மேலும் உங்களை பிரமிக்கவைக்கும் ஏராளமான பட்டுப்புடவை வகைகள்..

Designer Sarees, Bridal Collection, Cholies,
Shalwars, Kids Wear, Men's Wear

அனைத்து வகையான ஆடைகளும் 500/= முதல்

ஆடைகளை நாங்கள் தருகின்றோம்
விலையை நீங்கள் தீர்மானியுங்கள்



Little Asia
Wellawatte | Main Street


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்துகளில்

பூநகரி முக்கொம்பன் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 9 மணியளவில் முதலாவதுவிபத்து இடம்பெற்றது. அங்கு வீதியைக் கடப்பதற்காக வீதியின் மத்திய கோட்டில் மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்தபோது வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் பொது மகன் ஒருவரை மோதியுள்ளது. அதில் அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சிவஞானசெல்வம் (வயது -61) என்பவர் படுகாயமடைந்து மயக்கமடைந்த நிலையில் பூநகரி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

மற்றைய விபத்து பளை தர்மக் கேணிச் சந்தியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. அதில் படைச் சிப்பாய் உயிரிழந்தார்.

நாவற்குழி கோயிலாக்கண்டியிலுள்ள முகாமிலிருந்து படையினரை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிப் பயணித்தபோதே இந்த விபத்து இடம் பெற்றது. அதில் வாகனத்தில் பயணித்தவரான மீகொட,காலியைச் சேர்ந்த கே.எச்.ஏ.மதுரங்க (வயது - 23) என்பவரே உயிரிழந்தார்.

பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது இடை வழியில் அவர் உயிரிழந்து விட்டார் என்று பரிசோதனை உறுதிப்படுத்தியது.

கொழும்பு நோக்கிப் பயணித் துக் கொண்டிருந்தபோது பக்கம் போக்குவரத்து விதி முறையை மீறி வாகனத்துக்கு நேர் எதிராக மோட்டார் சைக்கிள் ஒன்று வந்ததாகவும், அதனால் தமது வாகனத்தை வலது புறமாகத் திருப்பியபோது எதிரே வந்தவரும் அதே பக்கம் திரும்பியதாகவும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பின்னர் வாகனத்தின பின்புறம் அங்கு நின்றிருந்த பனையுடன் மோதுண்டதனால் விபத்து ஏற்பட்டதாகவும் இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தில் அந்த நேரம் 5 பேர் பயணித்ததாகவும் மற்றைய இருவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும் அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பில் பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மது போதையில் தள்ளாடியபடி வந்திருக்கலாம் என்றும் விபத்தையடுத்து அவர் தப்பியோடிவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவை தொடர்பான இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நபிறேம்குமார் மேற்கொண்டு நேற்றுச் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4-9-86)

## மின்னல்

தின் பேரில் நான்கு சந்தேகநபர் களை நெல்லியடி பொலிஸார் நேற்று மாலை 6 மணியளவில் கைது செய்துள்ளனர்.

நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த தலைமையிலான பொலிஸ் குழுவே இந்தக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டது.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு சந்தேக நபர்களும் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தபடுவார்கள் என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி பகுதியில் மின்னல் குழு எனக் குற்றம் சாட்டப்படும் கும்பல் வதிரிச் சந்தி உட்பட வடமராட்சியின் சில முக்கிய சந்திகளில் ஒன்று கூடிப் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் மாணவிகளுடன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாக பொது மக்களால் குற்றம்சாட்டப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் சமூகப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரால் பருத்தித்துறை நீதிபதியின் கவனத்துக்குப் புகைப்பட ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு நெல்லியடி மற்றும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும், வடமராட்சிப் பகுதிக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் தேடுதல் வேட்டை நடத்தி வந்த பொலிஸார் நேற்றைய தினம் அதிரடியாகச் செயற்பட்டுச் சந்தேக நபர்களை மடக்கிப் பிடித்துக் கைது செய்துள்ளனர். (த-109-108)

## எதிர்க்கட்சி

தினம் மாலையிலிருந்து ஜனா திபதிக்கு தொலைபேசியின் ஊடாக அழைப்பு மேல் அழைப்பு எடுத்துள்ளனர். அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 55இக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கையொப்பமிட்ட எழுத்து மூலம் இது தொடர்பான வேண்டுகோளை ஜனாதிபதிடம் அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் சென்று வழங்கியுள்ளனர்.

நாடாளுமன்றில் இன்று எதிர்க்கட்சித் தலைவரையும், எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரையும் நியமிப்பது என நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவது என தேசிய அரசமைத்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டாக இணக்கம் தெரிவித்துள்ளன.

அத்துடன் நாடாளுமன்ற விதிகளின் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தெரிவித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களின் பெரும்பான்மையானோர் தேசிய அரசில் இணைவதால், மீதமுள்ள அக் கூட்டமைப்பினைச் சேர்ந்த உறுப்பி னர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த ஆதரவு அணியினரும் கூட்டாக தமது அணிக்கே எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமெனப் பகிரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த தரப்பினர், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்குமாறு எழுத்து மூலம், ஜனாதிபதிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் நேற்றுமுன்தினம் மாலை முதல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ தொலைபேசிக்கு அழைப்பு மேல் அழைப்பு எடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர் என அரச தரப்பு பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் இணக்கத்துடன் ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்குவதற்கான முடிவைச் சபாநாயகருக்கு அறிவித்துள்ளார். நாடாளுமன்றச் சம்பிரதாயத்தின் பிரகாரம் சபாநாயகரே எதிர்க் கட்சித் தலைவரைத் தெரிவு செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## சர்வதேச

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மகிந்த ராஜபக்ச ஆதரவு தரப்பினர் தேசிய அரசில் இணையாமல் தொடந்தும் எதிர்க் கட்சி வரிசையில் அமர்வதாக அறிவித்துள்ளனர். அத்துடன் தமது தரப்புக்கே எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தி வந்தனர்.

எனினும் நாட்டில் ஜனநாயக ஆட்சி நடைபெறவேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் அனுமதியைப் பெற்றார். அத்துடன் ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் தெரிவித்தது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்வதற்கான ஒப்புதலை ஜனாதிபதி, நாடாளுமன்றின் புதிய சபாநாயகருக்கு வழங்கியுள்ளார். இதன் பிரகாரம் இன்று காலை நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமானதும் எதிர்க்கட்சித் தலைவராக இரா.சம்பந்தன் சபாநாயகரால் தெரிவு செய்யப்படுவார்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்குவதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மகிந்த ஆதரவு தரப்பினர் கடுமையாக விமர்சித்தது டன் எதிர்ப்பையும் வெளியிட்டுள் ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய எதிர்க் கட்சிகளை விட அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் நாட்டுக்கு எதிராகச் செயற்படுபவர்கள். குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சர்வதேச விசாரணையை ஆதரித்து அதனைக் கோரி வருபவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரிவினவாத நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றது. அவர்கள் பிராந்தியக் கட்சி. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை மாத்திரம் பிரதிநிதிப்படுத்துபவர்கள் எவ்வாறு பிரதான கட்சியாகி எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வழங்க முடியும்.

எனவே இவ்விடயங்களைச் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சி வரிசையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் 14 உறுப்பினர்களும் எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளோம். அத்துடன் எதிர்க் கட்சித் தலைவருக்கான பெயரையும் நாம் பரிந்துரைத்துள்ளோம்- என்றார். (த-வ)

## புதிய அமைச்சரவை

கப்பட உள்ளது.

எவ்வாறெனினும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகள் வழங்குவது குறித்து நேற்று மாலை வரை சரியான முடிவு எடுக்கப்படவில்லை எனவும், தொடர்ச்சியாக பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தகவல்கள் தெரிவித்தன.

தேசிய அரசு ஒன்றின் ஊடாக அமைச்சர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு நாடாளுமன்றின் அங்கீகாரம் அவசிமாகின்றது.

19ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அமைச்சரவை அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை 30க்கும் அதிகரிக்கக் கூடாது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், தேசிய அரசில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கப் படலாம் அதற்கு நாடாளுமன்றின் அனுமதி அவசியமானது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 45 ஆக அதிகரிப்பதற்காக அனுமதியைப் பெறும் பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## ஐ.நா. அறிக்கை

எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட அவர், நாடர்ளுமன்ற அமர்வின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

[illegible] றோம். ஜெனிவா அறிக்கை இன்னும் வெளிவரவில்லை. அறிக்கை வெளிவரும்போது அது குறித்து நாம் நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

## பரீட்சை

யில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு விபத்துக்கள்ளாகி உயிரிழந்தவர் நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதீப் (வயது 18) என அடையாளம் காணப்பட்டுள்ளார். படுகாயமடைந்தவர் சிவகுமார் சுஜீவன் (வயது 19) ஆவார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் உயர்தரப் பரீட்சை எழுதுவதற்காகச் சென்ற மல்லாவி மத்திய கல்லூரி மணவர்கள் இருவர் துணுக்காய் ஏ.பி.சி சந்தியை அண்மித்த போது யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று அவர்களை மோதித் தள்ளியது. மாணவர்களில் பிரதீப் என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளின் பின் புறம் இருந்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-21)

## ஜெயக்குமாரி

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததாகவும், அதன் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்குக் கையெழுத்திடச் சென்ற போது, ஜெயக்குமாரி ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு உதவி செய்ததாகத் தெரிவித்து, கடந்த வருடம் மார்ச் மாதம், ஜெயக்குமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கிலிருந்து கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதற்கமைய அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திடச் சென்ற போது ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அநுராதபுரம் கெப்பிற்றிக்கொலாவ நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கினர் என்ற குற்றச்சாட்டில் கொல்லப்பட்ட அப்பன் – தேவிகன் தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே கிளிநொச்சி பொலிஸ் நிலை யத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், கெப்பிற்றிக் கொலாவ நீதிமன்றத்துக்கு ஜெயக்குமாரி நேற்றைய தினம் சென்றுள்ளார். இதன்போது, இரண்டு தடவைகள் நீதிமன்றத்தில் வழக்கு அழைத்து வருகை தராத காரணத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதா கச் சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (த-5)

## போர்க்குற்றங்களை

மைப்பில் அங்கம் வகிக்கும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் இணைந்து நேற்று முன்தினம் கடிதம் அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதத்தில், இறுதிக் கட்டப் போரின்போது, தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிக மோசமான சர்வதேசப் போர்க் குற்றங்களில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க ஐ.நா. சபை தவறிவிட்டமையை மீண்டும் ஒருமுறை சர்வதேச சமூகத்துக்கு நினைவுறுத்த விரும்புகின்றோம்

போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படு கொலைக் குற்றம் என்பவற்றை விசாரிப்பதற்கான சர்வதேச பொறிமுறை ஒன்றினை கண்டறிவதற்கான கருத்தாடல்கள் மற்றும் அதற்கான நியாயாதிக்கங்கள் குறித்து விவாதிப்பதில் கடந்த ஆறு வருடங்கள் உருண்டோடிவிட்டன.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேசக் குற்றங்களை விசாரிப்பதற்கான உள்ளக பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்காக விவாதங்களும் பேச்சுக்களும் இடம் பெற்று வருகின்றன.

இறுதிக்கட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உள்ளக விசாரணை பொறிமுறையோ அல்லது சர்வதேச கண்காணிப்புடனான உள்ளக விசாரணை பொறிமுறையோ நீதியை வழங்காது என்பதனை நாம் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

உள்ளக விசாரணைக்கோ அல்லது சர்வதேசக் கண்காணிப்புடனான உள்ளகப் பொறிமுறைக்கோ அனுமதியளிப்பதானது, சர்வதேச விசாரணை தொடர்பாக மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக இதுவரை எட்டியுள்ள நல்ல பெறுபேறுகளை வலுவிழக்கச் செய்வதுடன் மீண்டும் ஒரு முறை ஐ.நா. தமிழ் மக்களை நிர்க்கதியாகக் கைகழுவி விடும் நிலையையே உருவாக்கும்.

ஐ.நா. ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை மீதான விசாரணைக்கான ஆணையானது போர்க் குற்றக்களுக்கான விசாரணையுடன் மட்டுப்படுத்தப்படாமல், பரந்த அளவில் இனப் படுகொலை குற்றத்தை உள்ளடக்கிய சகல சர்வதேச குற்றங்களையும் விசாரிப்பதற்கும் அனுமதியளிக் கின்றது. எனவே உள்ளக விசாரணையோ அல்லது சர்வதேச பொறிமுறையுடனான விசாரணையோ இலங்கை அரசினால் தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படு கொலை தொடர்பாக எவ்வித விசாரணைகளும் நடைபெறாமலே போய் விடும்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படச் செய்வதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும், சர்வதேசக் குற்றங்கள் மீண்டும் இடம்பெறாவண்ணம் கட்டுப்படுத்துவதற்கும் உறுதி கொண்டிருக்கும் உங்களை நாம் பாராட்டும் அதே வேளை, உள்ளக விசாரணை அல்லது சர்வதேச பொறிமுறையு டன் கூடிய உள்ளக விசாரணைக்கு மாறாக, இலங்கை தொடர்பான விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைக்குமாறோ அல்லது பொறுப்புக்கூறலுக்கான ஒரு சர்வதேச பொறிமுறையை உருவாக்குமாறோ அல்லது போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான சர்வதேச தீர்ப்பாயத்தை அமைக்குமாறோ வேண்டிக் கொள்கின்றோம் – என்றுள்ளது. (த-5-ரி5)

## இந்தியா

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் பிரதமரா கப் பொறுப்பேற்ற பின்னர், ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதையடுத்து, பிரதமராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, இந்த எட்டு மாத காலப் பகுதியில் எந்தவொரு நாட்டுக்கும் அதிகாரபூர்வப் பயணத்தை மேற்கொள்ளவில்லை.

கடந்த மாதம் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராகப் பதவியேற்றதையடுத்தே, அவர் தனது முதல் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கிறார். ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற மைத்திரிபால சிறிசேனவும். தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கே மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அச்சுறுத்தலாக பயங்கரவாதத்தை நோக்க வேண்டும்

## பாதுகாப்பு மாநாட்டில் ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, செப்.3
பயங்கரவாதத்தைப் பொதுவான அச்சுறுத்தலாக நோக்கவேண்டும் என ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய் தெரிவித்துள்ளார்.
இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெறும் 2015ஆம் ஆண்டு சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்று விசேட உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.
அவர் தனது உரையில்:-
இலங்கை மிகவும் ரம்மியமான நாடு. பயங்கரவாதத்தை முற்று முழுதாக இல்லாதொழித்துள்ளனர். சர்வதேச அரசியல் கொள்கைகள் தார்மீக ரீதியான கட்டுப்பாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது.
ஒவ்வொரு நாட்டிலும் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டால் உலகின் அனைத்து நாடுகளிலிருந்தும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும். உலகின் பொதுவான அச்சுறுத்தலாகப் பயங்கரவாதத்தைக் கருதாத வரையும் பயங்கரவாத அழிவுகளைத் தவிர்க்க முடியாது.
கூட்டாக இணைந்து தீர்மானங்களை எடுத்து அதனைக் கூட்டாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன ரீதியான அல்லது மத ரீதியான வன்முறைகளை, பிரிவினைகளைத் தூண்டும் முனைப்புக்களை உலகின் மிகப் பெரிய குற்றச் செயல்களாக அடையாளப்படுத்த முடியும்.
இலங்கையில் அண்மைக்கால அரசியல் நடவடிக்கைககள், மற்றும் அரசியல் நிலைமைகளை அவதானிக்கும் போது இங்கு நல்லதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நம்புகின்றேன்.
பல்வேறுப்பட்ட சந்தர்ப்பங்களில் நான் இதற்கு முன்னர் இலங்கைக்கு பயணம் செய்துள்ளேன். எனினும் நான் அப்போது பயணம் செய்தபோது இருந்த அரசியல் சூழ்நிலைகளும், தற்போது பயணம் செய்தபோது இருக்கும் அரசியல் சூழ்நிலைகளும் மாறுபட்டதொன்றாகவே நான் கருதுகின்றேன்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான நல்லாட்சி அரசால், நாட்டில் ஜனநாயகமும், சமாதானமும் கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக நம்புகின்றேன். இது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும்.
போருக்குப் பின்னரான ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் நல்லதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் அனைவரும் வரவேற்கின்றோம்- என்றார். (த)

# இலங்கை - இந்தியா உறவில் நெருக்கம்

## பாதுகாப்பு ஆலோசகர் அரவிந்த் குப்தா தெரிவிப்பு

கொழும்பு, செப். 3
தெற்காசிய நாடுகள் முகங்கொடுக்கும் பெரும் அச்சுறுத்தல்களில் தீவிரவாதம் மிகப் பிரதானமாகும் எனத் தெரிவித்த இந்தியத் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அரவிந்த் குப்தா, இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பை இந்திய அரசு உறுதிப்படுத்தும் எனவும் தெரிவித்தார்.
இதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை - இந்திய உறவில் மிக நெருக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், தீவிரவாதத்தை ஒழித்தல், பொருளாதார சவால்கள் என அனைத்து விடயங்களிலும் இலங்கை அரசுடன் இந்திய அரசு இணைந்து செயற்படுவதுடன் இரு நாட்டு உறவு மேலும் வலுப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.
கொழும்பில், நேற்று முன்தினம் ஆரம்பமான 6ஆவது பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:-
ஆசியாவில் இந்தியா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தெற்காசியாவில் இந்தியாவின் பங்கு மிகமுக்கியமானதாகும்.
இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு விடயத்தில் நாங்கள் அதிக அவதானத்துடன் இருக்கின்றோம். தீவிரவாத அச்சுறுத்தல்கள் தெற்காசிய நாடுகள் எதிர்கொள்ளும் பெரும் சவால்களில் மிக முக்கியமானதாகும்.
இந்து சமுத்திரம் வர்த்தக நடவடிக்கைகளுக்கான மிகப் பிரதான கடல் மார்க்கப் பாதையாகும். இதில் கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தல் உள்ளன. இதன் பாதுகாப்பை இந்திய அரசு உறுதிப்படுத்தும்.
இந்திய - இலங்கை கடல் எல்லைப் பாதுகாப்பு விடயத்தில் புரிந்துணர்வுடன் நாங்கள் செயற்படுவோம். இதேவேளை, சர்வதேச பாதுகாப்பு, சமாதானம் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவற்றுக்கு



தீவிரவாதம் சவாலாக அமைந்துள்ளது-என்றார்.
பூகோள அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தேசிய பாதுகாப்பு' என்ற தொனிப்பொருளில் 6ஆவது தடவையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த கருத்தரங்கில் ஆப்கான் முன்னாள் ஜனாதிபதி ஹமீட் கர்ஷாய் விசேட உரையாற்றியிருந்தார்.
அவர் தனது உரையில், வலதுசாரி மற்றும் இடதுசாரிக் கொள்கைகளால் இரு பக்கங்களாலும் ஆப்கானிஸ்தான் பின்தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன் தமது நாட்டின் சவால்கள் குறித்து விசேட அவதானம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# சிறில் ரமபோசா இலங்கைக்கு அதிகாரபூர்வமாக வரவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, செப்.3
தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி சிறில் ரமபோசா, இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவில்லை என்றும், அவருடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்தவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-
தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி சிறில் ரமபோசா இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, தேசியப் பிரச்சினை தீர்வு தொடர்பாக நடுநிலை வகிப்பது குறித்து பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக வெளியான செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை.
கடந்த 25ஆம் திகதி, அதற்கு முன்னரும் இலங்கை ஊடாக சிறில் ரமபோசா பயணத்தை மேற்கொண்டிருந்தார். அவர் ஜப்பான் செல்லும் போதும், திரும்பிச் செல்லும்போதும், அவர் பயணம் செய்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறங்கியது.
இவ்வாறு விமானம் தரையிறங்கிய போது தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடைத்தங்கிச் சென்றார். வெளிநாட்டுத் தலைவர் ஒருவர் எமது விமான நிலையத்தில் இடைத்தங்கிச் செல்லும்போது வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகள் வெளிநாட்டுத் தலைவரைச் சந்திப்பது இராஜதந்திர வழக்கம்.
இவ்வாறான ஒரு நிகழ்வு இடம்பெற்றதே தவிர, தென்னாபிரிக்கத் துணை ஜனாதிபதி இலங்கை வரவில்லை என்று அவர் தெரிவித்தார்.
இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில், சிறில் ரமபோசா தங்கியிருந்தபோது, மனித உரிமைகள் சட்டத்தரணி ரட்ணவேல், அவரைச் சென்று சந்தித்துப் பேசியதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கீரனை வீழ்த்தியது சென்.லூசியஸ்

யாழ்ப்பாணம், செப். 3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் நக்கீரன் அணியை வீழ்த்திசுப்பர் 8 அணிகளுக்குள் இடம் பிடித்துக் கொண்டது மன்னார் சென்.லூசியஸ் விளையாட்டுக்கழகம்.
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தின் முதல் 10 நிமிடங்களும் அசத்தலாகவே அமைந்தது. போராட்ட குணத்துக்கு ஏற்ப கோலெதுவும் பதியப்படவில்லை. 14 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் அணியின் சார்பாக முதல் கோல் பதியப்பட ஆட்டத்தில் ஆதிக்கம் என்ற நிலைமை தோற்றம் பெற்றது. 18 ஆவது, 19ஆவது நிமிடங்களில் மேலும் இரு கோல்கள் சென்.லூசியஸ் சார்பாக பதியப்பட வெற்றிக்காற்று லூசியஸின் பக்கம் பலமாக வீசத் தொடங்கியது. இரு அணிகளாலும் மேலதிக கோல்கள் பதியப்படாத நிலையில் 3-0 என்ற லூசியஸின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவடைந்தது.
இரண்டாம் பாதியிலும் லூசியஸின் ஆதிக்கம் இருக்கத்தான் செய்தது. ஆட்டத்தின் ஆரம்பத்துக்கும் ஆட்டத்தின் முடிவுக்கும் சிறிதேனும் சம்மந்தம் இருக்கவில்லை. இறுதியில் 5:0 கோல் கணக்கில் மன்னார் சென்.லூசியஸ் அணி வெற்றி பெற்று



சுப்பர் 8 அணிகளில் ஒன்றாக இடம் பிடித்தது. (ம-108)

## முல்லை வீர,வீராங்கனைகள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், செப். 3
கடந்த மாதம் 30ஆம் திகதி நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற முல்லைத்தீவு மாணவர்களை முல்லை ஆம்ஸ்ரோங் விளையாட்டுக்கழகம் கௌரவித்துள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் சிறப்பு விருந்தினராக ஆம்ஸ்ரோங் கழகத்தின் தலைவர் தர்சிகனும் கலந்து கொண்டனர். (ம-21)

## மருதநிலா அணிக்கு இலகுவெற்றி

மாங்குளம், செப். 3
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரில் ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஆதிக்கம் செலுத்தி அர்ஜிரா அணியை இலகுவாக வீழ்த்தியது மருதநிலா அணி.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் மருதநிலா அணி அனல் பறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முயற்சிக்கு கிடைத்த பயனாக 19வது நிமிடத்தில் மருதநிலாவின் வீரர் கதிரவன் கோலை அடித்து கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். விடுவதாக வில்லை அல்ஜிரா அணி. அடுத்த நிமிடத்திலேயே பழிதீர்க்க ஆட்டம் சமநிலையானது. மருதநிலாவின் வீரர் சாமுவேல் 23ஆவது, 30 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட முதல் பாதியின் முடிவில் 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது மருதநிலா.
இரண்டாம் பாதியில் அல்ஜிராவின் வீரர்கள் இருவர் மஞ்சள் அட்டை எச்சரிக்கை வாங்கியதுதான் மிச்சம். கோல்கள் எதிலும் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்லது மருதநிலாவின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்யவோ அவர்களால் முடியவில்லை. 70ஆவது நிமிடத்தில் ஆட்டத்தின் இறுதி கோலும் மருதநிலா சார்பாக பதியப்பட முடிவில் அந்த அணி 4-1 என்ற கோல் கணக்கில் இலகுவெற்றிபெற்றது. (ம-422)

## இன்றைய மோதல்கள்

***ஏ.எல். வி.கழகத் தொடர்***

யாழ்ப்பாணம், செப். 3
அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சஸ் அணி மோதவுள்ளது.

***பண்டாரவன்னியன் கிண்ணத் தொடர்***

வவுனியா லீக்கின் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் பண்டரவன்னியன் வெற்றிக் கிண்ணத்திற்கான 7 அணிகள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானதில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதவுள்ளது. (ம-23-422)

***கழுகுகள் வி.கழகத்தொடர்***

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை ஆதி சக்தி விளையட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

## பல்கலைக்கழக வலைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், செப். 3
அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான நடப்பு வருடத்துக்கான வலைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 5ஆம் (சனிக்கிழமை), 6ஆம் (ஞாயிற்றுக்கிழமை) திகதிகளில் யாழ். பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.
குறித்த தொடரின் முதல் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பியும் இரண்டாம் நாள் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)



# சென்.பற்றிக்ஸ் - யாழ்.மத்தி இறுதியில் இன்று மோதல்



யாழ்ப்பாணம், செப். 3
யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடுசெய்யப்பட்ட அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்த்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகள் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.
நேற்று புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் சென்யற்றிக்ஸ்கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மோதிக் கொண்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது. மத்தியின் உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது. (ம-23)



## போராடி வென்றது கலைமதி

யாழ்ப்பாணம், செப். 3
அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதை பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து அராலி அண்ணா அணி மோதிக் கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## றேஞ்சர்ஸ் எதிர் விண்மீன் அரையிறுதியாட்டம் இன்று





யாழ்ப்பாணம், செப். 3
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டமொன்று இன்று வியாழக்கிழமை மின்னொளியில் இடம் பெறவுள்ளது.
அரையிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதுவுள்ளது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் 200 இலக்குகள் என்ற மைல் கல்லை எட்டியுள்ளார் இந்தியாவின் வேகப் பந்து வீச்சாளர் இசாந் சர்மா. இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட்டின் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தில் மத்தியூஸின் இலக்கை வீழ்த்தியதன் மூலமே அவர் இந்த மைல் கல்லை எட்டினார். (ம)


# இந்தத் தொடரையாவது கைப்பற்றுமா ஆஸி.

## இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர் இன்று

இங்கிலாந்து –ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த ஆசஸ் தொடரை 3–2 என்ற கணக்கிலும் ரி–20 தொடரை 1–0 என்ற கணக்கிலும் கைப்பற்றியது இங்கிலாந்து. இதனால் இந்தத்தொடரையாவது ஆஸ்திரேலியா கைப்பற்ற வேண்டும் என்ற அழுத்தம் ஏற்பட்டுள்ளது. அணியின் முன்னாள் வீரர்கள், சொந்த ரசிகர்கள், சொந்த நாட்டு ஊடகங்கள் என்று அத்தனை தரப்பினரதும் வெறுப்பை வாரிக் குவித்திருக்கும் ஆஸ்திரேலியா தன் மீதான விமர்சனங்களை துடைக்க இந்தத் தொடரை பயன்படுத்திக்கொள்ள முனைப்புக்காட்டும். அதேநேரம் கிளார்க் ஓய்வு பெற்ற நிலையில் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார் சிமித். சிமித்தின் தலைமை இங்கிலாந்தை வீழ்த்தக்கூடிய வகையில் முதிர்ச்சி பெற்றிருக்குமா என்பது ஆஸியின் பக்கம் உள்ள பலவீனம்.

இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது ஆட்டம் இன்றும் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 5ஆம் திகதியும் (சனிக்கிழமை) மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 8ஆம் திகதியும் (செவ்வாய்க் கிழமை) நான்காவது ஆட்டம் எதிர்வரும் 11ஆம் திகதியும் (வெள்ளிக்கிழமை) ஐந்தாவது ஆட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதியும் (ஞாயிற்றுக் கிழமை) நடைபெறவுள்ளன. (ம)




## மீண்டும் வருவேன்

எனது பந்துவீச்சை எளிதில் கையாள்வதில் டோனி, சேவாக் இருவரும் மிகவும் சிறந்தவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கையின் சுழற் பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ்.

2008 – 2011 ஆண்டு வரை தனது மாயாஜால சுழலால் எதிரணியை மிரட்டிய அஜந்த மெண்டிஸுக்கு அதன் பிறகு அணியில் ஒரு நிரந்த இடம் கிடைக்கவில்லை. இந்த நிலையில் மீண்டும் அணிக்குத் திரும்புவது தொடர்பாக மெண்டிஸ் கொடுத்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:– நான் விரலின் மூலம் சுழற்பந்தை சிறப்பாக வீசக் கற்றுக் கொண்டேன். இது எனக்கு பல வழிகளில் உதவியாக இருந்தது. நான் ஒருநாள் மீண்டும் அணிக்கு திரும்புவேன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதே சமயம் எதையும் இழந்துவிட்டதாக நினைக்கவில்லை. ஹேரத் தனது பணியை சிறப்பாக செய்து வருகிறார். அனைத்து வீரர்களுக்கும் நான் பந்து வீசி இருக்கிறேன். இதில் டோனி, சேவாக் என் பந்தை சிறப்பாக சமாளிப்பர். அதிலும் சேவாக்கிற்கு எதிராக ஒரு தவறான பந்து வீசப்பட்டு விட்டாலும் அது மைதானத்திற்கு வெளியில்தான் இருக்கும் என்றார். (ம)



## நேர்செற்றில் முன்னேறினார் ஜோகோவிக்

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ்தொடரான அமெரிக்க ரென் னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான ஜோகோவிக் நேர் செற்களில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஜோகோவிக் தனது முதலாவது சுற்றில் பிரேசிலை சேர்ந்த சவுசாவை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிக் 6–1, 6–1, 6–1 என்ற நேர் செற் கணக்கில் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் குரோசியாவின் சிலிச், ஸ்பெயினின் டேவிட் பெரர், கனடாவின் ரோஸ்னிக், பிரான்ஸின் சோங்கா ஆகியோர் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்கள். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
MR. V. JEGAN (Trained in France - 2007,
University இல் French )
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 French
0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. | TP: 021 3202973 | சாவகச்சேரி.
Bus நிலையம் → 100M → பலாலி வீதி → FLCentre

பணிநிலை வேண்டுகை
*. புத்தகம் கட்டுநர் - பெண் (குறைந்தது ஒரு வருட அனுபவம்.
*. கணினி ரைப்பிங் தெரிந்த பெண் (விரைவாக ரைப் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
கிழமை நாள்களில் காலை 8.00 - 9.00 மணிக்கு இடையில் நேரில் வரவும்
"சிவரஞ்சனம்"
பலாலி வீதி, கோண்டாவில். T.P: 077 3068982 (62661) (10)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகளுக்கான பதிவுகள் 05.09.2015 வரைமட்டும்!
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
"உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஓரேயொரு பயிற்சிமையம்."
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313 077 621 4567

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
af பிரெஞ்சு மொழி
ஏன் AFஇல் FRENCH கற்கவேண்டும்?
• உலகம் முழுவதும் பிரெஞ்சு கற்பதற்கு 1883 இல் PARIS இல் நிறுவப்பட்ட மிகப் பெரிய சர்வதேச நிறுவனம் AF. 136 நாடுகளில் 1040 கிளைகள் (இலங்கையில் கொழும்பு, கண்டி, மாத்தறை, காலி & யாழில் 1976 முதல்).
• இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் ஒரே நிறுவனம் AF.
• பிரான்ஸ் நாட்டு ஆசிரியர் & யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்.
• சர்வதேச நிறுவனமொன்றின் CERTIFICATESஐ பெறுங்கள். இலங்கையில் AF மட்டுமே INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)ஐ வழங்குகின்றது. DELF A1 பரீட்சை: AF மாணவர்களுக்கு Rs.3850. ஏனையோருக்கு Rs.9000.
• பிரெஞ்சுமொழிபெயர்புகள். VISA FORM நிரப்பித்தரப்படும்.
• யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார்கள்.
• யாரும் படிக்கலாம். வயதெல்லை இல்லை.
BEST PLACE IN SRI LANKA
13.09.15 சனி, ஞாயிறு 11-1pm இன்றே பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
குறிப்பு :Embassy, International என்ற சொற்களை தவறாக பயன்படுத்தும் தனிநபர் களிடம் விழிப்பாக இருங்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கைநெறிகள்
Banking courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: GCE O/L 6 passes with 5 credits
கணக்காய்வாளர் கற்கைநெறிகள்
Chartered Accounting courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: GCE A/L 3 passes
பதிவுகளை உடன் மேற்கொள்வும்
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
Tp. 0212223382
0212229149




# விலகினார் மரீனா வென்றார் ஹெலப்

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ்தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் எதிர் வீராங்கனையின் திடீர் விலகலால் ஆட்டத்தை முழுவதுமாக முடிக்காமல் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் ஹெலப். குறித்த ஆட்டத்தில் ஹெலப்பை எதிர்த்து மோதினார் நியூஸிலாந்தின் சிமோனா. இதில் ஹெலப் 6-2, 3-0 என்ற கணக்கில்இருந்தபோது மரினா காயம் மற்றும் தசைப்பிடிப்பால் விலகினார். இதனால் ஹெலப் வென்றதாக அறிவிக்கப்பட்டது.(ம)

# பெடரர், முர்ரே இரண்டாவது சுற்றுக்குள்

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ்தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் பெடரர், முர்ரே ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

தரப்படுத்தலில் 2ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் 6-1, 6-2, 6-2 என்ற நேர் செற்கணக்கில் ஆர்ஜென்ரினாவின் லியானர்டோ மேயரை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். தரப்படுத்தலில் 3ஆம் நிலைவீரரான இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 7-5, 6-3, 4-6, 6-1 என்ற செற் கணக்கில் ஆஸ்திரேலிய வீரர் கைரோஜசை வீழ்த்தினார். (ம)





# வீணான மத்தியூஸின் சதங்கள்



இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் சதம் அடித்தாலே அணிக்கு ராசி இருக்காது போலும். இந்தியாவுக்கு எதிரான இறுதி டெஸ்டில்அணியை காப்பாற்றகடுமையாகப் போராடிய மத்தியூஸ் கடைசியில் 110 ஓட்டங்களில் வீழ்ந்தார். அவருக்கு இது 7ஆவது சதமாகும்.

இந்த 7 சதங்களில் 6 சதங்களில் (3 தோல்வி, 3 சமநிலை) இலங்கை அணிக்கு வெற்றி கிடைத்ததில்லை. நேற்று முன்தினம் முடிவடைந்த இந்தியத்தொடரில்எடுத்த 2 சதங்களும் இலங்கை அணிக்கு வெற்றியைக் கொடுக்கவில்லை. (ம)

# நடாலின் வெற்றிகள் தொடருமா?

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ்தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. சமீபகாலமாக சொதப்பிவரும் ரபேல் நடால் இந்தத்தொடரில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தரப்படுத்தலில் 8ஆவது இடத்திலுள்ள நடால் முதல் சுற்றில் குரோசியாவை சேர்ந்த போர்னா கோரிக்கை சந்தித்தார். இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு செற்களையும் 6-3, 6-2, என்று கைப்பற்றிய நடால் மூன்றாவது செற்றை 4-6 என்று இழந்தார். சரிவில் இருந்து மீண்டு நான்காவது செற்றை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றியதன்மூலம் 3-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறினார். (ம)



# கோக்லிக்கு கவாஸ்கர் பாராட்டு

இலங்கைக்கு எதிரான தொடரைக் கைப்பற்றிய இந்திய அணித்தலைவர் கோக்லியை முன்னாள் இந்திய அணியின் தலைவர் கவாஸ்கர் மிகையாகப் பாராட்டியுள்ளார்

கோக்லி தொடர்பாக கவாஸ்கர் தெரிவித்ததாவது 22 ஆண்டுகளுக்கு பிறகு இலங்கையில் டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணியை பாராட்டுகிறேன். தலைமைத்துவத்தில் விராட் கோக்லி மிகவும் சிறப்பாக செயல்பட்டார். அவர் செயல்திறனுள்ள தலைவர் ஆவார். அவர் தனது முடிவில் அபாரமாக செயல்பட்டு எதிர் அணிக்கு அதிர்ச்சிகளைக் கொடுத்தார். இந்தத் தொடரில் இசாந்த் சர்மாவின் பந்து வீச்சில் மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டது. அவர் தனது கோபத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.